# நேசம் மட்டும் நெஞ்சினிலே



முத்துலட்சுமி ராகவன்

# நேசம் மட்டும் நெஞ்சினிலே

---

## 1



பச்சை வர்ணம் அடித்த காம்பவுண்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் பிரசன்னா.. வீட்டின் முன்னால் இருந்த கொய்யா மரத்தின் மீதிருந்து...

''அண்ணா.. என்னைக் கீழே இறக்கி விடேன்..'' என்ற குரல் கேட்டது.

அண்ணாந்து பார்த்தான்... கொய்யா மரத்தின் கிளையில் பாவாடையின் விளிம்பில் கொலுசு அணிந்த பாதங்கள் மட்டும் தெரிந்தன...

''எங்கே இருக்கிறாய் வாசவி...'' என்று கொய்யா மரத்தின் இலைகளுக்கு இடையே பார்வையால் துழாவிய வண்ணம் அவன் வினவினான்.

''இதோ.. இங்கே..'' மரத்தின் இலைகளுக்கு இடையே இருந்து ஒரு நிலவு முகம் வெளிப்பட்டது.

அழகிய பெரிய விழிகளுடன்... இரட்டைப் பின்னலை முன்னால் போட்டு.. தாவணியை இழுத்துச் செருகி.. கொய்யா மரத்தின் கிளையினில் அமர்ந்திருந்தாள் வாசவி.

பிரசன்னாவிற்கு அவளைக் கண்டதும் சிரிப்பு வந்து விட்டது.. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல்.. அவளைப் பார்த்து அரட்டினான்.

''ஏய்... வானரம்... எப்படி மரத்தினில் ஏறினாய்..?''

''ஸ்டூலைப் போட்டு ஏறினேன் அண்ணா.''

''அந்த ஸ்டூல் எங்கே...?''

''நான் ஏறிய வேகத்தில் காலால் உதைத்தேனா.. அது.. அதோ.. அங்கே விழுந்து கிடக்கிறது...''

வாசவி சுட்டிக் காட்டிய திசையில் ஒரு ஸ்டூல் படுக்கைவாக்கில் கிடந்தது...

''மரத்தில் ஏறிவிட்டாய்.. சரி... எப்படி இறங்குவதாக உத்தேசம் பண்ணியிருந்தாய்..?''

''நான் எந்த உத்தேசமும் வைத்துக் கொண்டு மர மேறவில்லை அண்ணா.''

''வெரிகுட்.. இறங்குகிற ஐடியாவே இல்லைன்னு சொல்லு.. ஆக்சுவலா வாசவி.. நீ இருக்க வேண்டிய இடம் மரம்தான். கரெக்டாகத்தான் உன் இருப்பிடத்தை நீ தேர்வு செய்திருக்கிறாய்.. அங்கேயே இரு...''



''அண்ணா.. ப்ளீஸ்.. என்னை இறக்கி விடேன்.''

''நீ இறங்கி வந்து ஆகப் போவதென்ன சொல்லு.''

''ஏன் இல்லை..? நாளைக்கு உனக்குக் கல்யாண மானால் நாத்தனார் முடிச்சைப் போட நான் உனக்கு வேண்டாமா..?''

பிரசன்னாவிற்குத் தங்கையின் சாதுர்யத்தைக் கண்டு இன்னும் சிரிப்பு அதிகமாகியது... ஆனால்... சிரிப்பைக் கொஞ்சம்கூட வெளிக்காட்டிக் கொள்ளாமல்.. முகத்தைக் கடுமையாக வைத்துக் கொள்ள முயன்றான்.

''நான் சீர்திருத்தக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருக்கிறேன்.. அதனால் இந்த நாத்தனார் முடிச்சைப் போட நீ ஒன்றும் சிரமப்பட்டுக் கீழே இறங்கி வர வேண்டாம்.. மரத்தின் மேலேயே வாசம் செய்.''

''அப்படியெல்லாம் அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வந்து விடாதே அண்ணா... ஒழுங்காய் உன் பெண் டாட்டியின் கழுத்தில் தாலியைக் கட்டி விடு.''

''ஏனாம்..?''

''அப்போதுதான் அவள் நீ எது செய்தாலும்.. நீ கட்டிய தாலியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு... ஆயிரம் தான் இருந்தாலும்.. இவர் எனக்குத் தாலிகட்டிய புருசன்னு பொறுத்துப் போவாள்...''

''இல்லைன்னா...''

''நீ சீர்திருத்தம் பேசுவதைப் பார்த்துவிட்டு... அவள் உனக்குச் சம உரிமை தரலாமா.. இல்லை வேண்டா மான்னு யோசிக்கப் போகிறாள். அப்புறம்.. உன் கதை கந்தல்தான்...''

"இதைப் பாருடா... எனக்கு அவள் சம உரிமை தருவாளாமா? இது எங்கே நடக்குது."

"நிறைய இடங்களில் நடக்குது. நீ முதலிலேயே மூன்று முடிச்சைப் போட்டு... நன்றாக நினைவில் வை அண்ணா.. அந்த நான்காவது முடிச்சான நாத்தனார் முடிச்சை நானும் போட்டு.. கைக்குள் அடக்கி வச்சிக் கிட்டேன்னு வை... நிம்மதியாக வாழ்வாய்.. இல்லையின்னா..."

"இல்லையின்னா...?"

"ம்ஹூம்.. உன் பாடு திண்டாட்டம்தான். நீ சிகரெட் பிடித்தால் அவளும் சிகரெட் பிடிப்பாள். ஏன்னா.. நீதான் சம உரிமை தந்திருக்கிறாயே..."

"நான்தான் சிகரெட் பிடிக்க மாட்டேனே..."

"ஒருவேளை... உனக்குப் பிடிக்கணும்னு தோணினால்.. என்ன செய்வே?"

"எதுவும் செய்ய மாட்டேன்."

"நீ சுத்த வேஸ்ட் அண்ணா. சிகரெட் பிடிக்க மாட்டாய்.. தண்ணி அடிக்க மாட்டாய்.. என் பிரெண்ட்ஸை சைட்டும் அடிக்க மாட்டாய்.. இப்படி சைவப் பட்சியாய் நீ இருப்பது எனக்குத்தான் ஷேமாக இருக்கிறது..."

"நான் யோக்கியனாய் இருந்தால்.. உனக்கென்ன வருத்தம் வாசவி..?"

"பின்னே... இருக்காதா? என் பிரண்ட்ஸ்களில் யாரையாவது நீ கவிழ்த்தால்.. அவள் என்னிடம்.. உனக்காகத் தாஜா செய்வாள். நானும் பிகு பண்ணிக் கொண்டு அவளை வேலை வாங்குவேன்... ம்ஹூம்.. எனக்கொரு



அடிமை உன் புண்ணியத்தால் கிடைத்திருப்பாள். அதற்கு ஒரு வழியும் இல்லாமல் பண்ணிக் கொண்டிருக்கிறாய். நீ இவ்வளவு ஹேண்ட்சம்மான ஹீரோவாக இருந்து எனக்கு என்ன பிரயோஜனம்? ஒன்றும் யூஸ் இல்லை..."

"உன் வாய்க்கு.. உன்னைக் கீழேயே இறக்கி விடக் கூடாது.. வாயாடி.. கொஞ்சமாவது அண்ணன் என்ற பயம் இருக்கிறதா உனக்கு?"

"பயமா..? உன்னிடமா? எதற்கு...? ஹா... ஹா..."

தங்கையின் மலர்ந்த சிரிப்பு பிரசன்னாவையும் ஒட்டிக் கொள்ள.. அவன் வாய்விட்டுச் சிரித்தான். பின் தங்கையை இறக்கிவிடக் கை நீட்டினான்.

"கீழே இறங்கு..."

"முதலில் நீ இந்தக் கொய்யாப் பழங்களைப் பிடி."

வாசவி.. தன் தாவணி முந்தானையை விரித்து நீட்டினாள். அதை எப்படி வாங்கிக் கொள்வது என்று தெரியாமல் பிரசன்னா திகைத்தான்.

"அம்மா.. அம்மா.." வீட்டுக்குள் திரும்பிப் பார்த்துச் சத்தம் கொடுத்தான்.

"அடடா.. ஒரு நிமிசம்.. உள்ளே சமையல் வேலையை நிம்மதியாய்ப் பார்க்க முடியல... என்னடா..." என்றபடி திலகம்.. தலையை மட்டும் வெளியே நீட்டிக் குரல் கொடுத்தாள்.

"இங்கே கொஞ்சம் வாங்க..."

"அடுப்பில் எண்ணெய்ச் சட்டி இருக்குடா."

''இங்கே மரத்தில்.. நம்ம வீட்டுக் குரங்குக் குட்டி இருக்கும்மா...''

''குரங்குக் குட்டியா...? எங்கேயிருந்துடா வந்திருக்குது?''

திலகம் ஆச்சரியத்துடன் வினவியவாறு.. மரத்திற்குக் கீழே வந்து நின்று அண்ணாந்து பார்த்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''அடிப்பாவி.. வாசவி.. மரத்திற்கு மேலே என்னடி பண்றே...''

''கொய்யாப் பழம் பறித்தேன் அம்மா.''

''ஏன்டி.. யாராவது உன்னை இப்படி மரத்திற்கு மேலே பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள்?''

திலகம் அங்கலாய்க்க.. பிரசன்னா சாவதானமாய்ப் பதில் கூறினான்.

''என்ன நினைத்துக் கொள்வார்கள்... நான் சொன்னது போல.. குரங்குக் குட்டி வந்திருக்குதுன்னு நினைச்சுக்குவாங்க.''

''அண்ணா.. வேண்டாம்.. என்னிடம் வைத்துக் கொள்ளாதே.''

''எப்படி மிரட்டுகிறாள் பாருங்கம்மா. அப்படியே சொர்ணாக்காதான்...''

''ஆமாம்டா.. ரவுடி ராக்கம்மா ரேஞ்சிற்குத்தான் மிரட்டுகிறாள்.''

''என்னம்மா நீங்க.. அண்ணனுக்கே சப்போர்ட் பண்ணுகிறீங்க..?''



''அவன் என்ன உன்னைப் போல.. மரத்தின் மேலேயா ஏறி உட்கார்ந்திருக்கிறான்?''

''அப்படி ஏறினால்தான் தேவலையே.''

''என்னடி சொன்னாய்..?''

''பின்னே என்னம்மா.. இப்படி ஓவராய் நல்ல பிள்ளை போல் பிலிம் காட்டினால் எப்படி? என் பிரண்ட்ஸெல்லாம் இவனை.. அதோ உன் அண்ணன் விவேகானந்தர் வருகிறார் பாருன்னு கிண்டலடிக்கிறாங்க...''

''என்னது... விவேகானந்தரா.. டேய் பிரசன்னா... கடைசியில் வயசுப் பெண்கள் எல்லாம் உன்னைப் பார்த்து இப்படிக் கிண்டலடிக்கிறது போல ஆகிவிட்டாயேடா...''

திலகம் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்து விட்டாள். பிரசன்னா பொய்க் கோபத்துடன் தங்கையை முறைத்தபடி.. வீட்டுக்குள் செல்லப் போவது போல் பாவனை காட்டினான்.

''என்னையா கலாய்க்கிறாய்.. இரு.. உன்னைக் கீழே இறக்கி விடப் போவது யாருன்னு பார்க்கறேன்.''

''அப்போ நீ இறக்கி விட மாட்டாயா?''

''ஊஹூம்.. விவேகானந்தர் பாறை மேல் உட்கார்ந்து கொண்டு தியானம்தான் பண்ணுவார். மரத்திலிருந்து இறக்கியெல்லாம் விடமாட்டார்.''

''பார் அண்ணா.. உனக்கு என் தயவு அவசியம் தேவை.''

''எதற்கும்மா..?''

"நாளைக்கு உனக்குப் பெண் பார்த்தால் உன்னைப் பற்றி நல்ல விதமாக நான்கு வார்த்தைகள் பேச.. உனக்கொரு தங்கை வேண்டாமா..?"

"எதற்கும்மா.. நீ அவங்களிடமும் வந்து என்னை விவேகானந்தர்ன்னு சொல்வதற்கா...? ஆளை விடு தாயே."

"அப்படியெல்லாம் விட முடியாது. அட நல்ல வார்த்தை சொல்லத்தான் நான் உனக்கு வேண்டாம்.. மொட்டைக் கடுதாசி போடாமலிருக்கவாவது நான் வேண்டுமில்லையா?"

"உன்னை... அண்ணனை என்னடி சொல்லி மிரட்டுகிறாய்?"

திலகம் கையை ஓங்கி மகளை அடிக்கப் போனாள். பிரசன்னா சிரித்துக் கொண்டே தாயைத் தடுத்தான்.

"முதலில் அவள் தாவணி முந்தானையில் இருக்கும் கொய்யாப் பழங்களை வாங்குங்கம்மா."

திலகம்.. தன் சேலை முந்தானையை விரிக்க.. வாசவி.. தன் தாவணி முந்தானையில் இருந்த கொய்யாப் பழங்களைக் கொட்டினாள்.

"அண்ணா.. இப்போது இறக்கிவிடு..."

பிரசன்னாவின் தோள் பிடித்து.. கீழே குதித்த வாசவி.. ஐந்தே கால் அடி உயரத்தில்.. ஒல்லியான உடல்வாகோடு இருந்தாள். ஆறடி உயரத்தில் இருந்த தமையனின் தோளில் செல்லமாய்த் தலை சாய்த்தும் கொண்டாள்.



# 2



அது நேரம் வரை தன்னுடன் வம்பிழுத்து விட்டு.. இப்போது சலுகையுடன் தன் தோள் சாய்ந்து நிற்கும் தங்கையை.. கொள்ளைப் பிரியத்துடன்.. அணைத்துக் கொண்டான் பிரசன்னா.

"அடேங்கப்பா.. பெரிய பாசமலர் சிவாஜியும்.. சாவித்திரியும்ன்னு உங்க இரண்டு பேருக்கும்.. மனதுக்குள் நினைப்பா? இதுவரை எலியும்.. பூனையுமாய் வழக்கடித்து விட்டு.. இப்போ.. மலர்ந்தும் மலராமல்ன்னு பாட்டு சீன் காட்டுகிறீங்களே... இப்படி அநியாயம் பண்ணினால்.. வந்த புயல் போக மாட்டேன்னு அடம் பிடிக்காமல் என்ன செய்யும்? கொட்டுகிற மழைதான் எப்படி நிற்கும்...?"

"ஏம்மா.. ஒரு வாரமாய் விடாமல் மழை பெய்தால் அதற்கு நாங்களா பொறுப்பு...? என்னவோ மழையின் புண்ணியத்தால்.. எனக்கும் நான்கு நாட்கள் லீவு கிடைத்தது. அது உங்களுக்குப் பொறுக்கவில்லையா?"

"ஏன்டி சொல்ல மாட்டாய்.. லீவு விட்டு.. உன் காலேஜ் லெக்சரர்கள் உன்னிடமிருந்து இந்த நான்கு நாட்களும் தப்பித்துக் கொண்டு விட்டார்கள். நானில்ல.. உன்னை வீட்டில் வைத்துக் கொண்டு.. இருபத்து நான்கு மணி நேரமும் எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன்."

"அம்மா.. இது அநியாயம்.. கொட்டும் மழையில் வீட்டை விட்டு நகர முடியாமல்.. கொட்டு.. கொட்டுன்னு

முழித்துக் கொண்டு பொழுது போகாமல் விழித்துக் கொண்டிருப்பது நான்தான்.. உங்களுக்கு அடுப்படி.. வீடு.. புருசன்.. பிள்ளைகள்னு ஆயிரம் வேலை இருக்கு.. வெளியே மழை கொட்டினால் உங்களுக்கென்ன.. கொட்டாவிட்டால் உங்களுக்கென்ன... நீங்களாச்சு. உங்க வேலைகளாச்சு... நான்கு சுவர்கள் ஆச்சு.. எனக்குத்தானே தெரியும் என் அவதி...''

''ஆமாண்டி... அடுப்படியையும்... வீட்டையும் கட்டிக் கொண்டு நான் லோல்படுவது உனக்குக் கிண்டலாய்ப் போச்சு இல்ல...''

''என்னம்மா இது.. நீங்க அப்பாவைத்தானே கட்டியிருக்கீங்க? பின்னே... அடுப்படியைக் கட்டிக் கொண்டிருப்பதாய்ச் சொல்லிப் புலம்புகிறீங்களே...''

''டேய் பிரசன்னா... உள்ளே போய் ஊசியையும்... நூலையும் எடுத்துக் கொண்டு வாடா.. இவள் வாயைத் தைத்து விடுவோம்.''

''ஏம்மா.. மழை பெய்கிறதுன்னு காலேஜிற்குத்தான் லீவு விடுகிறாங்க. கவர்ன்மெண்ட் ஆபிஸிற்கு லீவு விடுகிறாங்க. நான் வேலை பார்ப்பது பேங்கில்.. கொட்டுகிற மழையால்.. குடை பிடித்துக் கொண்டு மக்கள் காலையில் பேங்க் திறக்கும்போதே வந்து நின்று விடுகிறாங்க. நானே வேலை பார்த்துக் களைத்துப் போய் வீட்டுக்கு மதியச் சாப்பாட்டை வயிற்றுக்குள் போட்டுக் கொள்ளலாம் என்று வந்தால்.. இவள் மரமேறிப் பரம்பரையின் நினைவில் மரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். நீங்கள் என்னடான்னா.. இவளை வேலை ஏவுவதை விட்டுவிட்டு.. என்னை வேலை ஏவு



கிறீங்க.. ஏன்.. அந்த ஊசியையும்.. நூலையும் இவளை எடுத்துக் கொண்டு வரச் சொன்னால் ஆகாதா..?''

''ஹ.. என் வாயைத் தைக்க.. என்னையே ஊசி.. நூல் எடுத்துக் கொண்டு வரச் சொல்கிறாயா..?''

''பின்னே.. உன் வேலையை நீதானே பார்க்க வேண்டும்.''

''ஹூம்.. நன்றாக இருக்கிறது அண்ணா.. உன் நியாயம்.''

அண்ணனும்.. தங்கையும் வழக்கடித்துக் கொண்டிருக்க திலகம்.. ஏதோ நினைவுக்கு வந்தவளாய்.. கையை உதறிக் கொண்டு..

''அய்யய்யோ...'' என்று பதறினாள்...

''என்னம்மா.. என்ன ஆச்சு..?''

''பிரசன்னா.. நீ மதியச் சாப்பாட்டைப் பற்றிச் சொன்னதும்தான் எனக்கு நினைவுக்கு வருகிறதுடா.''

''எதும்மா..?''

''அடுப்பில் குழம்பு தாளிக்க.. எண்ணெயை ஊற்றிக் கடுகைப் போட்டுவிட்டு.. நீ கூப்பிடவும்.. அப்படியே அதை அடுப்பில் விட்டு விட்டு வந்து விட்டேன்...''

''அடக்கடவுளே... ஏம்மா.. வள்ளுவர் கூப்பிடவும்.. வாசகி அப்படியே இறைத்துக் கொண்டிருந்த.. தண்ணீர் வாளியைக் கிணற்றிலேயே விட்டு விட்டு ஓடி வந்தாங்களாம்.. அதைப் போல் அண்ணன் கூப்பிடவும்.. அடுப்பிலே எண்ணெய்ப் பாத்திரத்தை வைத்து விட்டு.. நீங்க ஓடி வந்து விட்டீங்களா?''

''ஏன்டி.. நானே பதறிக்கிட்டு இருக்கேன்.. நீ கேலி பேசுகிறாயா? அப்படியே வாயில் ஒன்று போட்டு விடு வேன்... ஜாக்கிரதை...''

''என் வாயில் அடிப்பதை விட்டு விட்டு.. அடுப்பில் இருந்த எண்ணெய்ச் சட்டி என்ன ஆனதுன்னு போய்ப் பாருங்க.. இந்நேரம் பாத்திரமே உருகி.. காணாமல் போயிருக்கும்.. அம்மா.. வாசுகி.. வள்ளுவர் கூப்பிடவும் ஓடி வந்ததால் அவங்க நீர் இறைத்த வாளி கிணற்றிற் குள் விழாமல் தப்பித்தது. ஒருவேளை நீங்க அப்பா கூப்பிடவும் ஓடோடி வந்திருந்தீங்கன்னா பாத்திரம் தப்பித்து இருக்க சான்ஸ் இருக்கிறது. ஆனால் நீங்க.. அண்ணன் கூப்பிட்ட குரலுக்குத்தானே.. ஓடோடி வந்தீங்க. அதனால்.. பாத்திரம் தப்பிக்க நோ சான்ஸ்...''

''உன்னை... இருடி.. அப்புறம் கவனித்துக் கொள் கிறேன்..''

திலகம்.. வீட்டை நோக்கி ஏறக்குறைய ஓடினாள்.

''அம்மா.. நான் பறித்த கொய்யாப் பழம்...'' என்றபடி வாசவி அவள் பின்னாலேயே ஓடினாள்.

தங்கையின் குறும்பை.. தலையை ஆட்டி ரசித்த பிரசன்னா அவர்கள் பின்னாலேயே விரைந்தான்.

மூன்று பேரும் வீட்டிற்குள் நுழையும் போதே.. தீய்ந்த வாடை வருகிறதா என்று மூக்கை உறிஞ்சிக் கொண்டனர். ஆனால்.. நாவை ஊற வைக்கும்.. சமை யலின் மணம் அவர்களது நாசியில் நுழைய.. மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே... சமைய லறைக்குள் பிரவேசித்தனர்.

அடுப்பில் காய்கறிகளைப் போட்டு வதக்கிக் கொண் டிருந்த காளிதாஸ்.. அவர்களைத் திரும்பிப் பார்த்தார்.



''அட.. அப்பா.. சமைக்கிறார்..'' வாசவி ஆச்சரியத் துடன் கூவினாள்.

''நீங்க எப்போ வந்தீங்க...'' திலகம் அவர் கையி லிருந்த கரண்டியை வாங்கிக் கொண்டே வினவினாள்.

''நீங்கள் மூன்று பேரும் கொய்யா மரத்தடியில்.. கூட்டு மாநாடு போட்டுக் கொண்டிருக்கும்போதே வந்து விட்டேன்... வீட்டுக்குள் நுழைந்தால்.. எண்ணெய் காயும் வாசனை வந்தது. சரி.. வேலையை நாம் முடிப் போம்.. நீங்கள் எல்லோரும் மாநாட்டை முடித்துவிட்டு வரும்போது.. பசியாக இருப்பீர்கள்.. சாப்பாடு ரெடியாக இருக்க வேண்டாமா என்று நினைத்துக் கரண்டியைக் கையில் பிடித்துக் கொண்டு களத்தில் இறங்கி விட்டேன். சமையல் ரெடி.. வாங்க சாப்பிடலாம்.''

''நீங்க முதலில் அடுப்பை விட்டு விலகுங்க.. இனி நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''என்னத்தைப் பார்க்கப் போகிறீங்கம்மா.. அதுதான் அப்பா சமையலை முடித்து விட்டாரே. என்னென்ன மெனுன்னு பார்க்கப் போறீங்களா..?''

''இந்தச் சின்னக் குட்டியின் வாயைத் தைக்கணும்னு நானும் ரொம்ப நாளாகச் சொல்கிறேன்.. ஒருவராவது காதில் போட்டுக் கொள்கிறீங்களா.''

''ஏம்மா.. நானா சின்னக் குட்டி? டிகிரி தேர்ட் இயர் படிக்கிறேன். உங்க பாஷையில் சொல்லப் போனால் எனக்கு ஏழு கழுதை வயதாகிறது.. இன்னும் சின்னக் குட்டிங்கறீங்களே.''

''ஊம்.. பெண் வளர்த்தியோ... பீர்க்கங்காய் வளர்த்தி யோன்னு சொல்வாங்க.. நீயும்.. வளர்ந்து.. வாலிபமா

நிற்கிற.. உன்னை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்கணுமேன்னு நினைக்கும்போதே மலைப்பாயிருக்கு..."

"என்மேல் அவ்வளவு பிரியமா அம்மா?"

"அதெல்லாம் ஒரு கழுதையும் இல்லை..."

"பிரியத்துக்கும்.. கழுதைக்கும் என்னம்மா சம்பந்தம்..?"

"அது என்ன கழுதையோ எனக்குத் தெரியாது.. உன்னை ஒருத்தன் கையில் பிடிச்சுக் கொடுத்த பின்னால்.. அவனை நீ படுத்துகிற பாட்டில்.. அவன் எங்களை என்ன பாடுபடுத்தப் போகிறானோன்னு நினைக்கும்போதே மலைப்பாயிருக்கு."

"அம்மா..."

வாசவி செல்லமாய்ச் சிணுங்கிக் கொண்டு.. சிறு குழந்தை போல் கால்களைத் தரையில் உதைத்துக் கொண்டாள்.. காளிதாஸ், "ஹா.. ஹா.."வென்று சிரித்தபடி மகளின் தோளைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டார்.

"அப்பா.. அம்மா சொல்வதைக் கேட்டிங்களா."

"அவள்.. விளையாட்டுக்குச் சொல்கிறாள்ம்மா.."

"எது எப்படியோ.. எனக்குத் தெரியாது.. ஆனால் அண்ணனின் கல்யாணத்திற்கு முன்னால்.. நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்."

"அட.. இது எதற்காம்?"

பிரசன்னா.. ஆச்சரியத்துடன் தங்கையைப் பார்த்தான். சமைத்து வைத்திருந்த உணவு வகைகளை.. பாத்திரத்தில் நிரப்பி.. டைனிங் டேபிளில் பரத்திக் கொண்டிருந்த.. திலகம் கூட மகனைக் கேள்விக் குறியாய் நோக்கினாள்.



"வேறு எதற்கு..? நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் விட்டால்.. உன் பெண்டாட்டி.. நாத்தனார் தொந்தரவில்லாமல் நிம்மதியாய் இருப்பாளில்லையா..? அதற்கு நான் விட்டு விடுவேனா...?"

"என்னே.. உன் நல்ல எண்ணம்."

"பின்னே.. என்னை என்னவென்று நினைத்தாய்..? உன் பெண்டாட்டியை ஒரு கை பார்க்காமல்.. நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு போவதாக இல்லை..."

"வீர சபதம் எடுத்து விட்டாய்.. அதை அப்படியே மெயின்டெயின் பண்ணு. அம்மா! நீங்கள் எனக்குச் சாதத்தைப் போடுங்கள்.. பேங்கிற்கு நேரமாகிறது."

அவர்கள் மூவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திலகம்.. கணவரைப் பார்த்து,

"கடை வீதியில் கூட்டமிருக்கா.. மழையாய் இருக்கே.." என்று வினவினாள்.

"ம்ம்.. மழை பெய்வதால் வியாபாரம் கொஞ்சம் டல் தான்."

"மளிகைக் கடையில் எப்படிப்பா.. வியாபாரம் டல்லடிக்கும்..? நீங்கள் இன்னும் அந்தக் காலத்துப் பாணியில் மளிகைக் கடை நடத்துவதை விட்டுவிட்டு.. அழகாய்.. திலகம் டிபார்ட்மென்டல் ஸ்டோருன்னோ.. இல்லை.. திலகா ஷாப்பின்னோ.. நடத்தினால்.. வியாபாரம் மழையாய் இருந்தாலும்.. வெயிலாய் இருந்தாலும்.. ஜோராய் இருக்கும்."

வாசவி.. வாயில் சாதத்தை வைத்துக் கொண்டே பேச.. காளிதாஸ் அவள் பக்கமாய்த் தண்ணீர் தம்ளரை நகர்த்தி விட்டுச் சிரித்தார்.

# 3



'காளிதாஸ் மளிகைக் கடை' என்றால்.. அறந்தாங்கியில் உள்ள அனைவருக்குமே தெரியும். நீண்ட வருடங்களாக.. பெரிய கடை வீதியில் மளிகைக் கடை நடத்தி வருபவர் அவர்.

''சின்னதாகத்தான் இந்த மளிகைக் கடையை ஆரம்பித்தேன். முதலில் ஒரு பெரிய மளிகைக் கடையில் கடைப் பையனாகத்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். என் பதினாறாவது வயதில் நான் சேர்த்து வைத்திருந்த சம்பளப் பணத்தையும்.. என் அம்மாவின் சிறுவாட்டுப் பணத்தையும் போட்டு ஆரம்பித்த கடை இது.. இதிலிருந்து வந்த வருமானத்தில்தான்.. என் தங்கைக்கு நகை போட்டு நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்தேன். என் அம்மாவுக்குக் கடைசி வரை நல்ல வசதியான வாழ்க்கையைக் கொடுத்தேன்... இந்த வீட்டைக் கட்டினேன். உங்கள் இரண்டு பேரையும்.. வளர்த்து.. படிக்க வைத்தேன்.. இப்போது குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம்.. அலங்காரமான கடை



அமைப்பில்லை. என் உழைப்பு... உழைப்பு மட்டுமே காரணம்.''

அடிக்கடி பிள்ளைகளிடம் காளிதாஸ் கூறுவது இது. சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டவர்.. வெளியுலகம் தெரியாத தாயையும்.. சிறுமியாய் இருந்த தங்கையையும் காப்பாற்ற.. பன்னிரண்டு வயதிலேயே மளிகைக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். தொழிலில் உள்ள நெளிவு.. சுளிவுகளைப் பொட்டலம் போட்டுக் கொண்டே கற்றுத் தேர்ந்தவர்.. நான்கே வருடங்களில்.. சொந்தமாய்ச் சின்னதொரு மளிகைக் கடையை அதே கடைத் தெருவில் ஆரம்பித்து விட்டார்...

''அப்போதெல்லாம்.. இவ்வளவு பெரிதாய்க் கடைகள் இல்லை. கடை வீதின்னு பெயர்.. துணிஞ்சு கடை வைத்தேன்.. இன்றைக்கு அறந்தாங்கியில் என் பெயரைச் சொன்னால் யாரும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு வாழ்க்கை நடத்துகிறேன்.. எனக்கு இது போதும்.''

அடக்கமாகச் சொல்லிக் கொள்ளும் காளிதாஸ்.. அப்படி ஒன்றும் எளிய வாழ்க்கை வாழ்பவரல்ல... அறந்தாங்கியின்.. மையப் பகுதியில் வசதியானவர்கள் வாழும் தெருவில்.. மிகப் பெரிய வீட்டைக் கட்டியிருக்கிறார். அருகில் உள்ள அவரது பூர்விகக் கிராமத்தில் வயல்கள் வாங்கிப் போட்டிருக்கிறார். குடும்பத்துடன் வெளியே போய் வர.. சொந்தக் கார் உண்டு.. கணிசமான வங்கிக் கையிருப்பும் உண்டு.

ஆனாலும்.. வாசவி அடிக்கடி அலுத்துக் கொள்வாள்.. ''என்னப்பா நீங்க.. அழுக்காய் ஒரு போர்டு.. காளிதாஸ் மளிகைக் கடைன்னு.. ஒரு 'ஷோ'வே இல்லையே..

இதையே அழகாய் டெகரேட் பண்ணி.. கண்ணாடி ஷோருமில்... திலகா ஷாப்பின்னோ.. இல்லை.. திலகம் டிபார்ட்மெண்டல் ஸ்டோருன்னோ நியான் விளக்கில்.. மின்னுகிற எழுத்தில் போட்டுக் கவர் பண்ணினால் எனக்கு எவ்வளவு பெருமையாய் இருக்கும்!''

''அது ஏன்ம்மா கடைக்கு உன் அம்மாவின் பெயரை வைக்கச் சொல்கிறாய்...? கடையை ஆரம்பித்தது நான். பெயரை வைப்பது உன் அம்மாவின் பெயரையா?''

''போங்கப்பா நீங்க.. உங்களுக்கு உலகமே தெரிய வில்லை.''

''உனக்கு நிறையத் தெரிந்து விட்டதுன்னு நினைப் பாம்மா...''

''நிச்சயமாய் அப்பா.. உங்களை விட அதிகமாகவே எனக்குத் தெரியும்.''

''அப்படியாம்மா.. உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.. நானும் கேட்டுக் கொள்கிறேன்..''

''ஆண்கள் பெயருக்கு அட்ராக்ஷனே கம்மிப்பா..''

''ஓஹோ...''

''அதுவே பெண்கள் பெயர்ன்னால்.. பெயரே இருக்கு மில்ல...''

வாசவி சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. திலகம்.. கரண்டியால் அவள் மண்டையில் ஓங்கி ஒரு போடு போட்டாள்.

''ஏன்டி.. எருமை மாடே.. கொஞ்சமாவது நான் உன் அம்மாங்கற நினைப்பு உன் மனதில் இருக்கா. அட்ராக் ஷனுக்கு என் பெயர் வைக்கணுமாமில்ல...''



திலகா கரண்டியோடு துரத்த.. வாசவி அவளிடமிருந்து தப்ப.. காளிதாசின் முதுகிற்குப் பின்னால் ஒளிந்து கொள் வாள்.

''பாருங்கப்பா.. அம்மாவை..''

''திலகா.. குழந்தையை விடு.''

''இவளா குழந்தை..? எட்டு ஊருக்கு வாய் கிழியுது... குழந்தையாம்.. குழந்தை.''

திலகா பொருமினாலும்.. வாசவியின் துறுதுறுப்பான சுபாவத்தில் அவளுக்குப் பெருமை அதிகம்.

இரவின் தனிமையில் கணவரிடம் அதைச் சொல்லிக் கொள்வாள்.

''என்னதான் சொல்லுங்க. இந்தச் சின்னக் குட்டிக்கு உடம்பெல்லாம் மூளை... எங்கிருந்துதான் இப்படி யோசிக்காமல் வாய் பேசுகிறாளோ.. நாமெல்லாம்.. ஒரு கேள்வியைக் கேட்டு விட்டால் பதில் சொல்ல யோசிப் போம். இவள் டக்கென்று உடனே பதிலைச் சொல்லி விடுகிறாளே.''

காளிதாஸ்.. அதைச் சிரித்துக் கொண்டே ஆமோதிப் பார். அன்று அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும்.. வாசவி வழக்கமான பல்லவியைப் பாடவும்.. காளிதாஸ்.. வழக்கமான பதிலையே சொன்னார்.

''வாசவி... என்னதான் காலம் மாறினாலும்.. நவீன மாய் உலகம் இயங்கினாலும்.. நம்மால் மாற்றிக் கொள்ள முடியாத மறக்க விரும்பாத சில விஷயங்கள் இருக்கத் தான் செய்கின்றன. காதலர் தினத்தைக் கொண்டாடுவ தால்... பொங்கல்.. தீபாவளியை நாம் மறந்து விட்

டோமா..? புதிது.. புதிதாய் உணவு வகைகள் வந்தாலும்.. நம் இட்லி.. தோசையை விட்டு விட நம்மால் முடியுமா..? அது போலத்தான். நானும்.. என் மளிகைக் கடையும்... என் கடையில் சின்ன மாறுதல் வந்தால் கூட என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. என் கடை இப்படித்தான் இருக்கும்.. இதை அப்படியே நீ ஏற்றுக் கொண்டால்தான்.. என் உணர்வுகளை நீ மதிப்பதாக அர்த்தம்.''

''என்னதான் நான் கரைத்துப் பார்த்தாலும்.. நீங்கள் கரையவே மாட்டிங்க அப்பா.''

''அப்ப.. என்னைக் கல்லென்று சொல்கிறாயா?''

''ஊஹூம். வைரம் என்று சொல்கிறேன்.''

வாசவியின் பதிலைக் கேட்டு.. பிரசன்னா வாய் விட்டுச் சிரித்தான். வாசவி அவனை முறைத்தாள்.

''பல் சுளுக்கிக்கப் போகிறது.. ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?''

''ம்ம்.. வெளியே மழை.. கொட்டோ.. கொட்டென்று கொட்டுகிறது. நீயானால் ஐஸ் கட்டியைத் தூக்கி.. அப்பாவின் தலையின் மேல் வைக்கிறாயே...''

''ஊம்.. உனக்குப் பொறாமை.''

''எதற்கு..?''

''நான் அப்பாவிடம் செல்லம் கொஞ்சுவதற்குத் தான்.. வேறு எதற்காம்?''

''நீ அப்பாவிடம் மட்டுமா செல்லம் கொஞ்சுகிறாய்? இந்த வீட்டில் இருக்கும் அத்தனை பேரிடமும்தான் செல்லம் கொஞ்சுகிறாய்.''



''நிச்சயமாய்.. நாளைக்கு வரும் உன் பெண்டாட்டியிடம் செல்லம் கொஞ்ச மாட்டேன்.''

''நாளைக்கே வருகிறாளா..? எனக்குத் தெரியாதே.''

''கேட்டிங்களாம்மா.. என் மகன் தங்கக் கட்டி. சிங்கக் குட்டி.. கல்யாணக் கனவெல்லாம் அவனுக்குக் கிடையாதுன்னு நீங்க.. வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவீங்களே.. உங்கள் மகனுக்கு.. நாளைக்கே.. அவன் பெண்டாட்டி.. இந்த வீட்டுக்கு வர வேண்டுமாம்...''

''ஏய்... வாண்டு.. நான் எப்போது.. அப்படிச் சொன்னேன்?''

காளிதாஸின் முன்னிலையில்.. வாசவி.. போட்டுக் கொடுக்கவும்.. வெட்கத்திலும்.. தர்ம சங்கடத்திலும்.. பிரசன்னாவின் முகம் சிவந்து விட்டது.. அதைப் பார்த்த வாசவி.. விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

''அம்மா.. உங்கள் மகனின் முகத்தைப் பாருங்களேன்.. பெண் பிள்ளை போல் சிவந்து விட்டது. என்னமாய் வெட்கப்படுகிறான்.''

பிரசன்னா அவசரமாய் எழுந்து கைகழுவச் சென்று விட, திலகா சிரிப்பை அடக்கிக் கொண்டு மகளைக் கண்டித்தாள்.

''அவனைப் பாதிச் சாப்பாட்டிலேயே துரத்தி விட்டாயே... பாவம்.. பசியோடு வந்து உட்கார்ந்தான்.''

''அதெல்லாம் நன்றாகச் சாப்பிட்டு விட்டான். இதற்கு மேல் சாப்பிட்டால் தொப்பை விழுந்து விடும்... அப்புறம் பெண் கொடுக்க.. பெண் வீட்டார் யோசிப்பார்கள்.''

''நீயென்னடி.. எந்தப் பேச்சைப் பேசினாலும்.. கடைசியில் அவனுடைய கல்யாணத்திலேயே வந்து நிற்கிறாய்.''

''என்ன செய்வது. நீங்களும் அப்பாவும்.. அதைப் பேசுகிற வழியைக் காணோமே...''

''வாசவி சொல்வதும் நிஜம்தானே திலகா.. நம் பிரசன்னாவிற்கும் வயதாகிக் கொண்டே போகிறதே.. அவனுடைய கல்யாணத்தைக் காலாகாலத்தில் நாம் நடத்தி விட வேண்டாமா..?''

''நான் என்னவோ.. வேண்டாமென்று உங்கள் கையைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல் சொல்கிறீர்களே. பையனுக்குப் பெண் தேட வேண்டாமென்று நானா சொன்னேன்?''

''தேட வேண்டுமென்றும்.. நீ சொல்லவில்லையே.''

''என்னவோ.. எல்லாவற்றையும் என்னைக் கேட்டுத் தான் நீங்கள் செய்வது போல.. இது என்ன பேச்சு?''

''இல்லை திலகா.. வேறு எதில் உன் கருத்தைக் கேட்கிறேனோ.. இல்லையோ.. நம் பிள்ளைகளின் கல்யாண விஷயத்தில் நிச்சயமாய் உன் கருத்தைக் கேட்பேன்.''

''இதில் மட்டும்.. ஏன் என்னை முன்னால் வைக்கறீங்களாம்...?''

''ஏனென்றால்.. இந்தப் பிள்ளைகளைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் நீ.. இவர்களுடைய விசயங்களில் உன் கருத்துக்குத் தான் முதலிடம். எனக்கு என்னவோ.. நீ பிரசன்னாவின் கல்யாண விசயத்தில்.. தயக்கம் காட்டுவது போல் தோன்றுகிறது...''



திலகம் பதில் சொல்லாமல்.. டைனிங் டேபிளில் இருந்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போய்.. சமையலறையில் வைக்க ஆரம்பித்தாள். தகப்பனார்.. தாயாருடன்.. தீவிரமான முகபாவனையுடன் பேச ஆரம்பிக்கவும்.. வாசவி.. அந்த இடத்தை விட்டு அகன்று.. முன் பக்கம் சென்று விட்டாள்.

கைகழுவி விட்டு வந்து.. டைனிங் டேபிளின் முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்த காளிதாஸ்.. கை வேலையை முடித்து விட்டு வந்த திலகத்தைப் பார்த்து,

''இப்படி உட்கார் திலகா. உன்னிடம் பேச வேண்டும்,'' என்றார்.

ஆழ்ந்த குரலில் அவர் பேசவும்.. அதை மீற முடியாதவளாக.. திலகம்.. அவருக்கு எதிரில் அமர்ந்தாள்.

''சொல் திலகா.. உன் மனதில் என்ன இருக்கிறது..?''

திலகா.. தயக்கத்துடன்.. டைனிங் டேபிளில் சிதறியிருந்த நீரை விரலால் தொட்டுக் கோலம் போட்டாள்.

''திலகா...''

காளிதாசின் குரல் கடினமாக வெளிப்பட.. திலகா கணவனின் முகத்தை இறைஞ்சுதலாகப் பார்த்தாள்.

# 4



''எனக்கு.. பிரசன்னாவிற்கு முதலில் கல்யாணம் பண்ணுவதில் உடன்பாடில்லை...''

திலகா.. கைவிரல்களைப் பார்த்தவாறு இதைக் கூற வும்.. காளிதாஸ் ஆச்சரியப் பட்டுப் போனார். ஏனென் றால் திலகாவிற்குப் பிரசன்னாவின் மேல் பாசம்.. மிகவும் அதிகம்.

எல்லாத் தாய்மார்களும்.. முதன் முதலில் தன்னை.. 'அம்மா' என்று அழைக்கும்.. முதல் குழந்தையைத் தான் ஆழமாக நேசிப்பார்கள். திலகாவும் அதற்கு விதிவிலக்கல்ல. அவள் பிரசன்னாவை அதிகமாக நேசித்தாள்.

அப்படிப்பட்டவளின் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகளைக் கேட்டதும்.. காளிதாஸ் சிந்தனை வசப்பட்டார்.

''ஏன் திலகா..?'' என்று.. காரணத்தையும்.. அவளி டமே கேட்டார்.

''முதலில்.. நாம் வாசவிக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விடலாம்ங்க.''

''எல்லோரும் சொல்வது போல.. வீட்டில் வயதுப் பெண்ணை வைத்துக் கொண்டு.. அண்ணன்காரனுக்கு முதலில் கல்யாணம் பண்ணி வைக்கக் கூடாதுன்னு சொல்லப் போகிறாயா?''

''அது.. இல்லைங்க.''

''பின் வேறு என்ன திலகா..? எதுவாக இருந்தாலும் வாசவி இன்னும் படிப்பை முடிக்கவில்லை.. அவள் பட்டம் வாங்காமல் நான் அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க மாட்டேன்.''

''அப்படியில்லைங்க.. வாசவி ரொம்ப நல்லவள்.''



''அதுதான் நமக்குத் தெரியுமே...''

''பாசமும் அதிகம் வைப்பாள்.''

''அதுவும் நமக்குத் தெரிந்த விசயம்தானே...''

''ஆனால் கொஞ்சம் வாய்த் துடுக்காய்ப் பேசி விடுவாள்.''

''அது விளையாட்டுத்தனம்டி.''

''அது உங்களுக்கும்.. எனக்கும் தெரியும். வரப் போகிற பிரசன்னாவின் பெண்டாட்டிக்குத் தெரியுமா?''

''அதனால்..? நீ என்ன சொல்ல வருகிறாய் திலகா..?''

''மருமகள் நம் பெண்ணைத் தவறாக நினைத்துச் சண்டைக்கு வந்து விட்டால் என்ன செய்வது..? வாசவி யின் மனம் கஷ்டப்பட்டால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.''

''உன்னால் மட்டுமா..? பிரசன்னாவினாலும் தாங்கிக் கொள்ள முடியாது...''

''இப்ப.. நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''உனக்குப் புரியவில்லையா..?''

''புரியாமல் இல்லை... இருந்தாலும் கேட்கிறேன்.''

''நீயும்.. நானும்.. வாசவியின் மேல் வைத்திருக்கும் பாசத்தை விட.. பிரசன்னா வைத்திருக்கும் பாசம் மிக அதிகம்.''

''அது என்னவோ உண்மைதான்.''

''அப்புறம் ஏன் நீ வீணாகக் கவலைப்படுகிறாய்? பிரசன்னா அவன் பெண்டாட்டியிடம் சொல்லி வைத்துக் கொள்ள மாட்டானா?''

"இல்லைங்க.. இதனால் அவங்க இரண்டு பேருக்கும் நடுவில் வீண் பிரச்னை வந்து விட்டால் என்ன செய்வது..?"

"திலகா.. நீ அதிகமாய் யோசித்து மண்டையைக் குழப்பிக் கொள்கிறாய்ன்னுதான் நான் சொல்வேன். வாசவி சிறு பெண். இப்போது அவளுக்குப் பத்தொன்பது வயதுதான் ஆகிறது. ஆனால் பிரசன்னா அவளை விட ஏழு வயது மூத்தவன்.. அவனுக்கு இருபத்தாறு வயதாகி விட்டது. இது கல்யாண வயது.. காலத்தே பயிர் செய்ன்னு பெரியவங்க சொல்வாங்க. அதை நீ கேள்விப் பட்டதில்லையா...? இல்லை.. கேள்விப்பட்டதை மறந்து விட்டாயா..?"

காளிதாஸ் சொல்வதில் இருந்த உண்மை புரிந்தவளாய்த் திலகம் மௌனம் சாதித்தாள்.

"அப்போ.. பிரசன்னாவிற்குப் பெண் தேடும் வேலையை ஆரம்பித்து விடலாமா..?"

"ம்ம்.. இப்போது ஆரம்பித்தால்தான்.. இந்த வருசம் முடிவதற்குள் ஏதேனும் ஒரு இடத்தில் பெண் அமையும்."

திலகத்தின் கவலை திசை திரும்பி விட்டதைக் கண்ட காளிதாஸ் திருப்தியுடன் புன்னகைத்தபடி எழுந்து கொண்டார்.

பிள்ளைகளைப் பெற்று வளர்த்து வரும்வரை ஒரு பெற்றோருக்கு வேறு கவலை ஏதும் இருப்பதில்லை. அவர்களுக்குத் திருமணம் என்ற ஒன்றைச் செய்து வைக்க வேண்டி வரும்போதுதான் இல்லாத கவலைகள் எல்லாம் அவர்களுக்குள் உதயமாகிறது.



அதுவரை தாய்ப் பறவையின் சிறகுகளுக்கடியில் பாதுகாப்பாய் இருக்கும் பிள்ளைகளை வேறொரு துணையிடம் ஒப்படைத்து விட்டு விலகி நிற்க நேரிடும்போது.. பெற்றவர்களின் மனதில் உருவாகும் உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்க இயலாது.

பிரசன்னாவின் திருமணத்திற்குப் பின்.. வீட்டிற்குள் ஒரு புதிய பெண் வாழ வருவாள்.. அடுத்து வாசவி திருமணமாகி வேறொரு வீட்டிற்கு வாழப் போவாள்.. புதியவளைப் புரிந்து கொண்டு.. வாழப் பழக வேண்டும். பெற்ற மகளையும் பிரிவதற்குத் தயாராகவேண்டும். திலகத்தின் கவலை காளிதாஸிற்குப் புரிந்தது.

ஆனாலும்.. உரிய நேரத்தில் விலகி.. வாழ வேண்டிய இளங் குருத்துக்களை வாழ வைக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறதே...

காளிதாஸ்.. தனது ஹீரோ ஹோண்டாவை எடுத்துக் கொண்டு.. கடைக்கு விரைந்தார்.

"வணக்கம் காளிதாஸ்..."

காளிதாஸ்.. தன் மேஜையின் மேலிருந்த கம்ப்யூட்டரின் திரையை விட்டுப் பார்வையை விலக்கினார். மாணிக்க வாசகம் எதிரே நின்றிருந்தார்.

"அட வாங்க.. மாணிக்க வாசகம்.. என்ன.. பொள்ளாச்சிக் காத்து... அறந்தாங்கிப் பக்கம் வீசுது."

"இங்கே ஒரு வேலையாய் வந்தேன். அப்படியே உங்க நினைவு வந்தது.. பார்த்து விட்டுப் போகலாமுன்னு வந்தேன்."

"ரொம்ப சந்தோசம்.. என்ன சாப்பிடுகிறீங்க.."

''கொட்டுகிற மழையில.. கூல்டிரிங்கா குடிக்க முடியும். ஏதேனும் சூடாகத் தொண்டையில் இறங்கினால்.. சரிதான்.''

கடைப் பையனை அழைத்து, எதிரேயிருந்த பிரேம விலாஸ் ஹோட்டலில் காபி வாங்கிக் கொண்டு வரச் சொன்னார் காளிதாஸ்.

''ம்ம்.. அப்புறம் சொல்லுங்க!'' என்று காளிதாஸ் வினவ... அவர்கள் பொதுப் படையாய்ப் பேசிக் கொண்டிருந்தபோது.. சூடான காபி வந்து விட்டது.

''ம்ம்.. காபின்னா.. இது காபி.'' மாணிக்கவாசகம்.. காபியின் வாசனையை முகர்ந்தபடி சிலாகித்தார்.

''குடிக்காமலேயே.. வாசம் பிடிக்கிறீங்களே. என்னவோ புதுப் பெண்டாட்டி கிட்ட மல்லிகைப் பூவின் வாசனையை வாசம் பிடிக்கிறாப்புல இல்ல... வாசம் பிடிக்கிறீங்க...'' காளிதாஸ் சிரித்தார்.

''அது சரி.. உங்க மகனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிற வயசில.. பெண்டாட்டியோட மல்லிகைப் பூவின் வாசனை உங்களுக்கு நினைவுக்கு வருகிறதாக்கும்..'' மாணிக்க வாசகம் காபியை உறிஞ்சியபடி கேலி பேசினார்.

''நல்லவேளை.. நினைவு படுத்தினீங்க மாணிக்க வாசகம்.. நம்ம பையனுக்குக் கல்யாண வயது வந்து விட்டது..''

''அப்ப.. கல்யாணத்தைப் பண்ணிப்புட வேண்டியது தானே...''

''அதைத்தான் உங்களிடம் சொல்ல வந்தேன். நமக் கேத்த இடமா பெண் அமைஞ்சா சொல்லுங்க.''



''அப்படியா... ம்ம்.''

மாணிக்க வாசகம்.. தாடையைத் தடவியபடி யோசித்தார். முகத்தில் வெளிச்சம் பரவ நிமிர்ந்தார்.

''ஏன் காளிதாஸ்.. நம்ம மயில் வாகனத்தோட பொண்ணு சுகந்தியைப் பேசி முடித்து விடலாமா...?''

''எந்த மயில் வாகனம்?''

''என்னப்பா.. இப்படிக் கேட்கறீங்க. நம்ம பொள்ளாச்சியில் ஜவுளிக்கடை வைத்திருக்கும் மயில் வாகனத்தை உங்களுக்குத் தெரியாதா..?''

''அட அவரா.. அவருக்கு ஒரு பெண் இருப்பது எனக்குத் தெரியவே தெரியாதே...''

''இப்பத் தெரிந்துக்கிட்டிங்க இல்லையா.. என்ன சொல்கிறீங்க?''

''முதலில் அவங்க குடும்ப விவரம் சொல்லுங்க.''

''மயில் வாகனத்திற்கு இரண்டே பெண்கள். மூத்தவள் சுமதிக்குக் கல்யாணம் ஆகி விட்டது. தாராபுரத்தில் அவளைக் கொடுத்திருக்கிறாங்க. இவள் இளையவள்.. பி.எஸ்ஸி. படித்திருக்கிறாள். அடக்கமான சுபாவம்.. நம்ம பையனுக்குக் கேட்டால் சந்தோசமா மயில் வாகனம் பெண் தருவார்.''

''அவசரப்பட வேண்டாம் மாணிக்க வாசகம். முதலில் ஜாதகத்தை வாங்கிக் குடுங்க.. பொருத்தம் பார்த்து விட்டு மேற்கொண்டு பேசலாம்.''

''அவசரப்பட வேண்டாம்கிறது சரிதான். அதுக்காக.. ஒரேயடியாய் ஆறப் போடவும் வேண்டாம். நீங்க பையனின் ஜாதகத்தைக் கொடுங்க.. அதைக் கொடுத்து

விட்டு.. பெண்ணோட ஜாதகத்தை வாங்கிக் கொடுத்து விடுகிறேன். அதுதானே முறை...''

''பிரசன்னாவின் ஜாதகம்.. இங்கே கடையிலேயே ஒரு காபி இருக்கு...''

காளிதாஸ் எடுத்துக் கொடுத்த ஜாதகத்தை வாங்கிக் கொண்டார் மாணிக்க வாசகம்.

''அப்போ.. நான் கிளம்புகிறேன் காளிதாஸ். என்னவோ.. நான் இந்தப் பக்கம் வர வேண்டும்.. உங்கள் மகன் கல்யாண விசயத்தை ஆரம்பிக்க வேண்டும்ன்னு இருந்திருக்கும் போல...''

''நீங்க சொல்வது நிஜம்தான், மாணிக்க வாசகம்.. கால நேரம் கூடி வந்தால்.. எதுவும் நிற்காது.. நடந்தே தீரும்.''

''நல்லது காளிதாஸ்.. நான் போய் போன் பண்ணுகிறேன்.''

மாணிக்கவாசகம் கிளம்பிப் போய் விட்டார். காளிதாஸ் கடை வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தார். மீண்டும் மழை கொட்ட ஆரம்பித்திருந்தது. இரவு கடையை மூடிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினார்.

வீட்டு வாசலிலேயே.. திலகம் காத்திருந்தாள். காளிதாஸின் வண்டிச் சத்தம் கேட்டதும்.. பிரசன்னா அவசரமாய்க் குடையைப் பிடித்தபடி வந்து கேட்டைத் திறந்து விட்டான். அவர் வந்ததும்.. கேட்டைப் பூட்டி விட்டு.. அவர் பின்னாலேயே வீட்டிற்குள் வந்தான்.

''அப்பா.. என்ன மழை... என்ன மழை..!'' காளிதாஸ் அலுத்துக் கொண்டபடி.. போட்டிருந்த மழைக் கோட்டைக்



கழட்டி.. பின் பக்கமாக இருந்த வராண்டாவில் மாட்டினார்.

''அதையேன்பா.. இரண்டு தரம் சொல்கிறீங்க?'' பிரசன்னா சிரித்தான்.

''அப்போதுதானே... அதிகம் மழை பெய்வது நமக்குத் தெரியும்.''

வாசவி... தலையைத் திருப்பிக் கூற... இப்போது காளிதாஸ் சிரித்தார்.

திலகம்.. இரவுச் சாப்பாட்டிற்காக அழைக்க.. அவர்கள் டைனிங் டேபிளில் ஒன்று கூடினார்கள். காளிதாஸ் மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டுப் பிரசன்னாவின் முகத்தைப் பார்த்தார்.

# 5



''என்னங்கப்பா..'' என்று வினவினான் பிரசன்னா.

''ஒன்றுமில்லைப்பா.. எல்லாம் உன் கல்யாண விசயம் தான்,'' என்றார் காளிதாஸ்.

''அதுக்கென்னப்பா.. இப்போது அவசரம்..'' பிரசன்னா சங்கடத்துடன் வாசவியைப் பார்க்க.. அவள்,

''ஹை.. ஹை...'' என்று கண் சிமிட்டினாள்.

''யாரிடம் அண்ணா கதை விடுகிறாய்? எனக்குக் காது குத்தி இவ்வளவு பெரிய கம்மலைப் போட்டிருக்கிறேன். என்னிடமே கதை அளக்கிறாயா..?''

''ஏய்.. சும்மாயிரு.''

''அதெப்படிச் சும்மாயிருப்பது.. நீங்கள் சொல்லுங்கள் அப்பா.. பெண்ணின் ஊர் என்ன...? பெயர் என்ன...?''

பிரசன்னா.. தந்தை என்ன கூறப் போகிறார் என்று அறியும் ஆவலில் மௌனமாகச் சாப்பிடுவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். கடைக் கண்ணால்.. அவனது தவிப்பை வேடிக்கை பார்த்த வாசவி...

''ஏன்ப்பா... இன்னும் எத்தனை நேரம்தான் அண்ணனின் பொறுமையைச் சோதிப்பீங்க... பதிலைச் சொல்லுங்கப்பா...'' என்று கிண்டலாகக் கூறினாள்.

''ஏய்ய்... வாலு.. இப்ப அவன் பொறுமையில்லாமல் இருக்கிறதாய் உன்னிடம் வந்து சொன்னானா..? நீ உன் வேலையைப் பார்.. சும்மா.. அவனிடமே வம்பு வைத்துக் கொண்டு இருக்கிறாயே.. முதலில் தட்டைப் பார்த்துச் சாப்பிடு..'' என்று திலகம் மகளை அதட்டினாள்.

''தட்டைப் பார்க்காமல் சாப்பிடக் கூடாதா..? ஏன் அப்படிச் சாப்பிட்டால்தான் ஆகாதா..?''

''வாயாடி.. முதலில் அன்னத்தைத் தொட்டுக் கும்பிடுடி.''

வாசவி தட்டைத் தொட்டு வணங்க.. திலகம் கடுகடுவென்ற முகத்துடன்.. மகளின் தட்டில் சப்பாத்தியை வைத்து.. குருமாவை ஊற்றினார்.

''அதுதான் நீங்கள் சொன்னதைச் செய்து விட்டேனே.. இனியும் என்மேல் என்ன கோபம்.. பழம் விடுங்கம்மா..'' என்று வாசவி கொஞ்சினாள்.



''என்னடி இது விளையாட்டு...? நீதான் சின்னப் புள்ளை போலக் கூத்தடிக்கிறாய்ன்னா... என்னையும் உன்னோடு கூட்டுச் சேர்க்கிறாயா..? வேலையைப் பாரு!'' கடுமையாய்ப் பேசுவது போல் பாவனை செய்த திலகாவின் கண்களில் சிரிப்பு இருந்தது.

''ஊம்.. நீங்க சொல்லுங்கப்பா...'' தந்தையை ஊக்கினாள் வாசவி.

''என்னத்தைம்மா சொல்ல?'' காளிதாஸ் அறியாதவர் போல் வினவினார்.

''அப்பா.. நீங்களுமா.. தேமே என்று.. நானும் என் அண்ணனும்.. நல்ல பிள்ளைகள் போல் சாப்பிட வந்தோம். நீங்களாக எங்கள் ஆவலைத் தூண்டி விட்டு விட்டு.. இப்போது அறியாப் பிள்ளைபோல் பேசுகிறீங்களே.. இது நியாயமில்லை அப்பா...'' வாசவி சிணுங்கினாள்.

கணவனின் முகத்தைப் பார்த்த திலகத்தின் விழிகளிலும் எதிர்பார்ப்பு தென்பட்டது.

''ஒன்றும் இல்லை திலகம். நம்ம பொள்ளாச்சி மாணிக்க வாசகம் மதியம் கடைக்கு வந்திருந்தார்.''

''அப்படியா...?''

''அவரிடம் நம்ம பிரசன்னாவிற்குப் பெண் பார்க்கும் விசயத்தைச் சொன்னேன்.''

''ம்ம்..''

''அதற்கு அவர்.. பொள்ளாச்சியில் ஜவுளிக் கடை வைத்திருக்கும் மயில் வாகனத்தின் இரண்டாவது பெண் சுகந்தியை நம்ம பிரசன்னாவிற்குக் கேட்கலாம்ன்னு சொல்கிறார்.''

''பொண்ணு கூடப் பிறந்தவங்க எத்தனை பேராம்?''

''அக்கா.. தங்கைன்னு இரண்டே பேர்தானாம். அக்கா சுமதியைத் தாராபுரத்தில் கட்டிக் கொடுத்திருக்காங்க. இது தங்கை...''.

''நல்ல இடமாகத்தான் தோணுது.. பேசி முடிச்சிருங்க...''

''ம்ம்.. பார்க்கலாம். நம்ம பிரசன்னாவின் ஜாதகத்தைக் கொடுத்து விட்டிருக்கிறேன். அவங்க வீட்டில் ஜாதகம் வாங்கி அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கிறேன். ஜாதகப் பொருத்தத்தைப் பார்த்து விட்டு.. மேலே பேசலாம்.''

பிரசன்னா.. சப்பாத்தியை விண்டு.. குருமாவில்.. மூழ்கடித்துக் கொண்டே... தந்தையின் பேச்சைச் செவி மடுத்துக் கொண்டிருந்தான்.

''அண்ணா.. சப்பாத்தியை ஊற வைத்தது போதும்.. இனியாவது சாப்பிடு.. அப்பா.. பேசி முடித்து விட்டார்.''

''ஏய்... சும்மாயிரு.''

''நான் சும்மாதான் இருக்கிறேன். நீதான் சப்பாத்தியைப் போட்டு.. பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறாய்.''

பிரசன்னா தங்கையின் காதை இடது கையால் பிடித்து விளையாட்டாய்த் திருகினான்.

''ஆ... அம்மா... வலிக்குது...'' என்று அவள் அலறினாள்.

அவர்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டே சாப்பிட்டு முடித்து விட்டுச் சென்ற பின்.. காளிதாஸ் கை கழுவ எழுந்தார்.



''திலகம்.. நீயும் உட்கார்ந்து சாப்பிடு...''

''ம்ம்...''

''மயில் வாகனத்தின் பெண் நல்லவள், திலகம்.. நீ பயப்படுவது போல் எதுவும் நடக்காது..''

''நீங்கள் சொல்வது போல் நடந்தால் சரிதான்.''

திலகம் அலைபாயும் மனத்தோடு பதிலளித்து விட்டுச் சாப்பிட ஆரம்பித்தாள்.

அதே நேரத்தில் பொள்ளாச்சியில்.. மயில் வாகனத்தின் வீட்டிலும்.. அதே திருமணப் பேச்சுத்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''சாயங்காலமாய் நம்ம ஜவுளிக் கடைக்கு மாணிக்கவாசகம் வந்திருந்தார், பரிமளா.''

''என்ன விசயமாம்?''

''மதியம் அறந்தாங்கிக்குப் போயிருந்தாராம்.''

''அது ஒரு விசயமா..?''

''அறந்தாங்கியில் மளிகைக் கடை வைத்திருக்கும் காளிதாஸைப் பார்த்தாராம்.''

''அவருக்கு.. ஆண் ஒன்று.. பெண் ஒன்று இரண்டே பிள்ளைகளாச்சே.. அவருடைய மகனுக்கு இப்போது கல்யாண வயதுதானே...?''

பரிமளம் ஆவலாய் வினவினாள்.

இதுதான் பெண்ணைப் பெற்ற தாயின் குணம். திருமண வயதிலிருக்கும் பெண்களைப் பெற்றவர்கள்.. சொந்த பந்தங்களில் திருமண வயதும்.. திருமணம் செய்து கொள்ளும் முறையும் உள்ள பிள்ளைகளைப்

பெற்றவர்களைப் பற்றிய விவரங்களை விரல் நுனியில் சேகரித்து வைத்திருப்பார்கள்...

பரிமளமும்.. அப்படித்தான்.. அறந்தாங்கியில் உள்ள காளிதாஸின் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து வைத்திருந்தாள்.

''ஆமாம் பரிமளம்... பையன்தான் மூத்தவன்.. பேங்கில் மேனேஜராக இருக்கிறான்...''

''பரவாயில்லையே...''

''அந்தப் பையனுக்குத்தான் பெண் தேடுகிறாங்களாம். நம்ம மாணிக்க வாசகம் சுகந்தியைப் பற்றிச் சொன்னாராம். அவங்களுக்குப் பிடித்துப் போய் விட்டதாம்.. பையனோட ஜாதகத்தைக் கொடுத்து விட்டிருக்காங்க... நம்ம சுகந்தியோட ஜாதகத்தை அனுப்பச் சொல்லியிருக்கிறாங்க. நீ என்ன சொல்கிற..?''

''இதில் நான் சொல்ல என்னங்க இருக்கிறது? இது அருமையான இடம்.. நழுவ விட்டுவிடக் கூடாது. சுமதிக்குக் கூடக் கொஞ்சம் பிக்கல் பிடுங்கல் உண்டு. ஆனால் இந்தக் குடும்பம் அப்படிப்பட்டது இல்லை.''

''காளிதாஸிற்குச் சொந்தமாய்.. கடைத்தெருவில் பெரிய மளிகைக் கடை உண்டு.. அறந்தாங்கி டவுனில் பெரிதாய் மாளிகை போல் சொந்த வீடு... கிராமத்தில்.. வயல் வரப்பு.. சொத்து சுகத்திற்குக் குறைச்சல் இல்லை, பரிமளம்.''

''பையன் குணம் எப்படி...?''

''தங்கமான பையன்...''

''வேலையும் பெரிதுதான்.''



''ஆமாம்.. இப்படிப்பட்ட இடம் நாம் தேடினாலும் கிடைக்காது...''

''பையனின் பெயர் என்னவாம்..?''

''பிரசன்னாவாம்.''

'பிரசன்னா...' மனதிற்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள் சுகந்தி.

'யார் அவன்.. இது நாள்வரை அவள் அறியாதவன். இன்று அவள் வாழ்வாக ஆகப் போகிறவன்...'

யோசனையுடன் தன் அறைக்குள் சென்று கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு.. காலை ஆட்டியவாறே யோசித்தாள் சுகந்தி.

இப்படித்தான்.. அறந்தாங்கியில் பிறந்து வளர்ந்து.. வாலிபனாகிவிட்ட பிரசன்னாவிற்கு... பொள்ளாச்சியில் பிறந்து வளர்ந்து... யுவதியாகி நின்ற சுகந்தியைத் திருமணம் செய்ய விரும்பி... இரு வீட்டாரும் யோசித்தார்கள்...

மயில் வாகனம் விரைவுத் தபாலில் மகளின் ஜாதகத்தைக் காளிதாஸிற்கு அனுப்பி வைத்தார். காளிதாஸ் அதைவிட விரைவாய்ப் பொருத்தம் பார்த்து முடித்தார்.

''திலகம்.. பத்துக்கு எட்டு பொருந்தியிருக்குடி..'' என்று மிகவும் மகிழ்வாய் மனைவியிடம் காளிதாஸ் சொல்ல...

''அது எப்படிம்மா.. பத்துக்கு எட்டு போய் பொருந்தும்..? பத்துக்குப் பத்தும்.. எட்டுக்கு எட்டும்தானே பொருந்தும்..?'' என்று வெகு அக்கறையாய் ஊடே புகுந்து சந்தேகம் கேட்டாள் வாசவி.

பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு மகளை முறைத்த திலகம்,

''பத்துப் பொருத்தத்திற்கு.. எட்டுப் பொருத்தம் பொருந்தியிருக்குடி.. அப்பா அதைச் சொல்கிறார்..'' என்று மகளுக்கு விளக்கம் கொடுத்தாள்.

''ஓ.. நூற்றுக்கு எண்பது மார்க்கா..? வெரிகுட்.. வெரி குட்..''

''நம்ம வீட்டுச் சின்னக்குட்டி வாயிலிருந்தே நல்ல வார்த்தை வந்து விட்டது. இனியென்ன.. பெண் பார்க்க வருகிறோம்ன்னு தகவல் சொல்லி விட வேண்டியது தானே...''

திலகம்.. தன் சம்மதத்தை மறைமுகமாகக் கணவனிடம் தெரியப்படுத்தினாள்.

காளிதாஸ்... அந்த வார இறுதியில் பெண் பார்க்க வருவதாக மாணிக்க வாசகம் மூலம்.. மயில் வாகனத்திற்குச் செய்தி அனுப்பினார்.

அந்த வார இறுதியும் வந்தது.. அறந்தாங்கியிலிருந்து காளிதாசின் குடும்பம்.. காரில் ஏறி.. பொள்ளாச்சிக்குச் சுகந்தியைப் பெண் பார்ப்பதற்காக விரைந்தது.

## 6



வாசவிக்கு அந்தச் சூழலே வேடிக்கையாக இருந்தது. என்னவோ.. மகாராஜா பரம்பரைகளில் வந்தவர்கள்



போல்.. காளிதாஸும்.. திலகமும்.. முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு.. தோரணையாய் அமர்ந்திருக்க.. அவர்களிடம் கப்பம் கட்டுபவர்கள் போல்.. மயில் வாகனமும் பரிமளாவும்.. பவ்யமாய் நின்று பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இரு வீட்டாருக்கும் பொதுவாய்ச் செயல்பட்ட மாணிக்க வாசகம்.. காளிதாசிடமும்.. மயில் வாகனத்திடமும்.. மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார்.

பிரசன்னாவிடம்.. என்றைக்கும் இல்லாத கம்பீரம் அன்றைக்குத் தென்பட்டது. அண்ணனின் அழகை ரசித்துக் கொண்டே வாசவி.. அவனருகே சாய்ந்து கிசுகிசுத்தாள்.

''ஏன் அண்ணா.. இவங்க பேச்சு வார்த்தை எப்போது தான் முடியும்..?''

''ஏன் கேட்கிறாய்..?''

''நாம் பெண் பார்க்க வந்தோமா? இல்லை.. இவர்கள் பேசுவதை வேடிக்கை பார்க்க வந்தோமா?''

''ஸ்ஸ்... வாசவி.. இங்கே வந்து இப்படியெல்லாம் பேசக் கூடாது.''

''ஏன்.. உனக்குப் பெண் தர மாட்டேனென்று இவங்க சொல்லி விடுவாங்களா...?''

பிரசன்னா தங்கையை ரகசியமாய் முறைத்தான். அவளோ புருவத்தை உயர்த்திச் சிரித்தாள்.

''அந்தக் கவலையே உனக்கு வேண்டாம். என்றைக்குமில்லாமல் இன்றைக்கு நீ சூப்பராக இருக்கிறாய்.. இப்படி 'ஜம்'மென்று இருக்கும் மாப்பிள்ளையைக் கோட்டை

விட இவர்கள் என்ன முட்டாள்களா? உன் மாமனாரையும் மாமியாரையும் பார்த்தால் 'செம விவரம்' என்று தெரிகின்றது. உன்னை இவர்கள் விட மாட்டார்கள்.''

பிரசன்னாவிற்குத் தங்கையின் புகழ்ச்சி மிகவும் பிடித்துப் போய்விட.. ரசித்துச் சிரித்தான்.

''இப்படியே நான் பொய்.. பொய்யாகச் சொல்லிக் கொண்டிருந்தால்... நீ இப்படிப் புன்னகை மன்னனாகவே இருப்பாயில்லையா..?'' வாசவி.. அதற்கும் அவனை வாரினாள்.

''எதற்கும்.. நீ இப்படியே கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிரு வாசவி.. உனக்குப் புண்ணியமாகப் போகும்..!'' ஏறக்குறைய தங்கையிடம் ரகசியக் குரலில் கெஞ்சினான் பிரசன்னா.

''ஆக.. உன் கல்யாணம் நடப்பது என் கையில்தான் இருக்கிறது என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்கிறாயா..?''

''ஒப்புக் கொள்கிறேன். ஒப்புக் கொள்கிறேன். போதுமா..?''

''போதும்.. கவலைப்படாதே.. உன் கல்யாணத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு நானாச்சு...''

''அதை அப்பாவும்.. அம்மாவும் நடத்துவார்கள். நீ கொஞ்சம் வாயைத் திறக்காமல் அடக்கி வாசித்தாலே போதும்.''

அண்ணனும்.. தங்கையும் ரகசியக் குரலில் பேசிக் கொண்டிருப்பதை.. டிபன் கொடுக்க வந்த சுமதி கவனித்தாள். உள்ளே போய்ச் சுகந்தியின் காதைக் கடித்தாள்.



''சுகந்தி.. உன் வருங்காலக் கணவர் தங்கை உட்கார் என்றால் உட்காருகிறார். நில் என்றால் நிற்கிறார். பெண் பார்க்க வந்திருப்பவர்.. தங்கையிடம் கூடிக் கூடி ரகசியம் பேசுகிறார்.''

''அப்படியா...?''

சுகந்தி.. கவலைக்குள்ளானாள்.. சுமதியின் நாத்தனார் சுமதியின் கணவரிடம் சுமதியைப் பற்றிப் போட்டுக் கொடுத்துக் கணவன்.. மனைவிக்குள் சண்டையை மூட்டி விடுவாள். அதுபோல்.. சுகந்திக்கும் அமைந்து விடுமோ...

''பார்த்துடி.. ஆரம்பத்திலேயே.. உன்னவரை உன் கண்ட்ரோலில் வைத்துக் கொள்.. என்னைப் போல் விட்டு விடாதே.. இவர்களையெல்லாம் விட்டால்.. திரும்பவும் பிடிக்கவே முடியாது.''

''என்ன சுமதி பயமுறுத்துகிறாய்...''

''நடப்பைத்தான் சொன்னேன். அப்புறம் உன் இஷ்டம்.''

சுமதி பயமுறுத்தியதன் விளைவாக.. சுகந்தியை ஹாலுக்கு அழைத்துப் போனபோது.. அவள் மெல்ல விழியுயர்த்தி.. மாப்பிள்ளையைப் பார்ப்பதற்குப் பதில்.. மாப்பிள்ளையின் தங்கையைப் பார்த்தாள்.

அடக்க.. ஒடுக்கமாக.. வந்து நின்ற சுகந்தியைத் தான் அப்போது வாசவியும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வாவ்.. உன் பெண்டாட்டி செம கியூட் அண்ணா.'' அவள் பிரசன்னாவின் காதோரம் முணுமுணுக்க.. அவனும் தலையை ஆட்டினான்.

அதைப் பார்த்த சுகந்திக்கு உடம்பெல்லாம் எரிந்தது.

'சுமதி சொன்னது சரிதான் போல.. எப்படி பூம்பூம் மாடு போல.. தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறார்.'

இந்த மனக் குழப்பத்தில்... அவள் பிரசன்னாவைப் பார்க்கவே மறந்து போனாள்.

''நாம் பேசி முடிவுக்கு வருவதற்கு முன்னால்.. கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணும்.. மாப்பிள்ளையும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டுமே...'' என்றார் காளிதாஸ்.

''இது என்னங்க.. வழக்கமில்லாத வழக்கமா இருக்கு... எங்க குடும்பத்தில் இது போல நடந்தது இல்லையே... எங்க மூத்த பெண் சுமதியைப் பெண் பார்க்க வந்த போதும் மாப்பிள்ளை பெண்ணிடம் தனியாகப் பேசணும்னு கேட்டார். நாங்க சம்மதிக்கவில்லை...'' மயில் வாகனம்.. காளிதாஸிடம் மறுத்துப் பேசினார்.

''தனியாகப் பேசினால்தானே நீங்க அனுமதிக்க மாட்டிங்க... என் பெண் வாசவியும்.. அவங்க கூடப் போகட்டும். அப்ப உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே. இதை ஏன் நான் சொல்லுகிறேன்னா.. கல்யாணம் என்பது.. காலம்.. காலத்திற்கும் நிலைத்திருக்க வேண்டியது. என் மகன் நாங்கள் கீறிய கோட்டைத் தாண்ட மாட்டான். நாங்கள் அப்படித்தான் எங்கள் மகனை வளர்த்திருக்கிறோம். இன்றைக்கு எங்களுக்குப் பிடித்திருக்கிறது.. என்பதற்காக அவன் சம்மதம் சொல்லி விட்டான் என்ற நினைப்பு.. எங்களுக்குப் பின்னால் வந்து விடக் கூடாது. அவன் கல்யாணத்திற்கு.. அவனுடைய மனப்



பூர்வமான சம்மதம் எங்களுக்கு வேண்டும்..'' காளிதாஸ் மறைமுகமாகத் தங்களது சம்மதத்தை உணர்த்தினார்.

உடனே மயில் வாகனத்தின் முகம் மலர்ந்து விட்டது. பரிமளத்தின் முகத்தை அவர் பார்க்கவும்.. அவளும் கண்ணசைவில் தன் சம்மதத்தை வெளிப்படுத்தினாள்.

''ம்ம்... உங்கள் பெண்ணும் கூட இருப்பதானால்.. அவர்கள் தனியாகப் பேசிக் கொள்ளட்டும்.''

மயில் வாகனம் பச்சைக் கொடி காட்டி விடவும்.. சுகந்தி தன் மனதிற்குள் படபடப்பாக உணர்ந்தாள். சுமதி அவள் காதினில் முணுமுணுத்தாள்.

''பாருடி.. உன் வருங்கால மாமனாரும்.. மாமியாரும் பண்ணும் வேலையை... அவங்க மகன்.. உன்னுடன் பேசும்போது ஒட்டுப் புல் போல் அவருடைய தங்கை தான் ஒட்டிக் கொள்வாளாம்.. ஒரு பேச்சுக்குப் பெண்ணோட அக்காவும் கூட இருக்கட்டும்ன்னு சொன்னாங்களா.. பார்த்தாயா.''

''இப்போது மட்டும் என்ன வந்தது..? அந்தக் குறை உனக்கு எதற்கு? நீயும் கூடவா.''

''அதுதான் சரி. அவங்க மகள்.. மாப்பிள்ளை கூட வந்தால்.. உன் கூட நானும் வருவேன்.''

''அம்மா.. அப்பாவை மட்டும் ஏன் விட்டு வைத்து விட்டாய் சுமதி.. அவங்களையும் கூப்பிட்டுக் கொள்ளலாமே...''

''என்னடி.. காமெடி பண்ணுகிறாயா?''

''நீதான் என்னிடம் காமெடி பண்ணுகிறாய்.. நானே அவர் முகத்தைக் கூட இன்னும் சரியாகப் பார்க்கவில்லை...

அவர் வீட்டில் சம்மதம் என்பது போல் பேசுகிறார்கள். அவரைச் சரியாகப் பார்க்கக் கூட இல்லாமல் எப்படிச் சம்மதம் சொல்வதுங்கிற.. குழப்பத்தில் இருக்கிறேன்.. நீயானால்.. விளையாட்டுத்தனம் பண்ணிக் கொண்டு இருக்கிறாய்.''

''இப்போது என்னங்கிற.. நான் உன்கூட வரவா.. வேண் டாமா?''

''வா...''

சுகந்தி... எரிச்சலுடன் மாடிப்படியேறினாள். சற்று முன் வரை அவள் மனதில் இருந்த.. குதூகலம் கலந்த எதிர்பார்ப்பு மறைந்து போய் விட்டிருந்தது. மனதில் சஞ்சலமும்.. குழப்பமும் தலை தூக்கியிருந்தது.

மாடி ஹாலில் இருந்த சோபாக்களில் ஒன்றில் சுகந் தியும்.. சுமதியும் அமர... பிரசன்னா.. வாசவி பின் தொடர வந்து அவர்களுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தான்.

லேசாக நிமிர்ந்து அவன் சுகந்தியைப் பார்க்க முயலும் போது.. சுமதி அவனையே பார்த்துக் கொண்டு உட் கார்ந்திருப்பது கண்ணில் பட.. சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

சுகந்திக்கும் அதே நிலைமைதான். பிரசன்னாவாவது விழி உயர்த்திப் பார்க்க முயன்றான். அவள் விழிகளை உயர்த்தவே இல்லை... நிலத்தில் பார்வையைப் பதித்த வளாய் அசையாமல் அமர்ந்திருந்தாள்...

வாசவிக்கு.. அவர்களின் நிலையைப் பார்த்துச் சிரிப் புத்தான் வந்தது.



''ஏன் அண்ணா.. எதற்காக.. உன்னை இங்கே அனுப்பி வைத்தாங்க...'' என்று அவள் பிரசன்னாவிடம் சந்தேகம் கேட்டாள்.

பிரசன்னா தர்ம சங்கடத்துடன்.. தங்கையைப் பார்த் தான்.

''ஊஹூம்.. நீ இதற்குப் பதில் சொல்ல மாட்டாய்.. நானே சொல்லி விடுகிறேன்.. உன்னையும்.. அண்ணியை யும்.. தனிமையில் கலந்து பேசி.. கல்யாணம் செய்து கொள்வது பற்றி ஒரு முடிவுக்கு வரச் சொன்னார்கள்.. இல்லையா...''

''ஆமாம்...''

பிரசன்னா தங்கையை நன்றிப் பெருக்குடன் பார்த்த படி பதில் கூறினான். அவனது சங்கடம் சற்றே வில கியது.

''இப்படி.. உன் பக்கத்தில் நானும்.. அவங்க பக்கத் தில்... அவங்க அக்காவும் உட்கார்ந்திருக்க பேசுவது தான்.. தனிமையில் பேசுவதா..? அதற்குக் கீழேயே.. பெரிசுகள் முன்னாடியே பேசியிருக்கலாமே...''

'அட.. என் தங்கத் தங்கையே...' என்று கட்டிக் கொள்ள வேண்டும் போல பிரசன்னாவிற்கு இருந்தது.

சுகந்தி ஆச்சரியப்பட்டுப் போனாள். வாசவியின் இந்தத் தன்மை அவளை வெகுவாக வசீகரித்தது. வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டத்தில் வரும். இனிமையான தருணம்.. இந்தச் சந்திப்பு.. பின் வரும் நாள்களில்.. நினைவுப் பெட்டகத்தில் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய பொக்கிஷம்.

அப்படியொரு சந்திப்பில்.. இடையூறு இல்லாத தனிமை கிடைக்காத தவிப்பில் அவள் அமர்ந்திருந்த பொழுதில்.. அந்த உணர்வைத் தன் பாணியில் நகைச்சுவையாய் வெளிக் கொண்டு வந்த வாசவியின் மேல் அவளுக்குள்... அந்த வினாடியில் மட்டற்ற அன்பு உருவாகியது.

சுகந்தி.. தன் அழகிய கரு விழிகளை உயர்த்தி.. தன் வருங்காலக் கணவனைப் பார்க்காமல்.. அவனருகில் அமர்ந்திருந்த அவனது தங்கையைப் பார்த்தாள்.

# 7



சுகந்தியின் பார்வை தன் தங்கை மேல் விழுவதைக் கவனித்த பிரசன்னாவிற்கு.. அது ஒன்றும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை. வாசவியின் குணம் அனைவரையும் ஆகர்ஷிக்கும் தன்மை கொண்டது என்பதை அவன் அறிந்தவன்தானே.

''என்ன அண்ணி அப்படிப் பார்க்கறீங்க.. என் பெயர் வாசவி.. பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ். தேர்ட் இயர் படிக்கிறேன். மேலே எம்.ஸிஏ. படிக்கணும்னு ஆசை. நீங்க என்ன அண்ணி படித்திருக்கீங்க...'' வாசவி ஆவலுடன் சுகந்தியைப் பார்த்து வினவினாள்.

வாசவியின் இயல்பான பேச்சில் தயக்கம் விலகிய சுகந்தி புன்சிரிப்புடன் பதில் கூறினாள்.

''பி.எஸ்ஸி. மேத்ஸ்.''



''வாவ்... நீங்களும் எம்.ஸி.ஏ. படிக்கலாமே.''

வாசவியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று சுகந்தி யோசித்துக் கொண்டிருக்கையில்.. பிரசன்னா சுகந்தியை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டே வாசவியிடம்,

''ஏய்ய்.. வாலு.. நீ என்ன உன் அண்ணியை டைவர்ட் பண்ணுகிறாய்..? என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லிச் சொல்வாயென்று உன்னைத் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டு வந்தால்.. நீயானால்.. எம்.ஸி.ஏ. படிக்கப் போகச் சொல்கிறாயே.. இதுதான் நீ என் வாழ்க்கையைப் பார்க்கும் லட்சணமா..?'' என்று கேட்டான்.

சுகந்தியின் முகம் குங்குமமாய்ச் சிவந்து விட்டது. அவள் கால் கட்டைப் பெருவிரலால் தரையைக் கீறிக் கொண்டு அமர்ந்திருந்தாள். வாசவி 'களுக்'கென்று வாய் பொத்திச் சிரிக்க அவள் விழியுயர்த்தி.. வாசவியிடம் பார்வையாலேயே 'என்ன'வென்று வினவினாள்.

''அண்ணி.. நீங்க மட்டும்.. வாசலில் நின்று இப்படித் தரையை உங்கள் கால் பெருவிரலால் தோண்டியிருந்தால் இந்நேரம் இங்கே ஊற்றுக் கிளம்பியிருக்கும். அது ஏன் அண்ணி.. பெண்கள் மட்டும் வெட்கம் வந்தால்.. தரையில் ஊற்றுத் தோண்டுகிறார்கள்.''

சுகந்திக்கும் இப்போது சிரிப்பு வந்துவிட.. அவர்களது ஒற்றுமையையும்.. நெருக்கத்தையும் கண்டு சுமதிக்குப் பொறாமை வந்து விட்டது. அவள் வாசவியை ஏற இறங்கப் பார்த்தாள். பின் கழுத்தை ஒரு நொடிப்பு.. நொடித்து

''ஊம்.. அதை நீ நாளைக்கு யாரிடமாவது வெட்கப் பட்டு நின்று கொண்டு தரையில் பள்ளம் தோண்டு வாயில்லையா? அப்போது தெரிந்து கொள்ளலாம்.''

''அப்படியா.. என்னை வெட்கப்பட வைக்கவும் ஒருவன் பிறந்து வருவானா..?''

''இனிப் பிறந்து வந்தால்... அவன் குழந்தையாக இருப்பான்ம்மா.. ஏற்கெனவே எங்காவது பிறந்திருப் பான்.''

''இன்ட்ரெஸ்டிங்.. இதைப் பற்றி நாம் பேசிக் கொண் டிருக்கலாமா..? அண்ணா.. நான் எனக்கென்று பிறந் தவன் எங்கே இருக்கிறான். எப்போது வருவான்.. என் பதைப் பற்றி இவங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறேன்.. நீ.. அண்ணியுடன்.. அந்த பால்கனிக்குப் போய் நின்று.. நீ கேட்டுத் தெரிந்து கொள்ள வேண் டியதைக் கேட்டு முடி.. நிறுத்தி நிதானமாக... ஆற.. அமர கேட்டுத் தெரிந்து கொண்டு வா.. எங்களுக்கொன்றும் அவசரமில்லை... நாங்கள்.. பொறுமையாகக் காத்திருப் போம்.. நீங்க சொல்லுங்க. எனக்கென்று பிறந்தவன் எப்படி இருப்பான்?''

வாசவி பிரசன்னாவின் கையைப் பிடித்து எழுப்பி விட்டு.. சுமதியின் அருகே போய்ச் சட்டமாக அமர்ந்து கொண்டாள். பிரசன்னா... சுகந்தியின் முகத்தைப் பார்க்க சுகந்தி.. தன் உடலில் மின்சாரம் பாய்வதை உணர்ந்தாள். கை நடுங்க அவள் தலை குனிந்து.. கொள்ள..

''ஐயே.. என்ன அண்ணி இது.. நான் சொன்னது உங்கள் காதுகளில் விழுகவில்லையா.. அண்ணன் நின்று கொண்டிருக்கிறான். நீங்கள் என்னடாவென்



றால்.. அசைய மாட்டேன் என்று அடம் பிடிக்கிறீர்களே. எழுந்திருங்க.. அட எழுந்திருங்க அண்ணி, சொல்கிறேன்,'' என்று வாசவி சுகந்தியின் கையைப் பிடித்து எழுப்பி னாள்.

அத்தோடு நிறுத்தாமல்.. சுமதியைப் பார்த்து..

''ஒரு நிமிசம் இருங்க.. இவங்க இரண்டு பேரையும் பால்கனிக்குப் பார்சல் பண்ணி விட்டு வந்து விடுகிறேன். எனக்கு வரப் போகும் ஹீரோவைப் பற்றிய கதையை நாம் கன்டினியூ பண்ணலாம்..'' என்று சொல்லி விட்டு.. சுகந்தியின் கையைப் பிடித்து.. ஏறக்குறைய இழுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றாள்.

தங்கையின் செய்கையை மனதிற்குள் ரசித்துப் பாராட்டிய வண்ணம் பிரசன்னா அவர்களைத் தொடர்ந் தான்.

பால்கனியில் எதிரும்.. புதிருமாகப் போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் ஒன்றில் சுகந்தியை அமர வைத்த வாசவி.. பிரசன்னாவைப் பார்த்து ரகசியமாய்க் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்து விட்டுச் சென்று விட்டாள்.

பிரசன்னா... சுகந்தியையே பார்த்த வண்ணம் அவ ளுக்கு எதிரில் அமர்ந்தான். சுகந்தி தலை நிமிரவில்லை.

''சுகந்தி...'' மென்மையாக அழைத்தான் பிரசன்னா.

''ம்ம்...'' அவள் தலை நிமிராமல் முணுமுணுத்தாள்.

''என்னை நிமிர்ந்து பார்...''

அவள் தலை நிமிரவில்லை. அவளுடைய அந்த வெட்கம் பிரசன்னாவைக் கவர்ந்தது.

''இப்போது நாம் போனதும்.. நம்மிடம்.. பிடித்திருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்பார்கள். நான் பிடித்திருக்கிறது என்று சொல்லு முன்னால்... உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்...''

சுகந்தி அப்போதும் தலை நிமிரவில்லை...

''அப்படியானால்... உனக்கு என்னைப் பிடிக்கவில்லையென்று நான் எடுத்துக் கொள்ளட்டுமா...?''

அவள் அவசரமாகத் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவளுடைய அந்தப் பதட்டம்.. அவளுடைய மனத்தை உணர்த்தி விட.. பிரசன்னாவின் ஆண்மை கர்வம் கொண்டது.

''நான் அப்படிச் சொன்னேனா?''

''வாய்விட்டுச் சொன்னால்தானா..? உன் மௌனம் அப்படித்தானே எனக்கு உணர்த்துகிறது.''

''மௌனமாக இருந்தால்.. சம்மதமில்லையென்று அர்த்தம் கொள்வார்களா.. என்ன?''

''அப்படியென்றால் மௌனம் சம்மதம்.. என்று அர்த்தம் எடுத்துக் கொள்ளவா...?''

சுகந்தி வெட்கத்துடன் விரல் நகத்தை ஆராய்ந்தாள்.

''ஆனால்.. எனக்கு ஒன்றுதான் விளங்கவில்லை சுகந்தி.''

''என்ன..?''

''என் முகத்தைப் பார்க்காமலேயே என்னைப் பிடித்திருக்கிறது என்று எப்படிச் சொன்னாய்..? ஏன் சொல்



கிறேனென்றால் நீ என்னைப் பார்த்ததைவிட.. வாசவியைத்தான் அதிகமாகப் பார்த்துக் கொண்டிருந்தாய்...''

''அது நிஜம்தான்.''

''பரவாயில்லை. ஒப்புக் கொண்டாய்.''

''நீங்கள் உங்கள் தங்கையிடம் அடிக்கடி ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தீங்களே. என்ன அது?''

''உண்மையில் அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் ஒன்றுமே யில்லை யென்று சொல்ல வேண்டும். வாசவி ரகசியம் பேசுவதற்குக் காரணமே தேவையில்லை.''

பிரசன்னா வாத்சல்யத்துடன்.. பால்கனியிலிருந்து திரும்பி ஹாலில் அமர்ந்து சுமதியிடம் பேசிக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்தான்...

''உங்களுக்கு உங்கள் தங்கை மேல் பாசம் அதிகமா...?''

பிரசன்னா... சட்டென்று திரும்பி.. சுகந்தியை நேராகப் பார்த்தான். அவன் விழிகளில் வியப்புத் தெரிந்தது.

''ம்ம்.. பாசம் அதிகம்தான். ஏன்.. உனக்கு உன் அக்காவின் மேல் பாசம் இல்லையா..?''

''அது.. அது வந்து...''

சுகந்தி தடுமாறினாள். பிரசன்னா மென்மையுடன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''சுகந்தி.. நீ ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

''என்ன...?''

''நான் என் பெற்றவர்களுக்கு மகன்.. என் தங்கைக்கு அண்ணன்.. இவர்களின்மேல் எனக்குப் பாசம் அதிகம்...''

''ம்ம்...''

''அதே சமயம்.. என் மனைவியின் மேல் கொட்டு வதற்குக் கடலளவு காதல் எனக்குள் உண்டு.''

சுகந்தி சட்டென்று விழியுயர்த்தி அவன் முகம் பார்த் தாள்... அவளுக்கு எதுவோ புரிவது போல் இருந்தது... அவன் அவளுக்கு மட்டும் புரியும்படி.. அமைதியாகக் கண்களை மூடித் திறந்தான்...

''வாசவியின் மேல் எனக்கிருப்பது பாசம்... அதே சமயம் வரப் போகும் மனைவியின் மேல் எனக்கிருக்கப் போவது காதல்... இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு.''

''வரப்போகும் மனைவி.. வரப் போகும் மனைவி யென்றே சொல்கிறீங்களே.. அது நான் இல்லையா..?''

''அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. அதே சமயம் உன் மனதிலிருக்கும் இது போன்ற குழப்பங்களைக் கடந்து வந்து நீயும் முழு மனதாய்ச் சம்மதம் சொல்ல வேண்டு மில்லையா..?''

''என் கணவர் எனக்கு மட்டும்தான் என்று பொஸ ஸிவ்வாய் இருப்பதும் நினைப்பதும் தவறா?''

''கொஞ்சம் கூடத் தவறில்லை. அது உனக்கு என் மேலிருக்கும் காதலை உணர்த்தும் விசயம்.. உன் கணவன் உனக்கு மட்டும்தான் கணவன்.. அவன் உனக்கு மட்டும்தான் கணவன் மற்றும் காதலன் என்ற முறையில் சொந்தமானவன்.. அதே கணவன் உனக்கு வேறு சொந்தமாக முடியுமா..?''



சுகந்தி உதட்டைக் கடித்துக் கொண்டு தலையை அசைத்தாள்.

''இல்லையல்லவா? நான் என் அம்மாவிற்குத்தானே மகனாக இருக்க முடியும்? என் தங்கைக்குத்தானே அண்ணனாக இருக்க முடியும்..? அதேபோல் உன்னிடம் மட்டும்தானே கணவனாகவும், காதலனாகவும் இருக்க முடியும்..? இன்னும் சொல்லப் போனால்.. உன்னை மட்டும்தானே என்னால் காதலிக்க முடியும்..?''

''ஐ ஆம் ஸாரி.. நான் புரியாமல் பேசி விட்டேன்.''

''இதில் ஸாரி கேட்க வேண்டிய அவசியமேயில்லை. உன் மனதில் எது இருந்தாலும் தயக்கமில்லாமல் என் னிடம் பேசித் தெளிவு பண்ணிக் கொள்ளலாம். உனக் கில்லாத உரிமையா?''

''உங்கள் அம்மாவையும் விட.. உங்களின் தங்கையை யும் விட.. எனக்கு அதிக உரிமையிருக்கிறதா? ஏன் கேட்கிறேனென்றால்... உனக்கில்லாத உரிமையாயென்று நீங்கள்தான் சொன்னீர்கள்...''

பிரசன்னா சுகந்தியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவளது மனம் சிணுங்குவது.. அவனுக்குப் புரிந்தது.

# 8



பிரசன்னாவிற்கு ஒன்று மிகத் தெளிவாகப் புரிந்தது. சுகந்திக்கு அவனைப் பிடித்திருக்கிறது... மிகவும் அதிக

மாகப் பிடித்திருக்கிறது. அதனால்... அவன் தனக்கு மட்டும் சொந்தமானவன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அவள் விழைகிறாள்.

காதல் என்பதில் முதலில் வருவது பொறாமை. சுகந்திக்குப் பிரசன்னாவின் மேல் காதல் வந்திருக்கிறது. அதனால் வாசவியின் மேல் பொறாமை வந்திருக்கிறது.

அந்தக் கணம்.. சுகந்தியின் கரம் தொட்டு இழுத்து மார்போடு அணைத்து.. அவள் உச்சியில் இதழ் பதித்து.. அவளது காதோரம் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லி அவளுக்கு அமைதியளிக்கத் துடித்தான் பிரசன்னா.

ஆனால் எதிரே அமர்ந்திருப்பவள்.. இன்னும் அவனுக் கென்று முடிவு செய்யப்படாமலிருக்கும்.. நிலையி லிருப்பவள்... முடிவை எடுக்கத் தடுமாறிக் கொண்டிருப் பவள்... எனவே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். சுகந்தியின் முகத்தையே ஆழமாகப் பார்த்தான். இம் முறை அவள் விழிகளைத் தாழ்த்திக் கொள்ளவில்லை. மாறாக.. அவன் முகத்தையே படபடக்கும் இதயத் தோடு... அலை பாயும் மனத்தோடு பார்த்தாள்.

''சுகந்தி...''

''ம்ம்ம்...''

''இப்போது அம்மா எங்கேயிருக்கிறாங்க...?''

''கீழே... ஹாலில்...''

''வாசவி...?''

''மாடி ஹாலில்...''

''என்னோடு தனிமையில் உட்கார்ந்து பேசிக் கொண் டிருப்பது யார்...?''



''நான்தான்.''

''என்னோடு பேச நீ வந்ததும்... அம்மாவும்.. வாச வியும்.. ஒதுங்கி நின்று விட்டார்களே.. இதிலிருந்தே உன் உரிமையின் அளவுகோல் உனக்குத் தெரிய வில்லையா...?''

''.....''

''எனக்கென்று என் வீட்டில் தனி பெட்ரூம் உண்டு. ஏதேனும் பேச வேண்டுமானால் இவர்கள் என்னை வெளியே கூப்பிடுவார்கள். இல்லையென்றால்.. ஐந்து நிமிடம் என் ரூமிற்குள் வந்து உட்கார்ந்து பேசிவிட்டுப் போய் விடுவார்கள். ஆனால் நீ.. என்னிடம் தாலி வாங்கிக் கொண்டு உரிமையுள்ள என் மனைவியாகி விட்டால்.. என்னுடன் இணை பிரியாமல்.. அந்த அறைக் குள்தான் இருப்பாய்.. நீ என்னுடன் தனித்திருக்கும் போது.. இவர்கள் என்னிடம் பேச வெளியே அழைக்கக் கூட மாட்டார்கள். புரிகிறதா?''

''ம்ம்ம்.''

''தாய்க்குப் பின் தாரம் சுகந்தி... அம்மாவிற்குப் பின்னால் நீ என்று இதற்கு அர்த்தம் எடுத்துக் கொள் ளாதே. தாரம் என்று ஒருத்தி வந்து விட்டால்.. தாய் தன் உரிமையை விட்டுக் கொடுத்து விலகிக் கொள்வாள். என் அம்மாவும்.. வாசவியும் அந்த ரகம்.''

''ம்ம்ம்.''

''இப்போது மாடிக்கு நாம் தனியே பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தது யார்? என் அப்பாவும் அம்மாவும்தானே...? இங்கே மாடி ஹாலில் துணைக்கு வந்து நம் வாய் பார்த்துக் கொண்டிருந்த உன்

அக்காவைக் கழட்டி விட்டு.. தானும் கழன்று விலகி நின்று.. நமக்குத் தனிமையை ஏற்படுத்தித் தந்தது யார்..? வாசவிதானே.. இவர்களா.. உன்னுடன் போட்டிக்கு வரப் போகிறார்கள்..?''

சுகந்திக்குக் கண்களில் நீர் மல்கிவிட்டது... அதைக் கவனித்த பிரசன்னா சன்னமான குரலில் அதட்டினான்.

''ச்சு.. இப்போது எதற்குக் கண் கலங்குகிறாய்...?''

''தெரியாமல் பேசிவிட்டேன்...''

''இதுதான் தப்பு... உன் மனதில் எது இருந்தாலும் தாராளமாய் நீ என்னிடம் கேட்கலாம். உனக்கு என் மேலிருக்கும் உரிமைக்கு வானம்தான் எல்லை. அந்த உரிமையில் போட்டி போட யாரும் வரமாட்டார்கள்.''

''எனக்கு ஒன்றும் உங்கள் அம்மாவின் மேலும்.. வாசவியின் மேலும் பொறாமை இல்லை...''

''பயம் இருக்கிறது...''

''ம்ம்ம்...''

''பயம் வேண்டாம். நான் உன்னுடையவன்.''

சுகந்தி அவன் முகத்தை நிமிர்ந்து காதலுடன் பார்க்க.. பிரசன்னா திரும்பி மாடி ஹாலைப் பார்த்தான். வாசவி சுமதியை இந்தப் பக்கம் திரும்ப விடாமல் மறைத்து உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்தாள்.

பிரசன்னா சுகந்தியின் வலக்கரத்தைப் பற்றினான். சுகந்தியின் உடல் சிலிர்த்துக் கை நடுங்க ஆரம்பித்ததை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. பற்றியிருந்த கரத்தில் மென்மையாக முத்தமிட்டான். அதைத் தாள முடியாதவளாய்ச் சுகந்தி விழி மூடிக் கொண்டாள்.



''இது ஒருவழிப் பாதை சுகந்தி.. இனி நீ திரும்ப முடியாது.''

பிரசன்னாவின் வார்த்தைகள் சுகந்திக்குப் புரிந்தன... அவள் 'ஆமாம்' என்ற பாவனையில் தலையை அசைத்தாள். சற்று முன்வரை ஒருவரையொருவர் அறியாதவர்கள் இப்போது ஒருவரில்லாமல் மற்றொருவர் வாழ முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டவர்களாய்.. மௌனித்தனர்.

மௌனம் என்பது வாய்ப் பேச்சுக்களற்ற.. இதயம் மட்டுமே பேசிக் கொள்ளும் மொழி... அது சுகமானது.. சுமை தாங்கும் மனத்திற்குத் துணை நிற்பது... காதல் கொண்ட தருணத்தில் மடி தாங்குவது.

அந்த அழகான மௌனம் அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டது.

வாசவி சுமதியுடன் தீவிரப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது.. ஒரு கட்டத்தில் தாங்க முடியாதவளாய்ச் சுமதி எழுந்து கொண்டாள்.

''என்னங்க.. அதுக்குள்ள எழுந்து விட்டிங்க.. இன்னும் நாம் பேச வேண்டிய பேச்சை.. பேசவே இல்லையே.''

''அம்மாடி.. இதற்கு மேல் உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது.. விட்டால்.. நீ இன்றைக்குப் பொழுதிற்கும் பேசிக் கொண்டே இருப்பாய்.. கீழே ஆளைக் காணோமின்னு தேடுவாங்க. நான் சுகந்தியைக் கூப்பிட்டுக் கொண்டு கீழே போக வேண்டும்... ஆளை விடு...''

''அவங்க பேசி முடித்திருந்தால் இந்நேரம் எழுந்து வந்திருப்பாங்களே...''

''அதற்காக.. அவங்க பேசி முடிக்கும் வரை நான் காத்திருக்க முடியுமா?''

''உங்களுக்காக அவர்கள் பேச்சு வார்த்தையைப் பாதியில் நிறுத்த முடியுமா..?''

''அப்படி என்னதான் பேச்சு வார்த்தை நடத்துகிறாங்க..?''

''ஏன்.. உங்கள் ஹஸ்பெண்ட் பெண் பார்க்க வரும் போது உங்களிடம் பேச நினைக்கவில்லையா..?''

''அந்தக் கொடுமையை ஏன்ம்மா கேட்கிற..?''

''த்சொ.. த்சொ.. சொன்னால்தான் உங்களுக்கும் மனசு ஆறும்...''

''அவர் கல்யாணத்திற்குப் பின்னால்கூட என்னிடம் பேச நினைக்க மாட்டார்.''

''அடக் கடவுளே...''

''நீயெல்லாம் எனக்காகக் கடவுளைக் கூப்பிடுவது போல் என் நிலைமை ஆகிவிட்டதா...?''

''அதனால் ஒன்றும் குற்றமில்லை. கடவுளை யார் வேண்டுமானாலும்.. யாருக்காகவும் கூப்பிடலாம்.. அவர் கோபித்துக் கொள்ள மாட்டார்.''

''ஆனால்.. நான் கோபித்துக் கொள்வேனே.''

''அது யோசிக்க வேண்டிய விஷயம்தான்.''

''நீ யோசித்துக் கொண்டே... இங்கே உட்கார்ந்திரு. நான் போய்ச் சுகந்தியைக் கூப்பிட்டுக் கொண்டு கீழே போகிறேன்.''



''நீங்க என்னங்க.. உங்க தங்கையைக் கடத்திக் கொண்டு போவதிலேயே குறியாய் இருக்கீங்க...''

''ஏன்னா... அவள் என் தங்கை...''

''எனக்கு அண்ணியாக வரப் போகிறாங்களே.''

''அது வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.''

''அப்படி வந்து விடக்கூடாதுன்னு நீங்க ஒரே குறியாய் இருக்கீங்க போல இருக்கே.''

''அடேங்கப்பா... நீ பெரிய வாயாடியாய் இருப்பாய் போல இருக்கே...''

''நீங்க சரியான டியூப் லைட்டுங்க. இதைக் கண்டு பிடிக்க இவ்வளவு நேரமா..?''

''உன்னைப் போன்ற வாயாடி நாத்தனாரைச் சமாளிக்க எங்கள் சுகந்திக்குத் திறமை போதாது...''

''இதன் மூலம் நீங்கள் சொல்ல வருவது என்னவோ?''

''எங்கள் சுகந்தி ஒன்றும் உனக்கு அண்ணியாக வர மாட்டாள்.''

''அதை நீங்கள் சொல்லக் கூடாது. உங்கள் தங்கை.. இல்லையில்லை.. என் அண்ணி சொல்லட்டும்.''

''ஏன் சொல்ல மாட்டாள்..? இதோ - நானே அவளைக் கூப்பிட்டு என் முன்னாலேயே உன்னிடம் சொல்ல வைக்கிறேன்.. சுகந்தி.. சுகந்தி...''

சுமதி சத்தமாய் அழைக்கவும்.. மௌனத்திரை கலைய, அவசரமாய்ப் பிரசன்னாவும்.. சுகந்தியும் எழுந்து கொண்டார்கள்.

''என்ன சுமதி...?''

"இங்கே வா..."

கட்டாயம் போகத்தான் வேண்டுமோ.. என்ற ஏக்கத்துடன் சுகந்தி பிரசன்னாவைப் பார்க்க.. அவன் லேசாகச் சிரித்தான்.

"போய்த்தான் ஆக வேண்டும். வா.. போகலாம்."

பிரசன்னா முன்னால் செல்ல.. சுகந்தி பின் தொடர்ந்தாள்.

"சுகந்தி.. இந்தப் பெண் என்ன இப்படி வாயடிக்குது."

சுகந்தி பதறிப் போய்ப் பிரசன்னாவைப் பார்த்து விட்டு, சுமதியைக் கடிந்து கொண்டாள்.

"சுமதி.. என்ன பேச்சு இது.. வாசவி சிறு பெண். அவளைப் போய் இப்படிச் சொல்லலாமா?"

"என்னடி.. அந்தப் பெண்ணுக்கு சப்போர்ட் பண்றே...?"

"நியாயத்தைச் சொன்னேன்."

"என்னைவிட... யாரோ ஒரு பெண் உனக்கு உயர்ந்தியாகப் போய் விட்டாளா?"

"அவள் யாரோ ஒருத்தியில்லை.. என் நாத்தனார்."

சுகந்தி தன்னையுமறியாமல் சொல்லிவிட... வாசவியின் இதழ்களில் வெற்றிப் புன்முறுவல் உதித்தது. அவள் கட்டை விரலை உயர்த்திச் சுமதியிடம்.. வெற்றிக் குறியீடாகக் காண்பித்தாள். சுமதியின் முகம் கறுத்து விட்டது.

சுகந்தியின் முகத்திலிருந்த பிரகாசமும்.. பரவசமும்.. அவள் விழிகளில் தெரிந்த வெட்கப் பூச்சும்.. சுமதியின் மனதிற்குள் பொறாமைத் தீயை மூட்டிவிட்டது.



தனக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு வாழ்வு அமையவில்லை என்று அவள் மனதிற்குள் புகைந்து போனாள்.

# 9



மழை விட்டிருந்தது.. மழைக்குப் பின் வந்த சூரிய வெளிச்சம் ஈரமான பூமிக்கு வெதுவெதுப்பை அளித்துக் கொண்டிருந்தது. ஹாலில் இருந்த சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டு காளிதாஸ் சொல்லச் சொல்ல.. தரையில் அமர்ந்து... மடியில் ஒரு நோட்டை வைத்துக் கொண்டிருந்த வாசவி குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தாள். திலகம் சற்று நேரம் காளிதாஸிற்கு அருகே அமர்ந்து யோசனை சொல்வதும்.. ஊடே எழுந்து சமையலறைக்குள் சென்று சமையலைக் கவனிப்பதுமாக இருந்தாள்.

"அப்புறம்..?"

"அப்புறம்.. ம்ம்.. கோயம்புத்தூரில் இருக்கிற உன் பெரியம்மா வீட்டை எழுதி விட்டாயா..?"

"ஆச்சு..."

"ஒட்டன்சத்திரத்தில் இருக்கிற உன் மாமா வீடு..?"

"எழுதி விட்டேன்.."

"திலகம்.. திலகம்."

"என்னங்க.."

"இன்னும் வேறு யார்.. யாருக்குத் துணிகள் எடுக்கணும்?"

''கொஞ்சம் பொறுங்க.. வந்து சொல்கிறேன்.''

திலகா சமையலறைக்குள் இருந்து குரல் கொடுக்க.. தற்காலிகமாய் எழுதுவதை நிறுத்திய வாசவி.. திருமண அழைப்பிதழ்களில் ஒன்றைக் கையில் எடுத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தவள்... வாசலில் வண்டிச் சத்தம் கேட்கவும்.. தலையைத் திருப்பி வாசல்புறம் பார்த்தாள்.

''அப்பா.. அண்ணன் வந்துவிட்டான்.''

''ஏன்டி.. அவனுக்குக் கல்யாணமாகப் போகிறது. இன்னும் மரியாதை இல்லாமல் அவன்.. இவன்னு பேசுகிறாயா...? வாயிலேயே கரண்டியால் ஒரு போடு போட்டு விடுவேன்.''

திலகம் சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்து அதட்டினாள்... பிரசன்னா சிரித்தபடி வாசவியின் அருகேயிருந்த சோபாவில் அமர்ந்து.. தங்கையின் தலையைப் பாசமாய்த் தடவிக் கொடுத்தான்.

''விடுங்கம்மா. அவள் எப்போதும் போலவே இருக்கட்டும்.''

''இல்லைடா பிரசன்னா.. இன்றைக்குப் பேசும் வாய் தான் நாளைக்கும் பேசும்.''

''பேசினால்தான் என்ன?''

''வரப் போகும் மருமகள் என்னடா நினைத்துக் கொள்வாள்..?''

''எதுவும் நினைத்துக் கொள்ள மாட்டாள். அவளுக்கு வாசவியை ரொம்பப் பிடிக்கும்.''

''இருந்தாலும் பிரசன்னா...''



''அம்மா.. வேண்டாம்.. வாசவி பிறந்ததிலிருந்து எப்படி என்னிடம் பேசுகிறாளோ.. அப்படியே பேசட்டும்.. புதிதாய் மரியாதை அது.. இதுன்னு அவளுடைய மண்டையைப் போட்டுக் குழப்ப வேண்டாம். அண்ணன்.. தங்கைக்குள்ளே மரியாதை என்னம்மா வேண்டிக் கிடக்கு.''

''நீயே செல்லம் கொடுத்து அவளைக் கெடுக்கப் பார்க்கிறாயே.''

திலகம் மனத்தாங்கலுடன் சமையலறையை விட்டு வெளியே வந்து அவர்களுடன் அமர்ந்தாள்.

''சொல்லு திலகம்.. இன்னும் யார்.. யாருக்கு ஜவுளி எடுக்கணும்?''

''அந்த லிஸ்டை இப்படிக் கொடுங்க.''

காளிதாஸும்.. திலகமும் விவாதித்துக் கொண்டிருக்க.. வாசவி பிரசன்னாவின் பக்கம் நகர்ந்து உட்கார்ந்து ரகசியக் குரலில் கேட்டாள்..

''அண்ணா.. அண்ணியிடம் இன்றைக்கு எவ்வளவு நேரம் பேசினாய்...?''

''ஸ்ஸ்.. வாசவி.. அப்பா இருக்கிறார்.''

''அவர் கல்யாண ஜவுளிக் கணக்கில் இருக்கிறார்.. நீ சும்மா சொல்லு..''

பிரசன்னா பதில் சொல்லாமல் அவளுடைய தலையில் ஒரு கொட்டு வைத்தான்.

''ஆ.. வலிக்குது அண்ணா.''

''வலிக்குதில்ல... அப்பா முன்னால் அடக்கி வாசி.''

காளிதாஸும்.. திலகமும்.. திருமண ஜவுளி லிஸ்டை ஒரு வழியாய் முடித்து விட்டுப் பிரசன்னாவின் பக்கம் திரும்பினார்கள்.

''உனக்கு எத்தனை இன்விடேசன் வேண்டும் பிரசன்னா?''

பிரசன்னா பதில் சொல்வதற்கு முன்னால்.. வாசவி முந்திக் கொண்டு சிரித்தாள்.

''ஏன் சிரிக்கறம்மா?''

''அப்பா.. அண்ணன் இன்விடேசன் அடித்து.. அவனுடைய ஆபிஸ் பிரண்ட்ஸுக்கும் மற்ற பிரண்ட்ஸுக்கும் ஏற்கெனவே கொடுத்தாகி விட்டது.''

''என்னது.. தனியாக இன்விடேசன் அடித்தானா..?''

''பின்னே... நிகழும் மங்களகரமான தைத்திங்கள் பதினைந்தாம் நாளில்.. திருவளர் செல்வன் பிரசன்னாவிற்கும்.. திருவளர் செல்வி சுகந்திக்கும்.. விவாஹம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு.. சுபமுகூர்த்த சுபநாளில் அறந்தாங்கியிலிருக்கும் திருமண மண்டபத்தில் நடக்கும்.. அந்தத் திருமணத்திற்குத் தங்கள் நல்வரவை விரும்பும்... காளிதாஸ்ன்னு நீங்கள் அடித்து வைத்திருக்கும் இந்த இன்விடேசனையா அண்ணன் அவனுடைய பிரண்ட்ஸுக்குக் கொடுப்பான். அதோட டைப்பே வேறு அப்பா.''

''அப்படி என்னடா அது புது டைப்?''

''அது வந்துப்பா.''

பிரசன்னா தடுமாற... வாசவி மீண்டும் சிரித்தாள்.



''அதையேன்ப்பா அவனிடம் கேட்கறீங்க. என்னிடம் கேட்டால் நான் சொல்ல மாட்டேனா?''

''சொல்லும்மா.''

''உங்கள் வீட்டு நாட்காட்டியில் குறித்து வையுங்கள். உங்கள் கையிலிருக்கும் கைபேசியில் பதிந்து வையுங்கள். உங்களது ஜன்னலில் வெளிச்சக் கீற்றைப் பரப்பும் விடியலின் சூரியனிடம் சொல்லி வையுங்கள். வரும் பதினைந்தாம் தேதி... அதிகாலையில்.. பிரசன்னாவிற்கும்.. சுகந்திக்கும் கல்யாணம் என்று.''

''அட.. இது கூட நல்லாயிருக்கே... என்னடி திலகம்?''

''ஆமாமாம். இந்தக் காலத்துப் பிள்ளைகள்.. வாழ்க்கையை ரசித்து வாழ்பவர்கள்.''

''அப்போ.. நாம் ரசித்து வாழவில்லைன்னு சொல்கிறாயா?''

''நான் எப்போதுங்க அப்படிச் சொன்னேன்.''

''இப்ப நீ சொன்னதுக்கு அதுதானே அர்த்தம்.''

''ராமா... வீட்டுக்கு மருமகள் வரப்போகிற சமயத்தில் என் புருசனுக்குப் புத்தி போகும்.. போக்கைப் பாரு.. இத்தனை நாளும் வாயைத் திறக்காமல் இருந்து விட்டு.. காலம் போன கடைசியில் பெண்டாட்டியோடு சண்டை போட அலைகிறாரே.''

காளிதாஸ் சப்தமாய்ச் சிரிக்க... திலகவதி தோள்ப்பட்டையில் முகவாயை இடித்துக் கொண்டாள்.

''மெல்லடி.. தோள்ப்பட்டை பிய்ந்து விடப் போகிறது.''

''ரொம்பத்தான் அக்கறை...''

''பின்னே.. நாளைக்கு நம் பிரசன்னாவின் கல்யாணத் தப்போ.. மாப்பிள்ளையைப் பெத்தவங்க மேடையில் நிற்கணுமே.''

''அதனால்தான் அக்கறையாக்கும்.''

''ஆமாம்.. நீ வேறு என்னன்னு நினைத்தே...''

திலகவதி பொய்க் கோபத்துடன் எழுந்து கொள்ள முயன்றாள். காளிதாஸ் கடகடவென்று சிரித்தபடி.. அவளது கைப் பிடித்து அமர வைத்தார்.

''விடுங்க என்னை...''

''உட்காருடி.. அட உட்காருன்னு சொல்கிறேனில்ல..''

''உள்ளே எனக்கு வேலையிருக்கு.''

''இங்கேயும் வேலையிருக்கு. சொல்லு.. உனக்கு எத்தனை பட்டுப் புடவை வேண்டும்...?''

திலகவதியின் கோபம் பறந்து விட்டது. வீட்டிற்குத் தேவையானதை அவள் சொல்லி முடிக்க.. காளிதாஸ் வாசவியிடம் வினவினார்.

''உனக்கும்மா..?''

''எனக்குப் பட்டுப் புடவையெல்லாம் வேண்டாம்பா.''

''ஏன்ம்மா.''

''எனக்குப் புடவை கட்டிக்கவே தெரியாதுப்பா.. அழகாய் இரண்டு சுடிதார் எடுங்க.''

''என்ன திலகம்.. வாசவி இப்படிச் சொல்கிறாள்.''

''அவளுக்கென்ன.. பைத்தியம் போல் உளறுவாள். அவளுக்கு நான்கு பட்டுப் புடவைகள் எடுத்து விடுங்க.''



''நான்கா..? ஏம்மா ஒன்றைக் கட்டவே நான் யோசிக்கிறேன்.. இதில் நான்கு புடவைகளா..? அப்பா! அதெல்லாம் வேண்டாம்.''

''முட்டாள் போலப் பேசாதே வாசவி.. கல்யாணத்திற்கு நம்ம சொந்த பந்தம் அத்தனையும் வந்து நிற்கும்.. அதில் பட்டுப் புடவை கட்டி.. ஒழுங்காய் நகை போட்டு நில்லு.''

''ஏம்மா.. கல்யாணம்.. எனக்கா.. இல்லை, அண்ணனுக்கா..?''

''உன் அண்ணன் கல்யாணத்தில் உன்னைத்தான் எல்லோரும் பார்ப்பார்கள்.''

''மற்றவர்கள் பார்ப்பதற்காக நான் ஷோகேஸ் பொம்மை போல நடமாட வேண்டுமா?''

''இப்படிக் குதர்க்கமாகவே பேசிக் கொண்டிருக்காமல் சொன்னதைக் கேள் வாசவி.''

''எனக்குச் சுடிதார்தான் வேண்டும்.''

''நீ பட்டுச் சேலைதான் கட்ட வேண்டும்.''

''ஏன்..?''

''சுடிதார் போட்டால் நகை போட்டதே தெரியாதுடி.''

''நகை போடுவது அழகுக்காகத்தான்.. மற்றவர்கள் பார்ப்பதற்காக இல்லை.''

''உன்னைப் போல ஒருத்தியைப் பெற்றுக் கொண்டு நான் படுகிற பாடு இருக்கிறதே.. பெருமாளே!'

''அடிக்கடி ஏம்மா அவரையே தொந்தரவு பண்ணுகிறீங்க.''

''வேறு யாரிடம் உன்கிட்ட நான் படும் பாட்டைச் சொல்லிப் புலம்புவது... உன் அப்பா உன்னைப் பற்றி நான் என்ன சொன்னாலும்... இந்தக் காதில் வாங்கி.. அந்தக் காதில் விட்டு விடுவார். உன் அண்ணனோ.. உன் அப்பாவிற்கும் மேலே உனக்குச் செல்லம் கொடுத்துக் கெடுக்கிறான். என் குறையை நான் சொன்னால் இவங்க இரண்டு பேரும் காதில் போட்டுக்கிறாங்களா?''

திலகம் மனத்தாங்கலுடன் புலம்பவே ஆரம்பித்து விட்டாள்.

# 10



பிரசன்னாவிற்குத் தாயைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவன் தாயைச் சமாதானப்படுத்த முனைந்தான்.

''இப்ப என்னம்மா.. வாசவி புடவை கட்டிக்கணும். அவ்வளவுதானே.''

''அண்ணா.. நீ பாட்டுக்கு அம்மாவிடம் வாக்குக் கொடுத்துவிடாதே.. எனக்குப் புடவை கட்டிக்கத் தெரியாது.''

''நான் கட்டி விடுகிறேன்டி...''

''நீங்க கட்டி விடுவீங்க.. சரி.. ஆனால் சேலை கட்டிக் கொண்டு.. கால் தடுக்கி விழப் போவது யார்..? நான் தானே...''



''அம்மா.. இவள் சொல்வதும் சரிதானே.. சேலை கட்டிப் பழக்கமில்லாதவள்.. கால் தடுக்கி விழுந்து வைத்து விட்டால் என்ன செய்வது..?''

''ஏன்டா.. நீயும் அவளுக்குப் பின்பாட்டுப் பாடுகிறாயே.. அது எப்படி ஒரு பெண் பிள்ளை அடக்க.. ஒடுக்கமாய் நடந்தால் கால் தடுக்கும்..? உன் தங்கைக்குத்தான்.. காலிரண்டும் தரையில் படவே படாதே. ஓடிக் கொண்டிருந்தால் கால் தடுக்கத்தான் செய்யும்.''

''பாரு வாசவி.. அம்மாவின் ஆசைக்கு முகூர்த்த நாள் அன்றைக்கு மட்டும் சேலை கட்டேன்.''

''அப்படிச் சொன்னால் பரவாயில்லையே. நான்கு சேலைகள் எதுக்குன்னு கேட்கிறேன்.''

''ஏன்டா.. நிச்சயத்தப்போ இவள் உடுத்திக் கொள்ள புதுச் சேலை வேண்டாமா..?''

''அப்புறம்.. மற்ற மூன்று சேலைகளுக்கும் என்ன அண்ணா கணக்கு?''

''ம்ம்... பெண்ணழைக்கப் போகும்போது ஒரு சேலை.''

''வெரிகுட்... கல்யாணப் பெண் புதுச் சேலையில் இருக்கிறாங்களோ.. இல்லையோ.. நான் புதுச் சேலையில் இருக்க வேண்டும்.. அப்புறம்...?''

''அப்புறம்.. மறுநாள் காலையில் முகூர்த்தத்தின் போது ஒரு சேலை.. மாலையில் வரவேற்பின் போது ஒரு சேலை.''

''கேட்டுக் கொண்டாயா அண்ணா.''

''அவன் கேட்டுக் கொள்வது இருக்கட்டும்... நீ முதலில் இதைக் கேட்டுக் கொள்.''

''ஏம்மா.. கல்யாணப் பெண்ணிற்கு முகூர்த்தச் சேலை வாங்கி விட்டிங்களா.. இல்லையா?''

''அது தனியாய் வாங்க வேண்டும்டி... இதையெல் லாம் இன்றைக்கே போய் வாங்கி வந்து விடலாம்.''

''ஏன்.. அது மட்டும் தனியாய்ப் போய் வாங்க வேண்டு மாம்?''

''முகூர்த்தச் சேலை எடுக்கப் பெண் வீட்டிலிருந்து ஆள் வர வேண்டாமா..? அவங்க வீட்டிலிருந்து அவங் களை வரச் சொல்லி நாமும் சேர்ந்து போய் எடுக்க வேண்டும்.''

''அண்ணிக்கு எத்தனை சேலை எடுப்பீங்க?''

''அதுவும் நான்கு சேலைகள்தான்.''

''பரவாயில்லையே.. மகளைப் போல் மருமகளையும் நினைக்கறீங்க போல.''

''எனக்கு மருமகளும்.. ஒரு மகள்தான்.''

பிரசன்னா பெருமையுடன் தாயைப் பார்த்துக் கொண் டான். வாசவி.. அவனைப் பார்த்துக் கண் ஜாடை காட்டி விட்டு மேலும்.. திலகத்தின் வாயைக் கிண்டினாள்.

''அந்தச் சேலைகளும் எப்போது கட்டிக் கொள்ள வேண் டும்கிற.. கணக்கு இருக்குமே.''

''ம்ம்.. நிச்சயதார்த்தத்திற்கு ஒன்று.. முகூர்த்தப் பட்டு ஒன்று. சாயந்திர ரிசப்ஷனுக்கு ஒன்று.. அப்புறம்...''

திலகம் மேலே சொல்லாமல் நிறுத்திவிட.. வாசவி தூண்டினாள்.

''அப்புறம்.''



''அப்புறம்.. கிப்புறம்தான். போடி.. போய் வேலை எதுவும் இருந்தால் பாரு...''

பிரசன்னாவிற்குத் தெரியும்.. அந்த நான்காவது சேலை எதற்கு என்று.. அது.. முதலிரவின் போது கட்டுவதற்காக வாங்குவது.. அவன் மனம் கிளர்ச்சியுற்றது.. எழுந்து தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டான். செல்போனை உயிர்ப்பித்தான்.

''ஹலோ..'' என்றது மறுமுனையில் சுகந்தியின் குரல்.

''என்ன செய்து கொண்டிருக்கிறாய்..?'' அவன் தாபத்துடன் வினவினான்.

''உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' அவள் காதலுடன் கவிதையாய்க் கூறினாள்.

''இங்கே புடவை எடுக்க லிஸ்ட் போட்டுக் கொண் டிருக்கிறாங்க...''

''ம்ம்.. எப்போது நம் கல்யாண நாள் வரும்?''

''இன்விடேசனில் போட்டிருக்கிற நாளில் வரும்.''

''நிச்சயதார்த்தத்தை.. கல்யாணத்திற்கு முதல் நாளி லேயே மண்டபத்தில் வைத்துக் கொள்ளலாமுன்னு சொல்லிட்டிங்க.''

''ஏன்.. அதனால் என்ன..?''

''இல்லை.. முதலிலேயே எங்கள் வீட்டில் வைத்துக் கொண்டிருந்தால்... உங்களைப் பார்க்க முடிந்திருக்கும் இல்லையா..?''

''ஏன்.. இப்போது மட்டும் என்ன.. ஏதோ வேலை இருப் பது போல நாளைக்கு நான் பொள்ளாச்சிக்கு வரவா?''

''வேண்டாம்.. வேண்டாம்.''

''ஏன்...?''

''அப்பா.. அம்மா கண்டு பிடித்து விடுவார்கள்.''

''கண்டு பிடித்தால் என்ன..? நான்தானே உன்னைக் கட்டிக் கொள்ளப் போகிறவன்.. நான் உன்னைப் பார்க்க வந்தால் ஆகாதா...?''

''ப்ளீஸ்.. எனக்குச் சங்கடமாக இருக்கும்.''

''சரி.. சரி.. நான் வரவில்லை. பயப்படாதே. ஆனால் முகூர்த்தச் சேலை எடுக்கும்போது நான் வருவேன்...''

''நீங்கள் வராமல்.. உங்களுக்குப் பிடித்த சேலையை நான் எப்படி எடுக்க முடியும். நீங்கள் வந்துதானே ஆக வேண்டும்.''

''கட்டிக் கொள்ளப் போகிறவள் நீ.. உனக்குப் பிடித்த கலரில் பிடித்த சேலையாய்ப் பார்த்து எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே... அதற்கு நான் எதற்கு..?''

''நான் கட்டிக் கொண்டால்.. அதைப் பார்த்து ரசிக்கப் போகிறவர் நீங்கள்தானே... உங்களுக்குப் பிடித்த கலரும்.. டிசைனும் எது என்று நீங்கள் சொல்லுங்கள்.. நான் அதையே செலக்ட் செய்கிறேன்.''

பிரசன்னாவிற்குள் உணர்வுகள் கரை மோதின.. என்ன மாதிரியான உணர்வு இது.. எங்கோ பிறந்து வளர்ந்த ஒருத்தி இத்தனை வருடங்களாக அவளுக்கென்று இருந்த விருப்பங்களைத் துறந்து.. அவனுக்கு விருப்ப மானதை விரும்புகிறவளாக மாறிப் போனது எப்படி? தன் சுயத்தை மறந்து.. எல்லாமே அவனாக ஆகிப் போன



வளின் அன்பு அவனை ஈர்க்க.. அவன் மௌனமாகிப் போனான்.

''என்ன.. எதுவும் பேச மாட்டேன்கறீங்க..''

''சில நேரம்.. பேச்சு வராது சுகந்தி.. பேச வராது. இது அந்த மாதிரியான நேரம்...''

சிறிது நேரம் இருவரும் பேசினார்கள். யார் என்ன பேசினார்கள் என்ற நினைவே இல்லாமல்.. எதையாவது பேச வேண்டும் என்பதற்காகப் பேசப்பட்ட பேச்சுக்கள். முக்கியமானது என்பது பேச்சில் இல்லை. பேசிக் கொண் டிருப்பதே முக்கியமானதாய்.. பேசுவதே முக்கிய மானதாய் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பிரசன்னா மிக இனிமையாக உணர்ந்தான். வாழ்வின் முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தப் போகும் அந்தத் தருணத்தை எதிர்நோக்கி அவன் மனம் தவித்தது. விடிகின்ற ஒவ்வொரு விடியலும்.. அவனைப் புத்துணர் வோடு எழ வைத்தது.

முகூர்த்தப் பட்டு எடுப்பதற்காக... பொள்ளாச்சிக்கு பிரசன்னாவின் குடும்பத்தார் காரில் சென்றார்கள்.

''எங்கேப்பா முகூர்த்தப் பட்டு எடுக்கப் போகிறோம்?'' என்ற வாசவியின் கேள்விக்குப் பதில் சொன்னார் காளி தாஸ்.

''ஒருவேளை அண்ணியுடைய அப்பாவின் ஜவுளிக் கடையில் பட்டு எடுப்பீங்களோன்னு நினைத்தேன்.''

''சேச்சே... அங்கே யெல்லாம் எடுக்கக் கூடாது.''

''ஏம்பா.. அப்படி ஒரு 'அட்டு' ஜவுளிகளாய் அங்கே இருக்குமா?''

காளிதாஸிற்குச் சிரிப்பு வந்தது. திலகமோ.. கணவனை முறைத்து விட்டு மகளைக் கடிந்து கொண்டாள்.

''ஏன்டி.. யாராச்சும் சம்பந்தம் பண்ணப் போகிற வீட்டில் போய் ஜவுளி எடுப்பாங்களா?''

''எடுத்தால் என்ன..?''

''அவங்க நம்மகிட்ட பணம் வாங்குவாங்களா..?''

''வாங்கா விட்டால் நமக்கு மிச்சம்தானேம்மா...''

''உன் புத்தி ஏன்தான் இப்படிப் போகிறதோ.. தெரிய வில்லை. முகூர்த்தச் சேலை நாம்தான் வாங்க வேண் டும்.. புரிந்ததா?''

''கொஞ்சம் கூடப் புரியவில்லை.''

''புரியாவிட்டால் வாயை மூடிக் கொண்டு வா...''

இப்போது பிரசன்னா சிரித்தான்.

''ஏன்டா சிரிக்கறே...?''

''ஏம்மா.. வாயை மூடிக் கொண்டிருப்பது.. வாசவிக்கு எவ்வளவு பெரிய கஷ்டம்ன்னு உங்களுக்குத் தெரியாதா? அவளால் அது எப்படி முடியும்?''

''அண்ணா.. வேண்டாம்.. சந்து கிடைத்ததுன்னு சிந்து பாடாதே... அப்புறம் நான் என் வேலையைக் காட்டி விடுவேன்.''

''என்ன செய்வாய்?''

''உன் ஆபிஸில்.. பக்கத்து சீட் லேடிகிட்ட நீ கடலை போட்டாய்ன்னு.. அண்ணியிடம் ஒரு 'பிட்'டைப் போட்டு விட்டு வந்து விடுவேன். ஜாக்கிரதை...''



''அடிப்பாவி... பிரசன்னா.. உனக்கு நன்றாக வேண் டும்டா.. தங்கை.. தங்கையென்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினாயில்லையா.. நன்றாகப் படு..''

''ஏன் வாசவி.. இது உனக்கே நியாயமாய் இருக்கா..? என் பக்கத்து சீட்டில் இருப்பது மீனாட்சி சுந்தரம்.. என் பெஸ்ட் பிரண்ட்... அவனிடம் நான் பேசினால்.. அது கடலை போடுவதாக ஆகிவிடுமா..?''

''அது என்னவோ எனக்குத் தெரியாது. நான் அண்ணி யிடம் சொல்லத்தான் போகிறேன்.''

''என்ன சொல்வாய்..?''

''எதையோ சொல்வேன். அது உனக்கு எதற்கு..?''

முகூர்த்தப் பட்டு எடுக்கும் வேலையை மறந்துவிட்டுத் தங்கையைக் கவலையோடு நோக்கினான் பிரசன்னா.

# 11



''ஏன்ப்பா.. நமக்கெல்லாம் அறந்தாங்கியில் ஜவுளி எடுத்து விட்டு.. அண்ணிக்கு மட்டும் பொள்ளாச்சியில் ஜவுளி எடுக்க வேண்டுமா..? இது என்ன நியாயம்..?

''ஏம்மா... அறந்தாங்கியை விடப் பொள்ளாச்சியில் ஜவுளி சூப்பராக இருக்கும்ன்னு நினைத்தா இங்கு வந்திருக்கிறோம்?''

"அப்படி இல்லையா..?"

"இல்லை..."

"வேறு எதற்கு இங்கு வந்திருக்கிறோம்..?"

"முகூர்த்தப் பட்டு எடுக்கும்போது இரு வீட்டாரும் இருக்க வேண்டும். பெண் வீட்டாரை அறந்தாங்கிக்கு வாவென்று சொல்வது எனக்குச் சரியாகப் படவில்லை. அதனால்.. நாமே பொள்ளாச்சிக்குப் போய் விடலாம்ன்னு நினைத்து வந்திருக்கிறோம்."

"ஓ.. அப்படியா..."

"அப்படித்தான்..."

பொள்ளாச்சியில் கார் நுழைந்து.. அந்தப் பெரிய ஜவுளிக் கடையின் முன்னால் நின்றது. மயில்வாகனமும்.. பரிமளாவும்.. சுகந்தியோடு நின்றிருக்க...

"அப்பாடா..!" என்றாள் வாசவி.

"என்னடி..?" என்று விசாரித்தாள் திலகம்.

"அந்தப் பீப்பாய் வரவில்லை..."

"எந்தப் பீப்பாய்?"

"அதுதான்.. அண்ணியுடைய அக்கா."

"அடிப்பாவி.. உன் அண்ணனின் கல்யாணம் ஒழுங்காய் நடக்க வேண்டும்ன்னு கொஞ்சமாவது உனக்கு நினைவிருந்தால் வாயை மூடிக் கொண்டிரு.. பிரசன்னா..! உள்ளிருந்து உன்னைக் கொல்லும் வியாதியைத்தான் உன் பாசமலர் தங்கைன்னு நினைத்து.. நீ கொஞ்சிக் கொண்டிருக்கிறாய்.. இப்போதாவது இவள் புத்தியைப் புரிந்து கொள்."



திலகம் சடைத்துக் கொண்டே காரை விட்டு இறங்கினாள். "வாங்க அண்ணி..!" என்று பரிமளம் அருகே வந்து வரவேற்றாள்.

"அண்ணி..!" என்று வாசவி சுகந்தியிடம் போய் ஒட்டிக் கொள்ள.. பிரசன்னா தங்கையின் அருகே சென்று நின்று கொள்வதைப் போல்.. சுகந்தியின் அருகே சென்று நின்று கொண்டான்.

சுகந்தியின் விழிகள் பிரசன்னாவை ஆவலுடன் மொய்த்தன. அவனது பார்வையில் தெரிந்த பிரியத்தின் வீரியம் பிரசன்னாவைத் தாக்கியது.

நேசிப்பதைவிட.. நேசிக்கப்படுவது சுகமானது. பிரசன்னா அந்த சுகத்தை ஆழ்ந்து அனுபவித்தான்.

"நம்ம கடை இருக்க.. இன்னொரு கடையில் நாங்க ஜவுளி எடுப்பது இதுதான் முதல் முறை..." மனத் தாங்கலுடன் கூறினார் மயில்வாகனம்.

"தப்பா எடுத்துக்காதீங்க சம்பந்தி... எதிலயும் முறைன்னு ஒன்று இருக்கு. அதனால்தான்.. நான் வேறு கடையில் எடுக்கணும்ன்னு பிரியப்பட்டேன்.." காளிதாஸ் புன்னகையுடன் கூற.. அவர்கள் ஜவுளிக் கடையின் படிகளில் ஏறினார்கள்.

"சுமதியையும் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கலாமே." வாசவி முறைப்பதைக் கண்டு கொள்ளாமல் திலகம் வினவினாள்.

"சுமதி வந்திருக்கிறாளே.. அவள் வராமல் நாங்கள் எப்படி முகூர்த்தப் பட்டு எடுப்போம். அதோ.. அங்கே கடைக்குள் உட்கார்ந்து கூல்டிரிங்க் சாப்பிட்டுக் கொண்

டிருக்கிறாள், பாருங்க..'' என்று பரிமளம் காட்டிய திசையில் மற்றவர்கள் பார்த்தனர்.

அங்கே.. ஒரு சேரில்.. தோரணையுடன்.. மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்த சுமதி.. குளிர்பான பாட்டிலைக் கையில் வைத்துக் குடித்துக் கொண்டிருந்தாள்.

''அதுதானே பார்த்தேன்... இந்த ஒட்டுப் புல் ஒட்டிக் கொண்டு வராமல்.. எப்படி வீட்டில் இருக்கும்? பீப்பாய் எவ்வளவு கெத்தாக கூல்டிரிங்கைக் காலி பண்ணுதுன்னு பார்த்தீங்களா..?'' வாசவி திலகத்தின் காதோரம் கிசுகிசுத்தாள்.

''பொண்ணு என்ன சொல்லுது?'' என்று பரிமளம் விசாரிக்க.. அதற்கும்..

''புடலங்காய்க்கு.. உப்பில்லைன்னு சொல்லுதுன்னு சொல்லுங்கம்மா!'' என்று எடுத்துக் கொடுத்தாள் வாசவி.

''டேய் பிரசன்னா.. வாசவி என்னவோ புதிதாய் வந்திருக்கிற சேலை டிசைனைப் பற்றிச் சொல்கிறாள். என்னன்னு கேளு..'' என்று மகளை.. மகன் வசம் மாட்டி விட்டுவிட்டு.. திலகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

ஜவுளிக் கடையின் முதலாளியே வந்து அவர்களை வரவேற்று அழைத்துப் போனார்.

''எங்க கடையில்.. மயில் வாகனத்தின் மகளுக்குக் கல்யாண ஜவுளி எடுப்பது.. எங்களைக் கௌரவப்படுத்தும் விசயம்!'' என்று சொல்லி அவர்களை மரியாதையுடன் அமர வைத்தார்.



எல்லோருக்கும் குளிர்பானம் வந்தது. சுமதி இரண்டாவது முறையாய்க் குளிர் பான பாட்டிலைக் கையில் எடுக்க..

''நீங்க அப்போதே கடைக்குள் வந்து உட்கார்ந்து விட்டிங்க போல...'' என்று ஜாடையாய் வினவினாள் வாசவி.

''பின்னே.. உன்னை எதிர்கொண்டழைக்க வாசலில் வந்து காத்திருப்பேன்னு நினைத்தாயா..?'' என்று இகழ்ச்சியான குரலில் கேட்டாள் சுமதி.

''அடட.. உங்களைப் போய் நான் அப்படி நினைப்பேனா.. நீங்கள் யார்..? உங்கள் லெவல் என்ன...? நீங்கள் பேசாமல் கடைக்குள் கால் மேல்.. கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து.. வரிசை கட்டிக் கொண்டு வரும் கூல்டிரிங்க்ஸ் பாட்டில்களைக் காலி பண்ணுவீர்கள்ன்னு தான் நான் நினைத்தேன். அது சரியாகப் போய் விட்டது. இது எத்தனையாவது பாட்டில்?'' என்று கேலியாக விசாரித்தாள் வாசவி.

சுமதியின் முகம் கூம்பிவிட்டது. இவள் என்ன.. எப்படிப் பேசினாலும்.. பதிலுக்குப் பதில்.. அதுவும் திருப்பித் தாக்க முடியாமல் கொடுக்கிறாளே.. என்று மனதிற்குள் புகைந்து போனாள் அவள்.

வாசவி.. அதற்கு மேலும் சுமதியின் அருகே நிற்காமல் சுகந்தியிடம் சென்று சேலைகளைப் பார்த்துக் கொண்டே.. எதையோ முணுமுணுத்தாள். பிரசன்னா.. சுகந்தியின் அருகே வர.. அவனைப் பார்த்து... வில்லங்கமாய் ஒரு சிரிப்புச் சிரித்து வைத்துவிட்டு.. பெரியவர்களின் அருகில் போய் விட்டாள்.

'இது என்ன மாதிரியான சிரிப்பு?' என்று தங்கையின் சிரிப்பை வகைப்படுத்த முடியாமல் மண்டை மூளை குழம்பிப் போனான் பிரசன்னா.

சுகந்தியுடன் தனியாகப் பேசட்டும் என்று விலகிப் போகும் தங்கையை நினைத்துப் பெருமைப்படுவதா? இல்லை.. அவளுடைய வில்லங்கமான சிரிப்பிற்கு என்ன அர்த்தம் என்று நினைத்துப் பயப்படுவதா என்று ஒன்றுமே புரியாமல் விழித்துக் கொண்டு சுகந்தியைப் பார்த்தான் அவன்.

''யார்.. அவள்..?'' சுகந்தி.. பற்களுக்கு இடையில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்.

'ஆஹா.. என் கூடப் பிறந்த குட்டிப் பிசாசு.. எதையோ போட்டுக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறது போல..'

பிரசன்னா வாசவி போன திசையைப் பார்த்து ஆற்றாமையுடன் ஒரு பெருமூச்சை விட்டு விட்டு.

''எவள்..?'' என்று கேட்டான்.

''அதுதான்.. உங்களின் பக்கத்து சீட் பைங்கிளி..''

''என் பக்கத்து சீட்டில் பைங்கிளியெல்லாம் இல்லை.''

''வேறு யார் இருக்கிறாங்க..?''

''ஒரு ஆண் சிங்கம்தான் இருக்கிறது.''

''யாரிடம் காது குத்துகிறீர்கள்?''

''நான் பேங்க் மேனேஜர்ம்மா.. இந்தக் காது குத்தும் வேலை யெல்லாம் எனக்குத் தெரியாது.''



''ஓஹோ.. ஆண் சிங்கத்தைத்தான்.. வார்த்தைக்கு வார்த்தை.. என் மீனாட்சி.. என் மீனாட்சின்னு கொஞ்சுகிறீர்களா..?''

'ஓஹோ.. இதுதான் விசயமா..?' வாசவியை நினைத்துப் பிரசன்னாவிற்குச் சிரிப்பு வந்து விட்டது.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''சிரிப்பது கூட ஒரு குத்தமா..?''

''ஆமாம்.. எனக்குப் பதிலைச் சொல்லிவிட்டுச் சிரிங்க..''

''ஏய்.. அவள்தான் சிறு பெண்.. விளையாட்டுத் தனமாய் ஏதோ சொல்லி விட்டாள்ன்னா.. உனக்கெங்கே போச்சு புத்தி..''

''ஏனாம்.. என் புத்திக்கென்ன குறையாம்?''

''ஆமாம். அது என்ன நிறைவாகவா இருக்கு? முட்டாளே.. என் பக்கத்து சீட்டில் இருப்பவன்.. என் உயிர் நண்பன்... மீனாட்சி சுந்தரம்ன்னு பெயர்.. அவனை என் மீனாட்சின்னு சொன்னால்.. அதில் என்ன தப்பை நீ கண்டு விட்டாய்.. சொல்லு.''

''நிஜமாகவா..?''

''பின்னே பொய்யா? வாசவி உன்னை நன்றாக ஏமாற்றியிருக்கிறாள்...''

சுகந்திக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. அவள் தலை குனிந்து கொண்டாள்.

''ஐ ஆம் ஸாரி.''

''விடு.. உனக்கு வாசவி என்னிடம் உரிமை பாராட்டிப் பேசினாலே தாங்காது.. என் மீனாட்சி.. என் மீனாட்சின்னு

நான் சொல்வதாகக் கேள்விப்பட்டால்.. தாங்கிக் கொள்ளத்தான் முடியாது.''

சுகந்தி.. பிரசன்னாவின் விழிகளைப் பார்த்தபடி புடவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது விழியசைவில் புடவையைத் தேர்ந்தெடுத்து.. திலகத்திடம் காட்டினாள்.

''இது அழகாக இருக்கே. எங்க பிரசன்னாவிற்கு இந்த மெஜந்தா கலர்தான் ரொம்பப் பிடிக்கும்!'' என்று திலகம் கூற..

''இப்போதும் அண்ணனுக்குத்தான் இந்தச் சேலை பிடித்திருக்கிறது...'' என்று விசமமாக.. வாசவி கூறினாள்.

''என்னடி சொல்கிற?''

''ஒன்றும் சொல்லவில்லையே.''

''இல்லை.. எதுவோ சொன்னாயே.''

''நான் எதையும் சொல்லவில்லைம்மா.''

''என்னவோ போ... வர வர நீ பேசுவது எதுவுமே எனக்குப் புரியவில்லை...''

திலகம் அலுத்துக் கொண்டதைக் கேட்ட வாசவி.. சுகந்தியின் பக்கம் திரும்பிக் கண் சிமிட்டினாள்... அடுத்த கணம் திகைத்துப் போனாள்.

வாசவி கண் சிமிட்டியதைச் சுகந்தி பார்க்கவேயில்லை... மாறாக அவளுக்கு அருகே வந்து நின்று கொண்டிருந்த அந்த உயரமான ஆடவன்தான் கவனித்தான்.

சுகந்தி கேட்டுக் கொண்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்த அந்த உயரமானவனின் முகத்தில் வியப்பு தோன்றியது.



# 12



அவனது முகத்தில் தோன்றிய ஆச்சரியக் குறியைக் கண்டதும்.. வாசவி அவசரமாய்ப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

'அடக் கடவுளே... நான் அண்ணியைப் பார்த்துக் கண்ணடிப்பதாக நினைத்துக் கொண்டு இவனைப் பார்த்துக் கண்ணடித்து வைத்து விட்டேனே.. இவன் என்னை.. என்னவென்று நினைத்துக் கொள்வான்...'

வாழ்க்கையிலேயே.. முதல் முறையாக வாசவி மனதிற்குள் நாணப்பட்டாள். பிறந்ததிலிருந்து.. வெட்கம் என்ற உணர்வை அனுபவித்து அறியாதவள் முதல் முறையாக வெட்கப்பட்டாள்.

திலகம் எதையோ வினவ.. அதற்குப் பதில் சொல்லிக் கொண்டே லேசாகப் பார்வையை 'அந்த அவ'னின் பக்கம் செலுத்தியவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'அந்த அவன்..' அப்போது அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். இவளது பார்வையை எதிர்பார்த்தவன் போல அவன் விழிகளில் ஒரு மின்னல் தோன்றியது. உதடுகளில் இளநகை அரும்பியது.

வாசவி அவசரமாய்ப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அவளது உடல் நடுங்கியது.

'இது என்ன.. இவன் இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்.'

அதன் பின்னால் அவள் சுகந்தியின் பக்கம் திரும்ப முனையாமல்.. கன காரியமாகத் திலகத்திடம் பேசிக் கொண்டிருந்தாள். மகள் ஒரு இடத்தில் அமைதியாக நின்று கொண்டு குணசாலியாய்ப் பேசிக் கொண்டிருப் பதைக் கண்ட திலகத்திற்கு வியப்பு மேலிட்டது.

'என்னடா இது.. நம்ம வீட்டு வாலு.. வாலைச் சுருட்டிக் கொண்டு.. அடங்கி ஒரு இடத்தில் நிற்கிறதே. அதைவிட அதிசயமாய்.. ரொம்பக் குணசாலியாய்ப் பேச வேறு செய்கிறதே.. இது வாயைத் திறந்தால் அணு குண்டுதானே வெளியே வந்து விழும்.'

திலகம் பெற்ற பெண்ணை ஆச்சரியத்துடன் பார்த் தாள். அதை உணராதவளாக வாசவி.. கடைக்கண் ணால்.. சுகந்தி இருந்த திசைப் பக்கம் பார்த்தாள். அவன் இங்கேயேதான் பார்த்துக் கொண்டிருந்தான். வாச விக்கு.. அந்த ஏஸி செய்யப்பட்ட ஹாலிலும் வேர்த்து விட்டது.

'இவன் என்ன என்னையே பார்த்துக் கொண்டிருக் கிறான்!' என்று அவளது வெளிமனது எண்ணமிடும் போதே..

'அப்புறம்... சும்மா வந்து நின்றவனைப் பார்த்து... நீ கண்ணடித்து வைத்தால்.. அவன் உன்னையே பார்க் காமல்.. வேறு யாரைப் பார்ப்பான்..?' என்று அடிமனது இடித்துரைத்தது.

சீக்கிரமாய் அந்த இடத்தை விட்டு வெளியேறி விட் டால் தேவலை.. என்று அவளது அடிமனதில் பரபரப்பு தோன்றியபோதே... அனைவரும் ஒரு வழியாய் ஜவுளி எடுத்து முடித்து விட்டு எழுந்து கொண்டனர்.



''வாசவி..'' என்று சுகந்தி அழைக்கவும்.. வாசவிக்குத் திக்கென்றது.

'இந்த அண்ணி வேறு நேரம் காலம் தெரியாமல் இப்போது போய்க் கூப்பிட வேண்டுமா.. அண்ணியைப் பார்த்தால்.. அண்ணியின் பக்கத்தில் நிற்கும் அவனை யும் சேர்த்துத்தானே பார்த்தாக வேண்டும்... என்ன செய்வது...'

சுகந்தி அழைப்பது காதில் விழாததுபோல் வாசவி திலகத்திடம் மும்முரமாய்ப் பேசிக் கொண்டிருக்க.. சுகந்தி மீண்டும் அவளை அழைத்தாள்.

''வாசவி...''

'தப்பிக்க முடியாது போல இருக்கே..' வாசவி பதட் டத்துடன் காளிதாஸின் அருகே நகர முயல.. பிரசன்னா வின் கண்டிப்பான குரல் அவளைத் தடுத்து நிறுத் தியது.

''வாசவி... உன் அண்ணி கூப்பிடுகிறாள் பார்...''

'ம்ஹூம்.. இவனுக்கு வருங்கால மனைவியிடம் பிலிம் காட்ட இது ஒரு சாக்காகக் கிடைத்து விட்டது. என்னமாய் அதட்டுகிறான்!'

பல்லைக் கடித்துக் கொண்டு சுகந்தியின் பக்கம்.. அந்த உயர்ந்த மனிதன் தன்னைப் பார்க்கக் கூடாதே என்ற தவிப்புடன் பார்த்தாள் வாசவி...

ஆனால் அவனோ... 'உன்னை விட மாட்டேன்' என்ற சவாலுடன் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான்.

'இவனுக்கு மனதில் பெரிய மன்மதன்னு நினைப்பா..? பெரிதாய்க் காதல் கணைகளை வீசிக் கொண்டிருக்கிறானே...

என்னமாய் லுக் விடுகிறான் பார்..' என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்ட வாசவி...

''என்னங்கண்ணி..'' என்று மரியாதையுடன் கேட் டாள்.

''இங்கே வா..'' என்று சுகந்தி அன்புடன் அழைக்கவும், வாசவி அரண்டு போய் விட்டாள்.

சுகந்தியின் அருகே போனால்.. அவனருகில் போவது போல் ஆகி விடுமே... இதை எப்படித் தவிர்ப்பது என்று அவள் யோசிக்க ஆரம்பிக்கும்போது.. அதற்கு இடமே கொடுக்காமல்..

''வா.. வாசவி..'' என்று அழுத்தமாய் மீண்டும் அழைத்து வைத்தாள் சுகந்தி.

அதற்கு மேல் அங்கு நின்றால் மரியாதையாக இருக் காது என்பதால்.. சுகந்தியின் அருகே சென்று நின்றாள் வாசவி...

''அண்ணா.. இவள்தான் என் நாத்தனார் வாசவி...'' என்று பெருமையாக அந்த உயர்ந்த மனிதனிடம் சுகந்தி அறிமுகம் வேறு செய்து வைக்கவும்.. வாசவிக்கு உள் ளுக்குள்.. குளிர் காய்ச்சலே வந்து விட்டது.

'அண்ணனா.. யாருக்கு யார் அண்ணன்..? அண் ணிக்கு அந்தப் பீப்பாய் மட்டும்தானே கூடப் பிறந்த ஒரே உடன் பிறப்பு...? இந்த உயர்ந்த மனிதன் எங்கிருந்து வந்தான்?'

வாசவி விழித்துக் கொண்டிருக்கும்போதே..

''வாசவி.. இவர்தான் என் பெரியப்பாவின் மகன் சந் தோஷ்.. எனக்கும்.. சுமதிக்கும் அன்பான அண்ணன்..'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் சுகந்தி.



'ஓ.. கதை அப்படிப் போகிறதா..' என்ற நினைவுடன் அவனை வேறு வழியின்றி ஏறிட்டுப் பார்த்தாள் வாசவி.

''ஹலோ...'' என்றபடி கரம் குவித்தான் அவன். விழிகளில் மின்னல்.. இதழ்களில் அதே குறுநகை.

''வணக்கம்!'' என்று பதிலுக்குக் கரம் குவித்த வாசவி.. அவனைப் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்தாள்.

''பரவாயில்லையே சுகந்தி.. உன் நாத்தனார் மகா புத்தி சாலியாக இருக்கிறாங்களே...'' அவன் பாராட்டுதலாகக் கூறினான்.

''அது உனக்கும் தெரிந்து விட்டதா அண்ணா..?'' என்று மகிழ்ந்து போனாள் சுகந்தி.

''ம்ம்.. அது அப்போதே எனக்குத் தெரிந்து விட்டது!'' என்றபடி வாசவியைப் பார்த்த சந்தோஷின் கண்களில் சிரிப்பு இருந்தது.

அவன் தன்னைப் பார்த்துத்தான் சிரிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட வாசவியின் முகத்தில் எள்ளும்.. கொள் ளும் வெடித்தது.

'இவன் பாட்டுக்கு இதை அண்ணியிடமும்.. அந்தப் பீப்பாயிடமும் சொல்லி வைத்தால்... என் இமேஜ் என் னாவது..' வாசவி கவலைக்குள்ளானாள்.

அந்தக் கவலையுடன் அவளிருக்க.. அவனோ அவளைப் பார்த்து நேரடியாய்ப் பேச ஆரம்பித்து விட்டான்.

''என்ன படிக்கறீங்க...?'' என்று அவன் ஆரம்பிக்க, வேறு வழியின்றிப் பதில் சொல்லலானாள் வாசவி.

''பி.எஸ்ஸி.. தேர்ட் இயர்.''

''என்ன மேஜர்..''

''கம்ப்யூட்டர் சயின்ஸ்...''

''டிகிரி முடித்ததும் என்ன செய்வதாக உத்தேசம்?''

'உனக்கு முதலில் கேள்விகளைக் கேட்பதை நிறுத்தும் உத்தேசம் இருக்கிறதா இல்லையா..' என்ற எரிச்சலுடன் -

''நிச்சயமாய்க் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் உத்தேசமில்லை!'' என்று சொல்லி விட்டாள்.

அவனது விழிகளில் மீண்டும் மின்னல் தெறித்தது.

''அப்புறம்.. வேறு என்னதான் செய்வதாக உத்தேசம்..?''

''மேலே படிக்கப் போவதாக உத்தேசம்.''

''என்ன படிக்கப் போறீங்க.. எம்.எஸ்ஸி.யா?''

''இல்லை.. எம்ஸிஏ...''

''ஓ.. எம்ஸிஏ படித்துவிட்டு என்ன செய்யப் போகிறீங்க?''

''வேலைக்குப் போவேன்.''

''என்ன வேலைக்குப் போவீங்க.''

'ஊஹூம்.. இவன் இப்போதைக்குப் பேச்சை நிறுத்தவே மாட்டான்!' என்ற எரிச்சலுடன்..

''ஏன் சார்.. நீங்கள் என்ன.. என்னைப் பேட்டி எடுக்க வந்திருக்கிறீங்களா?'' என்று கேட்டாள் வாசவி.

அவள் ஏதோ.. உலக மகா ஜோக்கைச் சொல்லி விட்டது போல் சுகந்தி.. கலகலவென்று சிரிக்க.. சந்தர்ப்பம் கிடைத்து விட்ட சந்தோஷத்தில் பிரசன்னாவும் அவளுடன் இணைந்து நகைத்தான்.



அவன் முகம் மாறும் என்ற எதிர்பார்ப்புடன் அவனது முகத்தை ஏறிட்டுப் பார்த்தவளுக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. அவன் முகம் சிறிது கூட மாறாமல்.. சிரித்துக் கொண்டு இருந்தான்.. வாசவி ஆச்சரியப்பட்டுப் போனாள்.

'என்னடா இது.. இவன் இதற்கும் அசைய மாட்டேன் என்கிறானே..'

சுகந்தியோ.. வாசவியின் தோள் மேல் கை போட்டு அன்புடன் அணைத்துக் கொண்டு..

''நான் சொன்னபோது நீ நம்பவில்லையே.. இப்போது.. தெரிகின்றதா...?'' என்று வினவினாள்.

''அது எப்போதோ தெரிந்து விட்டது..'' என்று அவன் வாசவியை ரகசியப் பார்வை பார்த்தபடி கூறினான்.

''என்ன அண்ணி... நீங்கள் இவரிடம் என்னைப் பற்றி என்ன சொன்னீர்கள்?'' பொறுக்க மாட்டாமல் வாசவி கேட்டாள்.

''அது.. வேறு ஒன்றுமில்லை வாசவி.. என் வுட்பியின் தங்கை ரொம்ப புத்திசாலி. அவளிடம் வாய் கொடுத்து யாரும் மீண்டு வர முடியாதுன்னு என் அண்ணனிடம் சொன்னேன். அவர் நம்பவில்லை. அதைத்தான் இப்போது நினைவு படுத்தினேன்!'' என்று சுகந்தி சிரித்தாள்.

''ஓஹோ.. இவரிடம் ஏன் என்னைப் பற்றிச் சொன்னீங்க?''

''கோபமா..? அண்ணன்.. என் வருங்கால மாமனார் வீட்டைப் பற்றி விசாரித்தார். நான் விவரம் சொன்னேன்.''

''அடேங்கப்பா.. அவ்வளவு அக்கறையிருக்கிறவர்.. நாங்கள் உங்களைப் பெண் பார்க்க வந்தபோது உங்கள் வீட்டிற்கு வந்திருக்க வேண்டியதுதானே. முக்கியமான சமயத்தில் ஆஜராகாமல் எங்கே போனாராம்?''

வாசவி மெலிதான கோபத்துடன் கேட்டாள். அவன் அதற்கும் முகம் மாறாமல்.. புன்னகையுடனே அவளைப் பார்த்தான். அவ்னது விழிகளில் ஏதோ இருந்தது.. அது புரியாதவளாய் வாசவி இதயம் படபடக்க.. மீண்டும் அவனைப் பார்த்தாள்.

## 13



''ஏன் சுகந்தி... உன் நாத்தனார் என்னை லேட்டாகப் பார்த்து விட்டோமென்று வருத்தப்படுவது போல் தெரிகிறதே... இது எனக்கு முன்னமே தெரியாமல் போய் விட்டதே...''

அவன் வம்பிழுக்கும் வகையில் பேசினான்.. திருமணம் பண்ணிக் கொள்ளும் முறையில் உள்ள உறவினர்கள் இது போல் கேலி பேசுவது.. அவர்களது உறவு வட்டாரத்தில் இயல்பான விசயம் என்பதால்.. பிரசன்னா மௌனமாய்க் குறுநகையுடன்.. தங்கை இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதை அறிந்து கொள்ள வேடிக்கை பார்த்தான்.

''அடடா.. உங்களுடைய அண்ணன் இதற்குப் போய் இவ்வளவு வருத்தப்படுகிறாரா? ஏன் அண்ணி..



இது முன்னமே தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாராம்?''

''பெங்களூரில் இருக்கிற என் அக்கா வீட்டிற்கு.. அம்மா.. அப்பாவுடன் நானும் போகாமல் தேங்கி நின்றிருப்பேன் என்று சொல், சுகந்தி...''

''தேங்கி நின்று என்ன சாதித்திருப்பாராம்?''

''இதுவரை வாழ்க்கையில் எவ்வளவோ சாதித்திருப்பதாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால்.. அது எதுவும் சாதனையில்லை. நீ சாதிக்க வேண்டிய மிகப் பெரிய சாதனை ஒன்று பாக்கியிருக்கிறது என்று வாழ்க்கை என்னிடம் இப்போதுதான் சொல்லியிருக்கிறது...''

''ஓ...'' என்று விழிகளை வேண்டுமென்றே அகல விரித்துச் சுகந்தியைப் பார்த்தாள் வாசவி...

''நானும் பார்த்தாலும் பார்த்தேன்.. உங்கள் அண்ணனைப் போன்ற தற்பெருமை மன்னனைப் பார்த்ததே இல்லை... ஆஸ்கார் அவார்டு வாங்கிய ஏ.ஆர்.ரஹ்மான் கூட அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார். ஆனால் இவர் அலட்டிக் கொள்ளும் அலட்டலில் இந்த ஜவுளிக் கடையே குலுங்கி விட்டது. அண்ணி.. அப்படி என்ன தான்.. உங்கள் சாதனையாளர்.. திருவாளர்.. மேன்மைமிகு அண்ணன் சாதித்திருக்கிறார்ன்னு நீங்கள் சொன்னால்.. தேவலை...''

இந்தக் கேள்வியைச் சுகந்தியைப் பார்த்துக் கேட்டு வைத்த வாசவி.. 'ஏன்டா வாயை விட்டோம்' என்று நொந்து போய் விட்டாள். சுகந்தியின் முகத்தில் உற்சாகம்

கரை புரண்டோடியது.. அவள் மிகவும் ஆர்வத்துடன் கையை ஆட்டி... ஆட்டிப் பேச ஆரம்பித்து விட்டாள்.

''என்ன வாசவி இப்படிச் சொல்லி விட்டாய். அண்ணன் பாரின் போய்ப் படித்துவிட்டு வந்திருக்கிறார்.''

''நம்ம ஊரில் இல்லாத படிப்பா பாரினில் இருக்கிறது?''

''எங்கள் பெரியப்பா சின்னதாக மெஸ் ஒன்றை நடத்தி வந்தார். அண்ணன் அதைப் பெரிது பண்ணி... ஸ்டார் ஹோட்டல் ரேன்ஜிற்குக் கொண்டு வந்து விட்டார்... இப்போது பொள்ளாச்சியில் நம்பர் ஒன் ஹோட்டல் அண்ணனுடையதுதான். சினிமா ஷூட்டிங்கிற்கு யார் வந்தாலும்.. அண்ணனுடைய ஹோட்டலில்தான் ரூம் புக் பண்ணுவார்கள், தெரியுமா?''

''இதுவரை தெரியாது அண்ணி. இப்போது தெரிந்து கொண்டு விட்டேன்...''

''இனியாவது என் அண்ணன் என்ன சாதித்தார்ன்னு கேட்காமல் இருப்பாயா?''

''கேட்கவே மாட்டேன். நான் ஏன் அண்ணி வாயைத் திறந்து அந்தச் சந்தேகத்தைக் கேட்கப் போகிறேன்..? நான் வாயைத் திறக்கப் போக.. நீங்கள் ஒரு மணி நேரத்திற்கு.. வாய் மூடாமல் உங்கள் அண்ணனின் பெருமைகளை அள்ளி வீசுவீர்கள். தேவையா எனக்கு? இவரின் பெருமையைக் கேட்டு.. எனக்கு என்ன ஆகப் போகிறது...''

அவளது பேச்சை ரசித்துச் சிரித்தான் சந்தோஷ்.

'இவனுக்குக் கோபம் வரவில்லையா..?' யோசனையுடன் அவன் சிரிப்பைப் பார்த்தாள் வாசவி...



''சுகந்தி.. எதையுமே நமக்குத் தேவையில்லையென்று அவ்வளவு எளிதில் சொல்லிவிட முடியாது... இன்றைக்குத் தேவையில்லையென்று நாம் நினைப்பது. பின்னாளில் நமக்கு உயிர் வாழத் தேவையான இன்றியமையாத ஒன்றாக மாறி விடலாம். அதனால் உன் நாத்தனாரிடம் உடனே எந்த முடிவுக்கும் வந்துவிட வேண்டாமென்று சொல்லு..'' சந்தோஷ் விசமமாகப் புன்னைகைத்தான்.

''நான் என் கருத்தை எப்போதுமே மாற்றிக் கொண்டதில்லை, அண்ணி...''

''மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது, சுகந்தி.''

''ஹ.. பெரிய தத்துவத்தைக் கண்டு பிடித்து விட்டார்.''

''இது பெரிய தத்துவம்தான், சுகந்தி.. வாழ்க்கையின் மாறுதல்களைப் பற்றிய தத்துவம்.. இதை நான் கண்டு பிடிக்கவில்லை. பெரிய.. பெரிய.. அறிஞர்கள் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.''

''ஆமாம்.. சொன்னார்கள். சுரைக்காய்க்கு உப்பில்லை யென்று சொன்னார்கள்.. குரங்கிலிருந்து மனிதன் வந்தான்னு சொன்னதைப் போலச் சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்.''

''எது எப்படியோ சுகந்தி.. உன் நாத்தனாருக்குக் குரங்கிலிருந்துதான் தான் வந்தோம்கிற உண்மையை மட்டும் ஒப்புக் கொள்ளும் பெரிய மனம் இருக்கிறது. அந்த மட்டிலும் பரவாயில்லை...''

சந்தோஷின் நோக்கம் சுகந்திக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. அவள் யோசனையுடன் தமையனை நோக்கினாள்.

# 14



சந்தோஷ் அவ்வளவு எளிதாக யாரிடமும் பேசிவிட மாட்டான். அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தையை வரவழைக்க எதிரிலிருப்பவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும். அதுவும் பெண்களிடம் அவன் பேசியதே இல்லை.. விலகிச் சென்று விடுவான்.

அப்படிப்பட்டவன் இன்று வாசவியிடம் வளவள வென்று பேசியது சுகந்தியை யோசிக்க வைத்தது. இதன் நோக்கம் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியுமென்று சுகந்தியின் உள் மனது கூறியது.

சந்தோஷ் பேச்சை வளர்த்த விரும்புகிறான்.. வாசவியின் ரோசத்தைத் தூண்டி விடுவதன் மூலம்.. அவளைப் பேச வைத்து ரசிக்க விரும்புகிறான்.. அப்படியெனில்.. அவனுடைய மனம் வாசவியுடன் உரையாடுவதை விரும்புவதாகத்தானே அர்த்தம்.

சந்தோஷிற்குப் பெண் கொடுக்க.. கோயம்புத்தூரில் உள்ள பெரிய புள்ளிகள் விரும்பியதைச் சுகந்தி நன்கு அறிவாள். சந்தோஷ் இதுவரை திருமணத்தைத் தவிர்த்து வந்திருக்கிறான். இதுவரை சந்தோஷிற்குப் பெண் கொடுக்க வந்த பெரும் புள்ளிகளின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடுகையில்.. காளிதாஸின் வாழ்க்கைத் தரம் குறைந்ததுதான்.

அத்தோடு.. வெளிநாட்டில் படிப்பை முடித்து விட்டு வந்த சந்தோஷ் எப்படி.. இன்னும் பட்டப் படிப்பைக் கூட



முடிக்காத வாசவியின்பால் வசீகரிக்கப்பட்டான் என்பதும் சுகந்திக்கு விளங்கவில்லை...

மயில்வாகனத்தின் பெரியப்பாவின் மகனான ராம கிருஷ்ணன் பொள்ளாச்சியில்... 'செட்டிநாடு மெஸ்' என்று சாதாரண அசைவ ஹோட்டல் ஒன்றைத்தான் நடத்திக் கொண்டிருந்தார்.

ஆனால்.. அவருடைய ஹோட்டலில் தயாராகும் அசைவ உணவு வகைகளின் கைமணம் பல நிரந்தர வாடிக்கையாளர்களைத் தேடித்தர.. ஹோட்டல் தொழில் நல்ல லாபகரமாகவே ஓடிக் கொண்டிருந்தது.

மூத்த பெண் சரஸ்வதியைப் பெங்களூரில் ஒரு சாஃப்ட்வேர் என்ஜினியருக்கு நிறையச் சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார். அடுத்தவன் சந்தோஷ்.. வெளி நாட்டில் படிக்கக் கிளம்பி விட்டான். அவனது படிப்பை முடித்துக் கொண்டு இந்தியாவிற்குத் திரும்பியவன்.. பொள்ளாச்சியிலிருந்த தகப்பனாரின் ஹோட்டலைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டான்.

என்ன செய்தான், ஏது செய்தான்.. என்று யாருக்குமே புரியவில்லை.. சாதாரணச் செட்டிநாடு மெஸ்ஸாக இருந்த சிறு கட்டடம்.. 'ஹோட்டல் ஜாஸ்மின்' என்ற நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஹோட்டலாக உருமாறி.. உயர்ந்து நின்றது.

இரவு பகலாக அவன் உழைத்ததுதான் எல்லோருக்கும் தெரியும்.. செட்டிநாடு மெஸ்ஸின் பக்கவாட்டில்.. இரவு நேர கார்டன் ரெஸ்டாரெண்டைக் கொண்டு வந்தான். அதில் செயற்கைக் குளத்தை உருவாக்கி.. நிஜமான அன்னப் பறவைகளை நீந்த விட்டான். பச்சைப்

புல்வெளி பாத்திகளைப் பதிக்க வைத்து.. அதில் முயல் குட்டிகளை ஓடி விளையாட விட்டான். செயற்கை அருவியொன்றைக் கட்டி அதனருகே.. வட்ட வடிவமான டேபிள்களையும்.. அதைச் சுற்றி நாற்காலிகளையும் போட வைத்தான்.

ராமகிருஷ்ணன் கை மணத்தை மட்டுமே நம்பி ஹோட்டலை நடத்தியவர்.. நாவுக்குச் சில ருசிகள் தேவைப்படுவது போல... மனதிற்கும் சில சூழல் மாற்றங்கள் தேவைப்படும் என்பதை அவர் புரிந்து வைத்திருக்கவில்லை...

ஆனால்.. சந்தோஷ் அதைப் புரிந்து வைத்திருந்தான்.. எளிதாய்.. உணவுப் பிரியர்களை இயற்கைச் சூழலில் உண்பதற்குச் சாரி.. சாரியாய் அவன் ஹோட்டலைத் தேடி வர வைத்தான்... பண வருமானம் அதிகரித்தது. சுற்றிலும் இருந்த கட்டடங்களை.. அவன் ஏன் விலைக்கு வாங்குகிறான் என்பது ராமகிருஷ்ணனுக்குப் பிடிபடவில்லை... அதே சமயம்.. மகன் தலையெடுத்து விட்டான்.. இனி அவனுடைய பொறுப்பில் எல்லாமும் இருக்கட்டும். அவனுடைய முடிவுகளில் நம் தலையீடு இருக்கக் கூடாது என்ற தீர்மானமும் அவரிடம் இருந்தது.

ஒருநாள்.. கார்டன் ரெஸ்டாரெண்டைத் தவிர.. மற்றக் கட்டடங்களை அவன் இடித்துத் தரைமட்டமாக்கினான்.

''டவுனின் சென்டர் பகுதியில் இருக்கிற கட்டடங்கள் எல்லாவற்றையும் வாடகைக்கு விட்டால்.. உட்கார்ந்து சாப்பிடலாம். ஏன் இப்படிச் செய்கிறான்னு தெரியலையே...'' மனைவி ஜானகியிடம் புலம்பினார் ராமகிருஷ்ணன்.



''ஏன்.. நீங்கள் அவனிடம் கேட்க வேண்டியது தானே...'' ஜானகி கணவனிடம் வினவினாள்.

''தப்புடி... இனி எல்லாமும் அவன் சொத்துத்தான்.. இன்னும் சொல்லப் போனால்.. ஹோட்டல் பொறுப்பு அவன் கைக்கு மாறியிருக்கிற இந்த ஆறு வருசத்தில் தான் அவன் இந்தக் கட்டடங்களையெல்லாம் வாங்கிப் போட்டான். அது எல்லாமே அவனுடைய சொந்த உழைப்பில் வந்தது. அதில் உரிமை கொண்டாடி.. யோசனை சொல்லி நான் தலையிடக் கூடாதுடி ஜானு... அது நியாயமில்லை...''

ராமகிருஷ்ணன் விலகி நின்று வேடிக்கை பார்க்க.. சந்தோஷ் அந்த இடங்களில் மிகப் பெரிய ஹோட்டல் வளாகத்தை உருவாக்கினான். அதைக் கண்ட ராமகிருஷ்ணன் பிரமித்து நின்று விட்டார்.

## 15



சந்தோஷ் மிகப் பெரிய சாதனையைச் சாதித்திருந்தான்.. அவருடைய பரம்பரையில் யாருமே தொட்டிராத வெற்றிச் சிகரத்தைத் தொட்டுக் காட்டியிருந்தான்.. அதைச் சாதிக்க அவன் படித்த வெளிநாட்டுப் படிப்பும்.. வெளிநாட்டில் அவன் பழகிய நண்பர்களின் உதவியும் கிடைத்தன. வங்கிக் கடன் எளிதாகக் கிடைக்க.. அவனது மேல்தட்டு நண்பர்கள் கை கொடுத்தார்கள்.

மேல் தட்டு மத்திய தர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த ராமகிருஷ்ணன்.. உயர் மட்ட வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தார். ஒரு பெரிய ஹாலும் அதையொட்டிய சமையலறையும் மட்டுமே கொண்ட அவருடைய 'செட்டிநாடு மெஸ்' இன்று இரண்டு ஏக்கர் பரப்பளவில்.. நீச்சல் குள வசதியுடன்... ஆறு தளங்கள் கொண்ட நூற்று ஐம்பது அறைகளுடன் கூடிய நட்சத்திர ஹோட்டலாக உயர்ந்து நின்றது.

சந்தோஷிற்குப் பெண் கொடுக்க.. மேல் தட்டு வாசிகள் ஆர்வம் காட்டினர். ஆனால் சந்தோஷ்.. திருமணத்தில் ஆர்வம் காட்டவில்லை. அதில் ராமகிருஷ்ணனுக்கும்... ஜானகிக்கும் வருத்தம் நிறைய உண்டு.

''ஏன் இப்படியிருக்கான்னு தெரியலை சரசு. நீயாவது உன் தம்பிக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா...''

தினமும் மகளிடம் போனில் பேசும்போது.. தவறாமல் இந்த வார்த்தைகளைச் சொல்லிப் புலம்புவாள் ஜானகி.

சரஸ்வதியும் தம்பியிடம் பலவிதமாய்க் கேட்டுப் பார்த்து விட்டாள்.

''என்னை இம்ப்ரெஸ் பண்ணுகிறது போல.. ஒரு பெண் கூட என் கண்ணில் தட்டுப்படவில்லையே அக்கா..!'' என்று அவன் கூறிவிடுவான்.

''நீ பெண் பார்க்கப் போனால்தானே.. உன்னை இம்ப்ரெஸ் பண்ணும் பெண்ணை நீ பார்க்க முடியும்?'' சரஸ்வதி தம்பியை மடக்குவாள்.

''அப்பா கொண்டு வரும் இடமெல்லாம்.. ஹைடெக் அக்கா.. என்னை அது இம்ப்ரெஸ் பண்ணாது.''



''இதைப்பாருடா... நம் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தோடு.. அம்மாவின் கைமணத்தோடு.. வீட்டுச் சமையலின் ருசியோடு இருந்த மெஸ்ஸைக் காலி பண்ணி விட்டு.. ஹைடெக் ஸ்டார் ஹோட்டலைக் கொண்டு வந்திருக்கும் முதலாளியின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளா இது..?''

''அக்கா.. தொழில் என்பது வேறு.. வாழ்க்கை என்பது வேறு..''

''எப்பேர்ப்பட்ட கண்டு பிடிப்பு.. சொல்லு.. சொல்லு...''

''என் தொழிலில் நான் உச்சத்தைத் தொட ஆசைப் பட்டேன்.. தொட்டு விட்டேன்.. என் வாழ்க்கையில்.. மனதுக்குப் பிடித்த ஒரு பெண்ணோடு வாழ ஆசைப் படுகிறேன்.''

''அப்பா பார்க்கும் பெண்களில் ஒருத்திகூட உன் மனதைத் தொடாமல் போய் விடுவாளா..? நீதான் பெண் பார்க்கவே போக மாட்டேன் என்கிறாயாமே...''

''பெண் பார்க்கத்தான் போவதில்லை.. பெண்ணின் போட்டோவைப் பார்க்காமல் இருக்கிறேனா..? பார்க்கிறேனே...''

''வெறும் போட்டோவில் என்னடா தெரியும்..? அது வெறும் நிழல்டா...''

''நிழலிலேயே கர்வத்துடன் பார்க்கிறவள், நிஜத்தில் எப்படி இருப்பாள்.. நீயே சொல்லு...''

''சந்தோஷ்.. நீயாக எதையாவது நினைத்துக் கொண்டு கல்யாணத்தைத் தள்ளிப் போடாதே... ஹைடெக்

பெண்கள் வேண்டாமென்றால்.. மிடில் கிளாஸில் பெண் தேடச் சொல்கிறேன்.''

''அக்கா.. இங்கே வாழ்க்கைத் தரம் என்பது முக்கிய மில்லை. எனக்குப் பிடித்தவள் ஹைகிளாஸிலேயே அமைந்தால் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்? அப்படி ஒரு பெண்ணைக்கூட இதுவரை.. நான் பார்க்கவில்லையே, அக்கா.''

''என்னவோ போ.. உன் மனதில் என்ன இருக்கிறது என்று எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.''

சரஸ்வதி தம்பியுடன் போராடிப் பார்த்து விட்டு.. கடைசியில் பின்வாங்கி விட்டாள்.

''அம்மா.. அவன் மனதிற்குப் பிடித்த பெண்ணை அவனே பார்த்துக் கொள்ளட்டும். நாம் எது செய்தாலும் அவன் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. எனவே.. அவன் போக்கிலேயே அவனை விட்டு விடுங்க.''

சரஸ்வதி இப்படிக் கூறிய பின்னும்.. ஜானகிக்கு மனம் அலைபாயும்.. உறவினர் வீட்டு விசேஷங்களுக்குப் போனால்.. திருமண வயதிலிருக்கும் பெண்களை விழியால் பார்வையிடுவாள். அவர்களைப் பற்றி விசாரிப்பாள். அவர்களும் சந்தோஷ் இருக்கும் இடத்தைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். ஆனால் சந்தோஷ் அவர்களின் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்.

''என்ன பையனோ.. இப்படி பெண் வாடை ஆகாதுன்னு இருந்தால் எப்படி..?'' ஜானகி அங்கலாய்த்துக் கொண்டிருந்த போதுதான், அது நிகழ்ந்தது...



சுகந்தியைப் பெண் பார்க்கப பிரசன்னாவின் குடும்பம் வந்தபோது.. ராமகிருஷ்ணனின் குடும்பம் ஊரில் இல்லை... சரஸ்வதியின் வீட்டிற்கு.. பெங்களூருக்குச் சென்றிருந்தார்கள். திரும்பி வந்த பின்.. செய்தி அறிந்த சந்தோஷ்.. சுகந்தியிடம் விசாரித்தபோது.. அவள் தன் செல்போனில் படம் பிடித்து வைத்திருந்த பிரசன்னாவின் குடும்பத்தைக் காட்டினாள்.

## 16



சுகந்தி யதேச்சையாகத்தான் அந்தப் படங்களைப் பிடித்தாள். அவளுக்குப் பிரசன்னாவின் பேச்சும்.. தோற்றமும்.. கனிவான அவனது அணுகு முறையும்.. காதலைச் சொல்லிப் புரிய வைத்த விதமும் மிகவும் பிடித்திருந்தது.

அவனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவளுக்குள் தோன்றிவிட.. அவள் பிரசன்னாவை பால்கனியின் மறைவில் நின்று கொண்டு படம் பிடித்தாள். ஆனால்.. அவன் தனியாகப் படத்தில் விழவில்லை.. அவன் தோள் தொட்டுப் பேசிக் கொண்டிருந்த வாசவியும் சேர்ந்தே படத்தில் விழுந்தாள்.

அதோடு விடாமல்.. பிரசன்னாவின் பெற்றோரைப் படம் பிடிக்க அவள் முயன்றபோது.. திலகத்தின் தோளில் தலை சாய்த்துச் சிரித்துக் கொண்டிருந்த வாசவியும் சேர்ந்தே படத்தில் விழுந்தாள்.

''அண்ணா! வீட்டில் சொல்லி விடாதே. இதுதான் அவருடைய படம்.. நான் படம் எடுத்து வைத்திருப்பது யாருக்கும் தெரியாது. இது அவருடைய பேரண்ட்ஸ்.''

சுகந்தி ரகசியமாய்த் தன் செல்போனில் இருந்த படங்களைக் காட்ட.. சந்தோஷின் முகம் சட்டென்று மாறியது. அவன் பிரசன்னாவை விட்டு விட்டு.. அவன் தோள் தொட்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்த வாசவியையே.. வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

''இது யார் சுகந்தி...?''

''இவள்தான் வாசவி...''

''என்னவோ.. இதுதான் விக்டோரியா மகாராணி என்பது போலச் சொல்கிறாயே... இவள் என்ன அவ்வளவு பெரிய ஆளா?''

''அண்ணா.. உண்மையிலேயே இவள் பெரிய ஆள்தான். என் வருங்கால நாத்தனார்.''

''ஈஸிட்...''

அவன் திரும்பவும் படத்தைப் பார்த்தான். சீராக இல்லாமல் கலைந்த கூந்தலும்... அலட்சியமாய்க் கிடந்த துப்பட்டாவும்.. அவள் முகத்தில் தெரிந்த குறுகுறுப்பும்.. அவனை மீண்டும் மீண்டும் அவளைப் பார்க்கத் தூண்டின.

''இதுதான் உன்னவரின் பேரண்ட்ஸா.. நல்ல மாதிரியாகத்தான் தெரிகிறார்கள்.''

சந்தோஷ் காளிதாஸையும்.. திலகத்தையும் விட்டு.. திலகத்தின் தோளின் மேல் சாய்ந்து சிரித்துக் கொண்



டிருந்த வாசவியைப் பார்த்தான். அவளது 'பளீர்'ச் சிரிப்பு.. அவனை ஈர்த்தது.

'எப்பேர்ப்பட்ட சிரிப்பு இது. மனதிலிருந்து வரும் சிரிப்பு... இயல்பான சிரிப்பு.. காமெராவுக்காக இல்லாமல்.. தான் படம் எடுக்கப்படுவதைக்கூட அறியாத சிரிப்பு...''

''என்ன அண்ணா.. அவளையே அப்படிப் பார்க்கிறாய்...?''

''இல்லை சுகந்தி.. இப்படி வாய் விட்டுச் சிரிக்கிறாளே... அதைப் பார்த்தேன்...''

''உண்மையில் சொல்லப் போனால்.. அவளோடு பேசினால் நாம்தான் விழுந்து விழுந்து சிரிப்போம்.. அப்படி ஒரு வாயாடி.''

''நிஜமாகவா..?''

சந்தோஷ் ஆச்சரியத்துடன் படத்தைப் பார்த்தான். சீராகப் படர்ந்து நிற்கும் மலர்களை விட.. காடுகளில் தானாகப் பூத்துக் குலுங்கும் மலர்களிடம் இயற்கையின் வனப்பு அதிகம் இருக்கும்.

'இவள் காட்டு மலரா..?'

''நிஜமாகத்தான் அண்ணா.. அவள் வாயைத் திறந்தால் மூடவே மாட்டாள். பேசிக் கொண்டே இருப்பாள்...''

''நன்றாக ரம்பம் போடுவாள் என்று சொல்லு.''

''நீ ஒருமுறை அவளிடம் பேசிப் பார்த்து விட்டுச் சொல்லு.. அவள் ரம்பமா.. இல்லை இன்டரெஸ்டிங் பெர்ஸனாலிட்டியா என்று.''

'ஊம்.. அப்படியா... உன்னைப் பார்த்து விடவா?' அவன் மனதுக்குள் கேட்டபடி போட்டோவை மீண்டும் பார்த்தான்.

"ஓகே... அவளிடம் பேசிப் பார்த்து விட்டு.. நீ சொன்னது.. உண்மையா.. இல்லை பொய்யா.. என்று சொல்கிறேன்."

"அப்படியானால் நாளை மறுநாள்.. எனக்கு முகூர்த்தப் பட்டுச் சேலை எடுக்க என் மாமனார் வீட்டிலிருந்து இங்கே பொள்ளாச்சிக்கு வரப் போகிறார்கள். நீயும் கடைக்கு வா.. என் நாத்தனாரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

சுகந்தி விளையாட்டாகத்தான் அழைத்தாள். சந்தோஷிற்கு இருக்கும் வேலைப்பளுவில் அவன் ஜவுளிக் கடைக்கெல்லாம் எங்கே வரப்போகிறான் என்றுதான் அவள் நினைத்தாள்.

ஆனால் சந்தோஷ் சொன்னபடியே.. ஜவுளிக் கடைக்கு வந்து விட்டான்.. சுகந்தியிடம் பேசியபடியே.. வாசவியைக் கண்களால் தேடினான். அப்போதுதான் அது நிகழ்ந்தது.

திலகத்திடம் பேசிக் கொண்டே திரும்பிய வாசவி அவனைப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டாள்.

சந்தோஷ் பேசவே மறந்து.. 'ஆ'வென்று வாய் பிளந்து நின்று விட்டான்.

'என்னடா இது.. இவள் என்னைப் பார்த்துக் கண்ணடிக்கிறாளே..'

அவன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்க்க.. அவளது முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது. அவள் பதட்டத்துடன் திலகத்தின் பக்கம் நெருங்கி அமர்ந்து கொண்டாள்.



## 17



வாசவி பதட்டத்துடன் நகம் கடிக்க ஆரம்பித்தாள். நிமிடத்திற்கு ஒரு முறை சந்தோஷின் பக்கம் பார்ப்பதும்.. அவனது பார்வையைக் கண்டு பதட்டத்துடன் தாயின் பின்னால் மறைந்து கொள்வதுமாய் இருந்தவளைப் பார்த்த சந்தோஷிற்கு உண்மை விளங்கி விட்டது.

அவள் நிஜத்தில் அவளுடைய அண்ணனைப் பார்த்தோ இல்லை.. சுகந்தியைப் பார்த்தோ கண் சிமிட்டியிருக்க வேண்டும். ஆனால்.. எதிர்பாராத விதமாய் சந்தோஷ் அதைப் பார்த்து விட்டான். அந்தச் சங்கடத்தில் நாணப்பட்டு அவள் ஒளிந்து கொள்கிறாள்.

சற்று முன் குறும்பு கொப்புளிக்கும் விழிகளுடன் அவள் கண் சிமிட்டியது அவன் மனதில் ஆடியது. அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு அவளையே பார்த்தான்.

சுகந்தி வாசவியை அழைக்கவும்.. வாசவி தயங்கிக் கொண்டே வந்தாள். சந்தோஷ் பேச்சை வளர்த்து.. குரங்கிலிருந்து உருவான இனம்.. மனித இனம் என்பதில் வந்து நின்றான்.

சுகந்தி.. சந்தோஷை இனம் கண்டு கொண்டாள். வாசவியைப் பார்த்தாள். இது எதுவும் அறியாதவளாய் அவள் சண்டைக் கோழி போல் சிலிர்த்துக் கொண்டு... சந்தோஷிடம் சண்டைக்குப் போனாள்.

"அண்ணி! உங்க அண்ணன்கிட்ட சொல்லி வையுங்க. குரங்கிலிருந்து வந்தது முதலில் உங்கள் அண்ணன் தான். அதற்கப்புறம்தான் நான்..."

"அது ஏன் அப்படியாம் சுகந்தி..?"

"உங்கள் அண்ணனுக்கு என்ன நேற்றுப் பிறந்த பாப்பா என்ற நினைப்பா.. அண்ணி.. என்னைவிட வயதில்.. மிக... மிக... மிக.. மூத்தவர். அதனால்.. அவர் தானே குரங்கு இனத்திலிருந்து வந்த மனித இனத்திலும் மூத்தவர்."

"அது என்ன சுகந்தி உன் நாத்தனார் மிக.. மிக.. என்று நீட்டி முழக்குகிறாங்க. அப்படியொன்றும் நான் தடி யூன்றி நடக்கும் தொண்டுக் கிழவனில்லை.. என்று சொல் லம்மா."

"அதற்காக லாலிபாப் சாப்பிடும் குட்டிப் பையனு மில்லை."

விட்டால் அவர்கள் இருவரும் அன்று முழுவதும் வார்த்தைப் போரில் ஈடுபட்டிருப்பார்கள்.

ஆனால்.. மயில்வாகனம் அதற்கு விடவில்லை. அவர் மரியாதையுடன் பிரசன்னாவின் அருகே வந்து..

"சாப்பிடப் போகலாமா மாப்பிள்ளை..?" என்று கேட் டார்.

பிரசன்னா தயக்கத்துடன் காளிதாஸைப் பார்த்தான்.



"கல்யாணம் முடியாமல் சம்பந்தி வீட்டில் கை நனைக்க வேண்டாமென்று சொன்னேன், பிரசன்னா. அதற்குச் சம்பந்தி அவருடைய ஒன்று விட்ட அண்ணன் மகனின் ஹோட்டலில் மதிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறதாகச் சொல்கிறார்... அவங்க மனம் கோண வேண்டாம்.. சாப்பிட்டு விட்டே போகலாமே.." என்று காளிதாஸ் மகனிடம் பச்சைக் கொடி காட்டினார்.

பிரசன்னா.. சுகந்தியின் முக மலர்ச்சியைக் கவனித் தான். இன்னும் சிறிது நேரம்.. அவனுடைய அருகாமை யில் இருக்கலாம் என்பதில் வந்த முகமலர்ச்சி அது.. பிரசன்னாவின் மனம் மென்மையாகியது... அவனது கண்கள் சுகந்தியின் கண்களைச் சந்தித்தன...

அவர்கள் இருவரும் கண்களால் கவிதை பேசிக் கொண்டிருக்க... வாசவி.. மனதிற்குள் அலை பாய்ந்தாள்.

'ஒன்றுவிட்ட அண்ணன் மகனின் ஹோட்டல் என் றால்.. அது.. இந்த சந்தோஷின் ஹோட்டல்தானே... இவன் முகத்தை இன்னும் கொஞ்ச நேரம் பார்க்க வேண் டுமா..?'

அவளுக்குத் தெரியாது.. இது சந்தோஷின் ஏற்பாடு தான் என்பது.

சந்தோஷிற்கு அவளைப் பிடித்திருந்தது... ஏதோ ஒரு வகையில்... அவனால் இனம் காண முடியாத விதத்தில்.. வாசவி அவனைப் பாதித்தாள்.

அதைக் 'கண்டதும் காதல்' என்று வகைப்படுத்த அவன் தயாராக இல்லை. ஆனால் அவளை நேரில் பார்த்த முதல் வினாடியிலேயே.. விழி சிமிட்டிய அந்த மலர் முகத்தை அவனால் ஒதுக்கவும் முடியவில்லை.

சந்தோஷ்... வாசவியினால் வசீகரிக்கப்பட்டான்... அதே சமயம்.. அவளைப் பற்றி இன்னும் அறிந்து கொள்ள விரும்பினான்... அவனை உள்ளம் தேடுவது எதற்காக என்பதில் தெளிவு பெற விரும்பினான்.

கூடுமானவரை அவளுடன் சேர்ந்திருக்க.. அவளது செயல்பாடுகளைக் கணித்து ஒரு முடிவுக்கு வர விரும்பித்தான் தன் ஹோட்டலில்.. சுகந்தியின் வருங்கால மாமனார் குடும்பத்திற்கு விருந்து அளிக்க விரும்புவதாக மயில்வாகனத்திடம் சொன்னான். அவர் மகிழ்ந்து போய் விட்டார்.

வாசலில் நின்ற வெளிநாட்டுக் காரில் ஏறியபடி சந்தோஷ் தோரணையாய்த் திரும்பி.. வாசவியின் முக மாற்றத்தைக் கவனித்தான். அவள் முறைத்தாள். அவனுக்கு அது திருப்தியாக இருந்தது.

'ஸோ.. இவள் எனது அதிகப்படி வசதிகளால் ஈர்க்கப்படவில்லை.'

# 18



பிரம்மாண்டமான அந்த ஹோட்டல் வளாகத்திற்குள் கார்கள் வரிசையாக நுழைந்து நின்றன. ஹோட்டல் வாசலில் முதலில் தனிக் காரிலிருந்து இறங்கிய சந்தோஷ் நின்று.. வாசவியைப் பார்த்தான்.

'அடேங்கப்பா.. பெரிய மகாராஜா போல் லுக் விடுவதைப் பார்.. இவன்.. எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் எனக்கு என்ன ஆகப் போகிறதாம்.'



அவள் அலட்சியமாய் அவனுடைய ஹோட்டலைப் பார்த்தபடி இறங்கவும்... அவன் மனம் மலர்ந்தது. அவள் மட்டும்.. பிரமிப்பாய் அவனை ஒரு பார்வை பார்த்திருந்தால்.. அந்த நிமிடமே அவளுக்கு 'குட்பை' சொல்லி விட்டுப் போயிருப்பான் அவன்.

மாறாக அவளுடைய அலட்சியம் அவள் அவனது பணத்தை ஒரு பொருட்டாகவே நினைக்காததைத் தெரியப்படுத்த அவன்... அவள் மேல் மையலானான்.

காளிதாஸும் திலகாவும்.. ஒரு புறம் அமர.. அவர்களுக்கு எதிரில் மயில்வாகனமும்.. பரிமளமும் அமர்ந்தனர்...

பிரசன்னா.. சுகந்தியின் அருகே அமர... அவர்களுக்கு எதிரே வந்து அமர்ந்தாள் சுமதி.

''வாசவி.. சுமதியின் பக்கத்தில் உட்காரம்மா..'' என்று பரிமளம் ஆதரவாய்க் கூற...

''இந்தப் பீப்பாயின் பக்கத்தில் உட்கார்ந்தால் எனக்குச் சாப்பாடு தொண்டையில் இறங்காது..'' என்று பிரசன்னாவின் காதருகே குனிந்து கூறி விட்டு.. பரிமளம் கூறியது காதில் விழாதது போல்.. தனியாகச் சென்று அமர்ந்தாள் வாசவி...

''என்ன சுகந்தி இது.. உன் அக்காவிற்குக் கொஞ்சம் கூட இங்கிதம் தெரியாதா...'' பிரசன்னா குனிந்து சுகந்தியின் காதோரமாய் முணுமுணுத்தான்.

''நீங்க வாய்விட்டுச் சொல்லிட்டிங்க. என்னால் சொல்ல முடியவில்லை..'' பதிலுக்கு முணுமுணுத்தாள் சுகந்தி.

அவர்கள் இருவரும் குனிந்து பேசிக் கொள்வதைப் பார்த்த சுமதிக்கு உள்ளுக்குள் எரிந்தது.

'ஒருநாள்.. ஒரு பொழுது.. அந்த மனுசன் என்னிடம் இப்படிக் கொஞ்சிக் குலாவியிருப்பாரா..? ம்ஹூம்.. இந்தச் சுகந்திக்கு.. எல்லாத்திலும் யோகம்தான்..'' என்று மனதிற்குள் குமைந்தவள் -

''சுகந்தி.. இன்னும் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகவில்லை. நினைவிருக்கிறதா..?'' என்று கேட்டாள்.

சுகந்தி செய்வது அறியாமல் பிரசன்னாவைப் பார்க்க... பிரசன்னா.. கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்.

''என் வீட்டுக்காரர் கல்யாணம் ஆகி ஒரு வருடம் மத்தவங்க பார்க்கிறபோது என்கிட்ட பேசக்கூட மாட்டார்... அப்படி.. கட்டு திட்டமாய் இருந்தவங்க நாங்க.''

''ஊஹூம்.. இது தாங்காது...'' என்று சுகந்தியின் பக்கம் சரிந்து முணுமுணுத்த பிரசன்னா.. வாசவியின் பக்கம் திரும்பி...

''வாசவி.. வாசவி...'' என்று கூப்பிட்டான்.

''என்ன அண்ணா..?''

''இங்கே வா...''

வாசவி.. சுமதியை முறைத்துக் கொண்டே எழுந்து வர.. ''நீ சுகந்தியின் அக்கா பக்கத்தில் உட்காரும்மா.. பாவம்! அவங்களுக்கு கம்பெனி கொடுக்க ஆள் வேண்டாமா?'' என்று கூறினான்.

'அதற்கு நான்தான் கிடைத்தேனா...' என்று பார்வையாலேயே... தமையனை வாசவி எரிக்க.. அவன் சுமதிக்குத் தெரியாமல் கையெடுத்துக் கும்பிட்டு..



'காப்பாற்று..' என்று சைகை செய்தான்.

'ஓ..ஹோ.. அப்படியா சேதி..' என்று சுமதியைப் பார்த்த வண்ணம் அவளருகில் உட்கார்ந்து கொண்டாள் வாசவி..

சுமதி விட்ட இடத்திலிருந்து பேச ஆரம்பித்தாள்.

''மத்தவங்க முன்னால்.. என் பக்கத்தில்கூட உட்கார மாட்டார்.''

வாசவி.. விசித்திரமாய்ச் சுமதியைப் பார்த்துவிட்டு..

''இவங்க யாரைச் சொல்கிறாங்க அண்ணி...?'' என்று வினவினாள்.

''அவளைத்தான் சொல்லிக் கொள்கிறாள்...''

''ஏன் இவங்களோட ஹஸ்பென்ட் இவங்க பக்கத்தில் உட்கார மாட்டாராம்? இவங்களை அவருக்குப் பிடிக்காதா?''

வாசவி கேட்ட விதத்தில் சுகந்திக்குச் சிரிப்பு வந்து விட்டது. பிரசன்னா.. மரியாதையின் பொருட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு.. முகம் மாறாமல்.. சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சுமதியின் முகம் விழுந்து விட்டது.

''ம்ஹூம்.. காலம் ரொம்ப மாறிப் போச்சு..'' என்று பெருமூச்சு விட்டாள்.

''பார்த்து.. நீங்கள் விடும் பெருமூச்சில் உங்கள் முன்னால் இருக்கும் தட்டு பறந்து விடப் போகிறது!'' என்று வாசவி கிண்டலடித்தாள்.

அடுத்த அரை மணி நேரமும்.. சுமதியும்.. வாசவியும் வாக்குவாதத்தில் மூழ்க.. சுமதியின் கண்காணிப்பி

லிருந்து தப்பிய பிரசன்னாவும்.. சுகந்தியும்.. காதல் கடலில் மூழ்கினார்கள்.

# 19



சந்தோஷ் வாசவியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் சுமதியை வம்புக்கு இழுத்துக் கொண்டிருப்பதையும்.. சுமதியின் ஆணவமான பேச்சுக்களை.. அலட்சியமாய் எதிர் கொள்வதையும் ரசித்துக் கொண்டிருந்தான்.

ஊடே ஓரிரு முறை சந்தோஷின் பக்கம் ஒரு வெட்டும் பார்வையைச் செலுத்திய வாசவி.. உடனே தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

வாசவியின் கேள்விக் கணைகளில் இருந்து தப்பிக்க அவசரமாய்.. சாப்பிட்டு முடித்தேன் பேர்வழியென்று சாப்பிட்டதாய்ப் பெயர் பண்ணிவிட்டு.. எழுந்து.. கை கழுவச் சென்று விட்டாள் சுமதி.

''ஏன் அண்ணா.. இவங்களைச் சமாளிக்கத் திறமையில்லை.. என்னைத் துணைக்குக் கூப்பிடுகிறீங்க. இதில் அண்ணியிடம் காதல் ரசம் வேறு பிழியறீங்க. அண்ணி..! அண்ணன் சுத்த வேஸ்ட். இவரிடம் போய் மயங்குகிறீங்களே.''

''நீ வேற... சுமதியின் முன்னால் யாராலும் தாக்குப் பிடித்து நிற்க முடியாது.. உன் ஒருத்தியினால் மட்டும்



தான் முடியும்.. அவள் முன்னால் நானே வேஸ்ட். அப்புறம் உன் அண்ணன் எம்மாத்திரம்.''

''அடடா.. காதல் கணவரை விட்டுக் கொடுக்க மாட்டிங்களே.''

''காதல் கணவரா..?''

''ஆமாம்...''

''உன் அண்ணனையா சொல்கிறாய்...?''

''பின்னே... வேறு யாரைச் சொல்வேன் என்று நினைக்கறீங்க. அண்ணி.. இது அநியாயம்.. தினமும் இரண்டு மணி நேரம் செல்போனில்.. என் அண்ணனிடம் கடலை போட்டுவிட்டு.. இப்போது போய் ஒரு கேள்வியைக் கேட்கறீங்களே.''

''இதை நான் கேட்கவில்லையம்மா..''

''வேறு யார் கேட்டது...?''

''என் கூடப் பிறந்தவள் கேட்டு விட்டுப் போகிறாள்.. எனக்கும் உன் அண்ணனுக்கும் இன்னும் கல்யாணம் நடக்கவில்லையாம்.''

''அதுதான் நடக்கப் போகிறதே.''

''அதற்கு முன்னால்.. அவர் பக்கத்தில் நான் உட்காரக் கூடாதாம்.''

''ஓஹோ.. அதற்குத்தான்.. அவங்க ஹஸ்பெண்ட் கல்யாணம் ஆன பின்னாலும்.. அவங்க பக்கத்தில் உட்கார மாட்டார்ன்னு ஒரு கதையைச் சொன்னாங்களா..''

''என்னவோ.. போ வாசவி.. உன் புண்ணியத்தால் நான் இன்றைக்குத் தப்பித்தேன்.''

"என்னை நம்பினோர்.. என்றும் கைவிடப்படார்.."

வாசவி விளையாட்டாய் ஆசிர்வதிப்பது போல் கை காட்டி விட்டு எழுந்து கை கழுவச் சென்றாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த சுகந்தி.. பிரசன்னாவைப் பார்த்து,

"ஸ்வீட் கேர்ள்.." என்றாள்.

"இவளைத்தான் நீ பொறாமையாகப் பார்த்தாய்!" என்றான் அவன்.

"தெரியாமல் பேசி விட்டேன். ஐ ஆம் ஸாரி."

"அதெல்லாம் மன்னிக்க முடியாது."

"மன்னிக்காமல் என்ன செய்வீங்க?"

"சொல்லவா?"

அவன் குனிந்து அவளுடைய காதில் சொன்னான். அவள் முகம் சிவந்தாள்.

வாசவி கை கழுவி விட்டுத் திரும்பும்போது... அருகில் கை கழுவுவது போல் வந்து நின்ற சந்தோஷின் மேல் மோத இருந்து கடைசி நொடியில் விலகி நின்றாள்.

"ஐ ஆம் ஸாரி!" என்றான் சந்தோஷ்.

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் சுற்று முற்றும் பார்க்கவும்.. அவனது புருவங்கள் உயர்ந்தன.

"சார்.. நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்," என்றாள் வாசவி அவசரமான குரலில்.

"என்ன சொல்லப் போகிறாள்? ஏன் இந்தத் திருட்டுத் தனம்? உன்னைப் பிடித்திருக்கிறது என்று சொல்லப்



போகிறாளா? கடைசியில் இவளும்.. என்னிடமிருக்கும்.. பணத்தைப் பார்த்து மயங்கி விட்டாளா..?'

அவனுக்குள் கசந்தது.. அவளை உதாசீனமாய் அவன் பார்ப்பதை உணராதவளாய் அவள் அவசரமாகப் பேசினாள்.

"இன்றைக்குக் காலையில் நான்.. என் அண்ணியைப் பார்த்துத்தான் கண் சிமிட்டினேன்... அவங்க பக்கத்தில் நீங்கள் வந்து நின்றது கூட எனக்குத் தெரியாது. ஸோ.. தெரியாமல் நடந்து விட்டதை நீங்கள் மறந்து விடுங்கள். தயவு செய்து வேறு யாரிடமும் சொல்லி விடாதீர்கள். உங்களுக்கும் புண்ணியமாகப் போகும்."

அவள் பேசப் பேச... அவனுடைய முகம் மலர்ந்தது. அவளையே அவன் ஆர்வமாகப் பார்த்தான்.

"சொல்லாமல் இருப்பதால் எனக்கு என்ன லாபம்?"

சந்தோஷ் குறும்பாகக் கேட்க.. வாசவி செய்வதறியாது அவனை முறைத்தாள். அவளது முறைப்பைக் கண்டு.. அவன் இன்னும் அதிகமாக வாய் விட்டுச் சிரித்தான்.

## 20



அவன் சிரிக்கும்போது தெரிந்த பல் வரிசையை அவள் பிரமிப்புடன் பார்த்தாள். அவனது கரிய அடர்த்தியான மீசையின் கீழ்த் தெரிந்த பல் வரிசை அவளை அசத்தியது.

'ஆள் அழகாகத்தான் இருந்து தொலைக்கிறான்..' என்ற எண்ணம் அவளுள் எழ.. அவன் அவசரமாய் அதை மனதின் ஆழத்தில் அமிழ்த்தினான்.

''லாப.. நஷ்டக் கணக்கைப் பார்ப்பதற்கு இது ஒன்றும் உங்கள் ஹோட்டல் பிஸினெஸ் இல்லை சார்.. என் மரியாதை சம்பந்தப்பட்டது...''

''நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை.. நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். போதுமா?''

''போதும்...''

''மறந்தும் கூட நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை நான் சொல்ல மாட்டேன்.''

''தேங்க்ஸ்...''

''சுகந்தியிடம் கூட.. நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினாய் என்று நான் சொல்ல மாட்டேன்.''

''ராமா...''

''அவரை ஏன் கூப்பிடுகிறாய்? தூக்கத்தில் எழுப்பி என்னைக் கேட்டால்கூட.. நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை நான் சொல்ல மாட்டேன்.''

''கடவுளே...''

''அவரிடம் கூட.. நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை நான் சொல்ல மாட்டேன்.''

வாசவிக்குச் செய்வதறியாத கோபம் கொப்புளித்துக் கொண்டு வந்தது. அவள் நம்பியாரைப் போல் கையைப் பிசைந்து கொண்டு அவனைப் பார்த்தாள்.

''ஏன் சார்.. இப்படி என் மானத்தை வாங்குகிறீங்க.''



''ஏன்.. நான் என்ன செய்தேன்?''

அவன் அறியாப் பிள்ளை போல்.. கண்களை விரித்தான். அப்படியே அவனது காதைப் பிடித்துத் திருகி.. முதுகில் நாலு போடு போடலாமா.. என்று வாசவிக்குத் தோன்றியது.

''என்ன செய்தேன் என்றா கேட்கறீங்க.. நான்தான் உங்களைப் பார்த்துக் கண் சிமிட்டவில்லை.. என் அண்ணியைப் பார்த்துக் கண் சிமிட்டினேன். அதைத் தவறுதலாக நீங்கள் பார்த்துத் தொலைத்துட்டிங்கன்னு விலாவாரியாய் விளக்கம் சொன்னேனே.. அது உங்கள் மரமண்டையில் ஏறவேயில்லையா..?''

''நான்தான் நீ என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை.. யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றுதானே... ஆ... ஆ..''

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே... அவள் அவன் வாயை ஒரு கையால் பொத்தி.. மறு கையின் ஆள்காட்டி விரலை.. தன் இதழ்களில் வைத்து..

''மூச்... வாயைத் திறக்கக் கூடாது. திறந்தால் கொன்றே விடுவேன். நீங்கள் பெரிய மன்மதன்.. உங்களைப் பார்த்து நான் கண் சிமிட்டினேன். இதை நீங்கள் ஏலம் போட்டு ஒப்பித்துக் கொண்டிருக்கிறீங்க. இன்னொரு முறை இந்தப் பேச்சு உங்கள் வாயில் வந்தது, உங்கள் குடலை உருவி மாலையாய்ப் போட்டு விடுவேன். ஜாக்கிரதை...'' என்றாள்.

தன் வாயைப் பொத்தியிருந்த அவளது கையில் மென்மையாய் முத்தமிட்டான் சந்தோஷ். அவள்

அதிர்ச்சியுடன் கையை அவசரமாக விலக்கிக் கொள்ள.. அவன் உல்லாசமாய் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''இதோ பார்.. நான் கணக்கு விஷயத்தில் கறாராய் இருப்பவன். கொடுக்கல் வாங்கலில் நூல் மேல் நடப்பவன். யாரிடமும்.. வாங்கியதைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதில்லை... அதுவும்.. ஒன்றை வாங்கினால்.. அதை நூறாகித் திருப்பிக் கொடுப்பேன்.''

''எனக்குப் புரியவில்லை.''

''இப்போது புரியும்.''

சந்தோஷ் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான். வாசவிக்கு மயக்கமே வந்து விட்டது.

''என்ன... என்ன செய்கிறீங்க?''

''தெரியவில்லையா.. கண் சிமிட்டினேன்.''

''என்ன தைரியம்.. என்னைப் பார்த்து எப்படி நீங்கள் கண்ணடிக்கலாம்?''

''நீ மட்டும் என்னைப் பார்த்துக் கண்ணடிக்கலாமா?''

''அது தெரியாமல் நடந்த விசயம்.''

''ஆனால்.. எனக்குத் தெரிந்து.. எனக்கு நடந்து விட்டதே.''

''கடவுளே.. அதனால் நீங்கள் என்ன குறைந்து போய் விட்டீர்களாம்...''

''நான் கல்யாணம் ஆகாத கன்னிப் பையன்.''

''ராமா...''

''என் மனது கெட்டு விட்டதே...''



''பெருமாளே...''

''யாரை நீ கூப்பிட்டாலும் என் மனது சரியாகுமா..?''

''அதனால்...''

''நீ கொடுத்ததை நூறாய் உனக்குத் திருப்பிக் கொடுக்கப் போகிறேன்.''

வாசவிக்கு அழுகையே வந்து விட்டது. கண்களில் நீர் மல்குவதை உணர்ந்ததும் அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

## 21



ஒன்றுக்குப் பத்தாய்த் திருப்பித் தருவது என்பதை வாசவி கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால்.. இந்த மாதிரியான ஒரு நிகழ்வை.. ஒன்றுக்கு நூறாய்த் திருப்பித் தருவதை இப்போதுதான் கேள்விப்படுகிறாள்.

''ஏன் சார்.. நீங்கள் என்னவோ பெரிய சாதனையாளர்.. அது.. இதுன்னு.. சூப்பர் ஸ்டார் ரேஞ்சுக்கு உங்க தங்கை பில்ட் அப் கொடுத்தாங்களே.. அதெல்லாம் பொய்யா?''

''அதற்கும்.. இதற்கும் என்ன சம்பந்தம்?''

''சூப்பர் ஸ்டார் ஒரு படத்தில்.. நான் ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்னதாக அர்த்தம்னு சொல்லுவாரே...''

சந்தோஷ் சிரிக்காமல் அவள் முகத்தையே பார்த்தான். எங்கே அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தால்.. இன்னொரு முறை கண் சிமிட்டி வைத்து விடுவானோ.. என்ற பயத்தில்.. வாசவி அவனைப் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் சினிமா பார்ப்பதில்லை.''

''அதனால் என்ன... இந்த வசனத்தை நீங்களும் பாலோ பண்ணுங்களேன்...''

''எப்படி...?''

''நீங்கள் ஒருமுறை செய்ததை.. நூறு முறை செய்த தாகக் கணக்கு வைத்துக் கொள்ளுங்களேன்.''

''அதாவது.. நான் ஒருமுறை உன்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதை.. நூறு முறை நான் உன்னைப் பார்த்துக் கண் சிமிட்டியதாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமாக்கும்.''

''அதற்கு இத்தனை விளக்கம் சொல்ல வேண்டு மாக்கும்.''

''உனக்குப் புரிய வேண்டாமா..?''

''எனக்குப் புரிய வைப்பதில்தான் உங்களுக்கு எவ்வளவு அக்கறை..? ச்ச்ச்...''

''ஏன்..? எனக்கு உன் மேல் அக்கறை இருக்கக் கூடாதா.. இருந்தால் ஆகாதா..?''

''ஆஹாஹா.. உங்களின் அக்கறையைத்தான் நான் இப்போது பார்த்தேனே.''

''எப்போது...?''



அவன் மீண்டும் அறியாப் பிள்ளை போல் வினவினான். அவன் கண்களில் சிரிப்பு இருந்தது.

அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவன் கண் சிமிட்டியதை.. அவள் வாயால் சொல்ல வைக்க வேண்டும் என்று பார்க்கிறானா?

''சார்.. இப்போது நீங்க ஒரு முடிவுக்கு வாங்க.''

''எதைப் பற்றி...''

''சும்மா.. விளையாடாதீங்க சார்.''

''விளையாடுகிறேனா..? உன்னுடனா..? குட் ஜோக். நீதான் என்னை எவனோ ஒருவன் போல நினைத்துக் கொண்டு.. 'சார்.. சார்' என்று கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறாய்.''

''உங்களை 'சார்' என்று கூப்பிடாமல் வேறு எப்படிக் கூப்பிடுவது...? ச..ந்..தோ..ஷ்..ன்னா கூப்பிட முடியும்?''

அவள் ராகம் போட்டுக் கூப்பிட்டுக் காட்ட -

''ஏன்.. பெயர் சொல்லிக் கூப்பிட்டால்தான் என்ன...?'' என்று வினவினான் அவன்.

''இப்போது அதுவா சார் பிரச்னை?''

''எனக்கு எதுவுமே பிரச்னை இல்லை.''

''உங்களுக்கு இருக்காது. அதுதான்.. எனக்குத் தெரியுமே.''

''உனக்குத் தெரியாதது.. இன்னும் நிறைய இருக்கிறது.''

''தாராளமாய் இருக்கட்டும்.. உங்கள் பெர்சனல் மேட்டர் உங்களோடு... எனக்கு அதில் அக்கறையில்லை.''

"அப்படியா..?"

"அப்படித்தான். அங்கே அப்பா.. அம்மா.. சாப்பிட்டு முடித்து விட்டாங்க.. எழுந்து கை கழுவ வந்து விடுவாங்க."

"வரட்டுமே."

"உங்களுக்கு ஒன்றுமில்லை. எனக்குத்தான் கஷ்டம்."

"என்ன கஷ்டம்?"

வாசவி எரிச்சலுடன் அவனைப் பார்த்தாள். அவன் புரியாதவன் போல்... பார்த்துக் கொண்டு நின்றான்.

'இவன் என்ன சின்னப் பாப்பாவா!'

"உங்களுடன் நான் தனியாக நின்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால்.. தவறாக நினைக்க மாட்டாங்களா..?"

"இதில் தவறாக நினைக்க என்ன இருக்கிறது?"

'ஊஹூம்.. இவனுடன் பேசினால் வேலைக்கு ஆகாது..' என்ற முடிவுடன் அவள் நகரப் போனாள்.

"இப்படிப் பாதியிலேயே பேச்சை நிறுத்தி விட்டுப் போனால் எப்படி?"

"நீங்கள் இன்றைக்குப் பூராவும் பேச்சை இழுத்துக் கொண்டு போவீர்கள்.. எனக்கு அது தாங்காது."

"அப்படியா.. உனக்குப் பேசப் பிடிக்காதா? சுகந்தி அப்படிச் சொல்லவில்லையே.. உனக்குப் பேசப் பிடிக்கும்னு சொன்னாளே... ஒருவேளை.. உனக்கு நீ மட்டுமே பேசிக் கொண்டிருந்தால்தான் பிடிக்கும்போல..



மற்றவங்க பேசி நீ கேட்பதாக இருந்தால் பிடிக்காது போல."

அவன் இப்போதைக்குப் பேச்சை நிறுத்த மாட்டான் என்பது புரிந்து போக.. வாசவி அவசரமாக நகர்ந்து விட்டாள்.

# 22



"அப்போ.. நாங்க கிளம்புகிறோம், சம்பந்தி.."

காளிதாஸ் விடைபெற்றார். பிரசன்னா டிரைவர் சீட்டில் உட்கார.. திலகமும்.. வாசவியும் பின் சீட்டில் அமர.. காளிதாஸ் பிரசன்னாவின் அருகே அமர்ந்து கொண்டார்.

"போய் வருகிறேன் அண்ணி."

வாசவி.. சுகந்தியிடம் கையாட்டியபோது.. சுகந்தியின் பின்னால் நின்று கொண்டிருந்த சந்தோஷ்.. மற்றவர்கள் அறியாமல் வாசவியைப் பார்த்து.. ரகசியமாக.. கண் சிமிட்டினான்.

சுகந்திக்காக அசைத்த கை அப்படியே இருக்க.. வாசவி.. அசைவற்று அமர்ந்து விட்டாள். கார் கிளம்பி விட்டது.

'எவ்வளவு தைரியம்.. சொல்லச் சொல்லக் கேட்காமல்.. திரும்பவும் கண் சிமிட்டுகிறானே...'

வாசவிக்கு மனமே ஆறவில்லை. அடுத்து வந்த நாட்களில் இருபத்து நான்கு மணி நேரமும்.. விழி சிமிட்டிய அவனது நினைவே.. அவளது மனதில் நின்றது.

பிரசன்னாவின் திருமண நாள் நெருங்கி வந்தது... திருமண வீட்டின் பரபரப்பு அவளையும் தொற்றிக் கொள்ள... மெல்ல.. சந்தோஷின் நினைவு அவளை விட்டு அகன்று விட்டது.

உறவினர்களின் வருகையால் வீடே நிறைந்திருக்க வாசவி.. வீட்டிற்குள் ஓடி.. ஆடி.. வேலை செய்து கொண்டிருந்தாள்.

''வாசவி... மண்டபத்திற்குக் கொண்டு போக வேண்டிய சாமான்களின் லிஸ்ட் எங்கே...''

''இதோம்மா...''

''அண்ணனின் பெட்டியில் அவனுடைய புது டிரெஸ் பட்டு வேட்டி.. சட்டை.. கோட்.. சூட்.. எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டாயா?''

''ஆச்சு...''

''பெண்ணுக்கு எடுத்த பட்டுப் புடவைகள்.. நகை.. தாலி எல்லாம் எந்தப் பெட்டியில் வைத்திருக்கிறாய்?''

''அதை என் கையிலிருக்கும் பெட்டியிலேயே வைத்திருக்கிறேன்.''

''என் சமர்த்துக் குட்டி.''

''ஆமாம்.. இன்னும் சர்க்கரைக் கட்டி.. வெல்லக் கட்டின்னு கொஞ்சுங்க. கல்யாண மண்டபத்திற்குக் கிளம்ப நேரமாகி விட்டது. இப்படியா.. மசமசன்னு நிற்பீங்க...?''

''நான் ரெடியாகத்தான்டி நிற்கிறேன். நீதானே இன்னும் சேலையைக் கட்டிக் கொள்ளாமல் இப்படி அலங்கோலமாக நிற்கிறாய்.''



''ஏம்மா.. இது அலங்கோலமா? எவ்வளவு அழகான சுடிதார் செட் இது.''

''போய்.. முதலில் சேலையைக் கட்டு.''

''எனக்குத்தான் சேலை கட்டத் தெரியாதே...''

''நான் கட்டி விடுகிறேன்... வா...''

''தப்பிக்க விடவே மாட்டேன்கறீங்களே.''

வாசவியைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் அழைத்துக் கொண்டு போனாள் திலகம்.

சற்று நேரத்தில் அறைக்குள்ளிருந்து வெளியே வந்த வாசவியைப் பார்த்த பிரசன்னா ஆச்சரியப்பட்டுப் போனான்.

''ஏம்மா.. நம்ம வாசவி எங்கேம்மா.. காணோம்.''

''அண்ணா.. வேண்டாம்.. நாளைக்குக் கல்யாணம் ஆகப் போகிற கெத்தில் என்னிடம் வம்புக்கு வராதே...''

''அட.. இது நம்ம வாசவியா.. என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லையே.. பெரியப்பா.. பெரியம்மா... சித்தி.. சித்தப்பா.. அத்தை... மாமா.. எல்லோரும் வாங்க.. இது வாசவியாம்.. உங்களில் யாருக்காவது அடையாளம் தெரிகின்றதா...?''

பிரசன்னா அழைத்ததில்.. ஆங்காங்கே நின்று கொண்டிருந்த உறவினர்கள் வீட்டுக்குள் வந்து கூடினார்கள். வாசவியைப் பார்த்து முகவாயில் கை வைத்தார்கள்.

''என்னமாய் அழகா இருக்கேடி ராஜாத்தி.. இத்தனை அழகையும்.. இத்தனை நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தாய்..?'' வாசவியின் பெரியம்மா.. அவளின் கன்னம் தொட்டு வழித்து.. திருஷ்டி கழித்தாள்.

அழகாய்.. தழையத் தழையப் பட்டுப் புடவை கட்டி.. தலை முடியைப் பின்னலிட்டு.. அதில் மொட்டாக இருந்த மல்லிகைச் சரத்தை இரு பக்கமும் தோளில் வழியுமாறு வைத்து.. கண்களுக்கு மையும்.. நெற்றியில் கல் பதித்த ஸ்டிக்கர் பொட்டும்.. காதுகளில் கல் ஜிமிக்கியும்.. உள்ளங்கழுத்தில் கல் அட்டிகையும்.. கைகளில் கல் பதித்த பொன் வளையல்களுமாக நின்ற வாசவி.. அன்று புதிதாகத்தான் தெரிந்தாள். எல்லோரும் விழி விரியத் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த வாசவி வெட்கப் பட்டாள். அதுவே.. சந்தோஷ் கண்கள் பளிச்சிட அவளை விழுங்குவது போல் பார்த்தபோது எரிச்சல் பட்டாள்.

'ம்ஹூம்.. இத்தனை நாள் இவன் நினைவில்லாமல் நிம்மதியாக இருந்தாயிற்று. இப்போது கல்யாணம் நடந்து முடியும் வரை இவனுடைய பார்வையில் நான் பட்டுத் தொலைப்பேனே.. என் பார்வையில் இவனும் பட்டுத் தொலைப்பானே...'

அவள் முகம் மாறுவதை உணராதவன் போல் அவன் அவளுக்கு மட்டும் புரியும்படியாகக் கண் சிமிட்டினான்.

## 23



வாசவிக்கு ரத்தம் உச்சந்தலையில் பாய்ந்தது போல் 'கிர்'ரென்று ஆகிவிட்டது. அவன் கண் சிமிட்டியதை வேறு யாரும் பார்த்து விட்டார்களோ என்ற பயத்துடன்



சுற்று முற்றும் பார்த்தாள். எல்லோரும் திருமண வீட்டின் சூழலில் கலந்து விட்டிருந்தார்கள்.

வாசவி.. அவனுக்கு அருகில் சென்று வேறு திசையில் பார்த்துக் கொண்டு.. பல்லைக் கடித்தபடி மெதுவான குரலில் முணுமுணுத்தாள்.

''மிஸ்டர்.. நீங்கள் மற்றவர்களுக்கு வேண்டுமானால் பெரிய ஆளாக இருக்கலாம்.. எனக்கு இல்லை.. ஸோ... அடக்கி வாசியுங்க.''

''மிஸ்டரா.. என் பெயர் சந்தோஷ்.''

''அதுபாட்டுக்கு இருக்கட்டும். எனக்கென்ன வந்தது.''

''அப்படியா.. ஆனால் எதை அடக்கி வாசிக்கச் சொல்கிறாய்?''

''எதையென்று தெரியாதா?''

''தெரியவில்லையே...''

''ம்ஹூம்... இடி மன்னன் என்றுதான் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இப்படிக் கண் சிமிட்டுவதில் மன்னனாக இருக்கும் ஆளை இப்போதுதான் பார்க்கிறேன்.''

''இதோ பார்.. நான் சொன்ன வார்த்தை தவறாதவன்.''

''பலே.''

''கணக்கென்றால் எனக்கு மிகச் சரியாக இருக்க வேண்டும்.''

''அப்படியா...''

''நூறு என்றால் நூறுதான்.''

''ஓஹோ...''

"இதுவரை மூன்று முறை உன்னைப் பார்த்துக் கண் சிமிட்டியிருக்கிறேன். இன்னும் தொண்ணூற்று ஏழு.. பேலன்ஸில் இருக்கின்றது."

"இதில் பேலன்ஸ் ஷீட் வேறா.. வெரிகுட்."

"பின்னே.. என்னை வேறு யாரென்று நினைத்தாய்...?"

"நான் உங்களைச் சரியாகத்தான் புரிந்து வைத்திருக்கிறேன்."

"அ...து.."

"ஆனால் மற்றவர்கள்தான் உங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை... உங்களைப் போய் 'ஜென்டில் மேன்'னு பொய்யாய் நம்புகிறார்கள்."

"நீ வேண்டுமானால்.. என் சுயரூபத்தைப் பற்றி எல்லோரிடமும் பிட்டுப் பிட்டு.. வைத்து விட்டு வா."

"சொல்லி என்ன பிரயோஜனம்? என் தொண்டைத் தண்ணீர்தான் வற்றும்... ஒரு.. ஈ எறும்பு.. கூட என் பேச்சை நம்பித் தொலைக்காது."

"ச்சோ.. ச்சோ."

"ரொம்பவும் எனக்காகப் பரிதாபப் பட வேண்டாம்."

"எனக்கு மனது தாங்கவில்லையே..."

"அடடா.. என்ன நடிப்பு.. என்ன நடிப்பு.. நடிகர் திலகம் கூட உங்களிடம் புதிதாய் நடிப்புக் கற்றுக் கொள்ள ஓடி வந்து விடுவார்."

"தாராளமாய் வரட்டும்.. சொல்லித் தர நான் ரெடி."

"ஆனால் கற்றுக் கொள்ள அவர் ரெடியில்லை."



"ஏன்.. என்ன ஆனது?"

"இந்தக் கொடுமையெல்லாம் வந்து விடும்ன்னுதான் ரொம்ப நாளைக்கு முன்னாலேயே.. அவர் கடவுள் கிட்ட ஓடி விட்டார்..."

"ஓ.. காட்..."

"அவர் கடவுளின் பக்கத்தில் நிம்மதியாய் இருக்கட்டும். விட்டு விடுங்கள். ஆமாம்.. பெண்ணையே நாங்கள் இன்னும்.. அழைத்து வரவில்லை.. நீங்கள் ஏன்.. முந்திரிக் கொட்டை போல் முந்திக் கொண்டு வந்து நிற்கிறீங்க?"

"உன்னை வரவேற்கத்தான்."

"ம்ஹூம்.. இப்படி ஒரு வரவேற்பு எனக்காக இந்தக் கல்யாண மண்டபத்தில் காத்திருப்பது எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் காய்ச்சல்ன்னு இழுத்துப் போர்த்திக் கொண்டு.. வீட்டிலேயே படுத்திருப்பேன்."

"நான் டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டு உன் வீட்டிற்கே வந்திருப்பேன்."

"அங்கேயும் என்னை விட்டு வைக்கும் எண்ணமில்லை.. போல."

"விடுவதா... உன்னையா... நெவர்."

அவன் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை ஈர்த்தது. ஆண்மையின் கம்பீரத்துடன்.. ஆறடி உயரத்தில் நிமிர்ந்து நின்றவனின் தோற்றம் அவளை வசீகரிக்க.. அவள் அவசரமாய் விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.

'சே.. என்ன நினைப்பு இது.. இவனைப் போய் சைட் அடிக்கிறேனே... இவனிடமிருக்கும் பணத்திற்கு.. இவன்

எனக்கு எட்டாக் கனி ஆயிற்றே..' வாசவி மனதிற்குள் தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

''என்ன.. மனசுக்குள் எதையோ நினைக்கிறாய் போல.''

''என் மனது.. நான் எதையோ நினைக்கிறேன். உங்களுக்கென்ன தேவை சார்.. நீங்கள் உங்கள் மனதைப் பாருங்கள்.''

''என்னை முன்னால் வைத்துக் கொண்டு நினைத்தால் நான் என்னவென்று பொருள் கொள்வது?''

''நிச்சயமாய் உங்களை நினைக்கிறேன்னு பொருள் கொள்ள வேண்டாம்.''

''எனக்கென்னவோ.. அதுதான் உண்மையென்று தோன்றுகிறது.''

அவனது உதடுகள் சிரிக்கும்போது.. அவன் கண்களும் சேர்ந்து சிரிக்க.. வாசவி தனக்குள் ஒரு மாற்றம் நிகழ்வதை உணர்ந்தாள்.

# 24



''வசீகரா.. என் நெஞ்சினிக்க..

உன் பொன் மடியில்..

தூங்கினால் போதும்...''

திருமண மண்டபத்திலிருந்து பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. வசீகரமாய்ச் சிரித்துக் கொண்டே அருகில்



நின்று கொண்டிருந்தவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள். அவளது பார்வையை உணர்ந்தவனின்.. புருவங்கள் மேலே ஏறின.

''என்ன..?''

''ஒன்றுமில்லை.''

''இல்லையே.. நிறைய இருப்பதுபோல் தோன்றுகிறதே.''

''தோன்றும்.. தோன்றும்.. உங்களுக்கா தோன்றாது. இதுவும் தோன்றும்.. இதற்கு மேலேயும் தோன்றும்.''

''எங்கே போகிறாய்?''

''இது என்ன கேள்வி.. நான் பெண்ணழைக்கப் போக வேண்டாமா?''

வாசவி.. மண்டபத்திற்குள் விரைந்து விட்டாள். அவள் மேலிருந்த நறுமணம்.. இன்னும் காற்றில் கலந்திருப்பது போல உணர்ந்தான் சந்தோஷ்.

''என்ன மாதிரியான பெண் இவள். இவளருகில் இருந்தால்.. நேரம் போவதே தெரிய மாட்டேன் என்கிறதே.'

சந்தோஷ்.. தன் காருக்கு அருகில் போனான். சற்று நேரத்தில் பெண்ணழைக்கப் பிரசன்னாவின் கார் கிளம்பியது. பிரசன்னாவின் பெரியப்பா மகன் காரோட்டினான்.

பெண்ணழைத்துக் கொண்டு அவர்கள் வந்து இறங்கியதும் வீடியோ காமெரா ஒளி வெள்ளம் பாய்ச்ச ஆரம்பித்தது.

மணப்பெண் அலங்காரத்திலிருந்த சுகந்தியைப் பிரசன்னா ரசித்துக் கொண்டிருக்க.. சந்தோஷ்.. மணப்

பெண்ணைவிட அழகாக இருந்த வாசவியை ரசித்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்திலிருந்த சம வயது உறவுப் பெண்ணொருத்தியிடம் எதையோ குறும்பாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த வாசவி.. தற்செயலாய்த் திரும்பி.. சந்தோஷைப் பார்த்தாள்.

இமைப் பொழுதில்.. கண் சிமிட்டிய சந்தோஷ் நான்கு விரல்களை உயர்த்திக் காட்டினான். எண்ணிக்கை நான்காம்.. கணக்குச் சொல்கிறானாம்.

வாசவி சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டு.. உறவினர்களுடன் திருமண மண்டபத்திற்குள் சென்று விட்டாள்.

சந்தோஷ் பெண் வீட்டாரின் அருகே போய் அமர்ந்து கொண்டான். மயில் வாகனம்.. ராமகிருஷ்ணனின் காதோரம் குனிந்து எதையோ பேசிக் கொண்டிருந்தார். பரிமளத்திற்கு ஜானகி தீவிரமாய் யோசனை சொல்லிக் கொண்டிருந்தாள்... சுமதி.. தன் கணவனை விழியால் தேடிக் கொண்டிருக்க.. அவன் கல்யாண மண்டபத்தில் இருந்த பெண்களை.. மனைவியைத் தவிர.. பார்வை யிட்டுக் கொண்டிருந்தான்.

''சந்தோஷ்...''

''என்னப்பா...''

''மாப்பிள்ளைக்குப் போட மயில் வாகனம் வாங்கி வைத்திருக்கும் வைர மோதிரத்தை நீ பார்த்து விட்டாயா?''

''பார்த்தேன்ப்பா... நன்றாக இருக்கிறது.''



அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பிரசன்னா அவர்களுக்கு அருகில் வர.. ராமகிருஷ்ணன் மரியாதை யுடன் அவனை நோக்கினார்.

''வாங்க மாப்பிள்ளை.''

''உங்களுக்கு ஹோட்டலில் ஆறு ரூம்களை அரேஞ்ஜ் பண்ணியிருக்கிறேன். போதுமில்லையா?''

''அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ள மாட்டோமா..? நீங்கள் ஏன் சிரமப்படுகிறீங்க..?''

''இதில் என்ன சிரமம்...? மண்டபத்தில் பெண்ணுக்கு ஸ்பெசல் ரூம் இருக்கு... அது போக.. இன்னும் இரண்டு ரூம்களை உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்தாங்க, ரூம்களின் சாவிகளை வாங்கிக்கங்க.''

ராமகிருஷ்ணன் சாவிகளை வாங்கிக் கொள்ள.. பிரசன்னா அவரருகில் அமர்ந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு எழுந்து சென்றான்.

''மாப்பிள்ளை நல்ல குணசாலியாக இருக்கிறாரு மயிலு.. நம் சுகந்தி கொடுத்து வைத்தவள்...''

''ஆமாம் அண்ணா... மாப்பிள்ளையைப் பெற்றவங் களும் தங்கமான குணமுடையவங்கதான்.''

''அந்தப் பெண்தான் துறுதுறுன்னு இருக்கிறாள்.''

''ஆமாம்.. ரொம்ப சுறுசுறுப்பு.''

அவர்கள் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய ஜானகி ஆவல் கொண்டாள்.

''யார் துறுதுறுப்பாய் இருக்கிறது?''

''நம்ம சுகந்தியைக் கட்டிக் கொள்ளப் போகிற மாப் பிள்ளையின் தங்கைதான்.''

''யார் அது? நான் இன்னும் பார்க்கவில்லையே.''

சந்தோஷ் அன்னையின் பக்கம் திரும்பி அமர்ந்து.. திருமண மேடையில்.. ஒரு சிறுமியைத் துரத்திப் பிடித்துக் கொண்டிருந்த வாசவியைக் காட்டினான்.

''அதோ.. அந்தப் பெண்தான் வாசவிம்மா.''

''வாசவியா..?''

''அதுதான் அவளுடைய பெயர்.''

சந்தோஷ் வாசவியிடமிருந்து பார்வையை விலக்காமல் ரசித்துக் கூற.. ராமகிருஷ்ணனும்.. ஜானகியும்.. ஒருவரை யொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

# 25



ஜானகி.. மேடையில் சிறுமியின் காதைப் பிடித்துத் திருகிக் கொண்டிருந்த வாசவியை ஆர்வத்துடன் பார்த் தாள்.

''பொண்ணு அழகாய்த்தான் இருக்கிறாள்..'' என்று ராமகிருஷ்ணனின் பக்கம் திரும்பிக் கூறினாள்.

''ஆமாம் ஜானகி..'' என்று ஆமோதித்தார் அவர்.

''அவளைக் கூப்பிடவா அம்மா..'' சந்தோஷ் வினவி னான்.



''கூப்பிடு.. கூப்பிடு..'' என்று ஆவலாய்க் கூறினாள் ஜானகி.

சந்தோஷ் எழுந்து.. திருமண மேடைக்குச் சென்றான். சிறுமியின் காதைப் பிடித்துத் திருகிக் கொண்டிருந்த வாசவி.. அவனைக் கண்டதும் சிறுமியின் காதை விட்டு விட்டாள். தப்பித்தேன்.. பிழைத்தேன்.. என்று சிறுமி ஓட்டம் பிடிக்க.. வாசவி குனிந்து மேடையில் இருந்த பெரிய குத்து விளக்கின் திரியைச் சரி செய்து கொண்டே மெதுவாகப் பேசினாள்.

''இங்கே என்ன பண்றீங்க?''

''ம்ம்.. நீ என்ன பண்ணிக் கொண்டிருந்தாய்?''

''அது உங்களுக்கு எதற்கு?''

''தேவைம்மா.. அந்தக் குட்டிப் பெண்.. என் சொந்தக் காரப் பெண்..''

''இந்தப் புளுகு மூட்டையை வேறு எங்காவது அவிழ்த்து விடுங்க.''

''ஏன்..?''

''அவள் என் சித்தி மகள்.''

''அப்போ.. நான் சொன்னது சரிதானே.''

''என்ன சரி..? என் சித்தி மகளை உங்களுடைய சொந்தக்காரப் பெண்ணென்று சொன்னால்.. அது புளுகு மூட்டைதானே...''

''இல்லையே...''

''எப்படி... இல்லை..?''

''என் தங்கையை உன் அண்ணன் கல்யாணம் பண் ணிக் கொள்ளப் போகிறார்...''

''அதுக்காகத்தானே.. நாம் எல்லோரும் மண்டபத்திற்கு வந்து கூடியிருக்கிறோம்.''

''அப்போ.. என் தங்கை உனக்குச் சொந்தம்தானே...''

''அவங்க என் அண்ணியாக்கும்.''

''இதை மட்டும் உணக்கையாய்ச் சொல்லு.. அப்போ.. உன் அண்ணன் எனக்கு மாப்பிள்ளைதானே.. நான் அவருடைய மைத்துனன்தானே.''

''என்னவோ ஒன்று.. அதை நீங்களே சொல்லிக் கோங்க.''

''அப்போ.. அந்தக் குட்டிப் பெண்ணும் என் சொந்தக்காரப் பெண்தானே...''

''ஓ... நீங்க அங்கே சுற்றி.. இங்கே சுற்றி.. இப்படிக் கதை சொல்லிக் கொண்டு வருகிறீங்களா!''

''கதையா...?''

''பின்னே.. கதை இல்லையா?''

''நிஜம்... வாசவி.. நிஜம்.''

''என்னவோ.. டி.வி.யில் போடும் கவர் ஸ்டோரி போல இருக்கிறது.''

''இருக்கும்.. இருக்கும்.. உனக்கு.. எப்படியெல்லாமோ தான் இருக்கும்.. உண்மையை ஒப்புக் கொள்வதற்கும் ஒரு மனம் இருக்க வேண்டும்.. அது உன்னிடத்தில் இல்லை.''

''ஆமாமாம்.. இவர் ரொம்ப கண்டு விட்டார். என்னிடம் ஒரு மனம் இல்லாமல்.. இரண்டு மனம்தான் இருக்கிறதுங்கறேன். இப்ப அதுக்கு என்னாங்கறீங்க.''



''நான் ஒன்றும் சொல்லவில்லையம்மா.''

''பின் வேறு யார் சொல்லப் போகிறாங்களாம்.''

''அதோ.. அவங்க ஏதோ சொல்லணுமாம்.''

''அவங்க..?''

வாசவி திரும்பிப் பார்த்தாள். சந்தோஷ்.. ராமகிருஷ்ணனையும் ஜானகியையும் சுட்டிக் காட்டினான்.

''யாரு அவங்க..?''

''எனக்குத் தெரியாது. அவங்கதான் என்னிடம் உங்களைக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னாங்க. வருகிறாயா?''

''எனக்கு அவங்களைத் தெரியாதே.''

''ஆனால்.. அவங்களுக்கு உன்னைத் தெரிந்திருக்கிறதே..''

'யாராக இருக்கும்...' என்ற யோசனையோடு வாசவி மேடையை விட்டு இறங்கி.. அவர்களுக்கு அருகே சென்றாள்.

''வாம்மா.. இப்படி உட்காரு..'' என்றாள் ஜானகி.. மிகவும் அன்பாகப் பார்க்கும் இந்தப் பெண்மணி யார்.. என்ற குழப்பத்துடன் அவளருகில் அமர்ந்தாள் வாசவி.

''உன் பெயர்தான் வாசவியாம்மா..?''

''ஆமாம்.''

''என்ன படிக்கிறாய்..?''

ஜானகி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வாசவி வாய் திறக்குமுன்.. முந்திக் கொண்டு சந்தோஷ் பதிலளித்தான்.

''பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ்.. மூன்றாம் வருடம்.''

வாசவி சந்தோஷை முறைக்க.. ஜானகி அவன் தோளில் செல்லமாக அடித்தாள்.

''படவா.. கேள்வியை அவளிடம்தான் கேட்டேன். உன்னிடம் இல்லை. நீ வாயை மூடிக் கொண்டிரு.''

''இல்லைம்மா. ஒரு உதவிதான்.''

''போதும்.. நீ உதவி செய்தது. தப்பாக எடுத்துக் கொள்ளாதேம்மா.. என் மகன் கொஞ்சம் விளையாட்டுத் தனமாய்ப் பேசுவான்...''

'என்னது... மகனா? இவர்கள் சந்தோஷின் பேரண்ட்ஸா?'

வாசவி கண்களை அகல விரித்து சந்தோஷைப் பார்க்க.. அவன் மெலிதாகக் கண் சிமிட்டி.. தன் ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டினான்.

## 26



மேடையில் வேலைப்பாடுகள் செய்த நாற்காலி போடப்பட்டு... அதில் சுகந்தி அமர வைக்கப்பட்டிருந் தாள்... பெண்மணிகள் எல்லோரும் வரிசையாய் மேடைக்குப் போய் நலங்கு வைத்துவிட்டு வந்தார்கள்.

பிரசன்னா ஓரமாக... உறவினர்களின் மத்தியில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது போல் பாவனை செய்து கொண்டே.. மேடையைக் கவனித்துக் கொண்டிருந் தான்.



''பிரசன்னா... பெண்ணுக்கு மோதிரம் போட வா...''

பிரசன்னாவின் பெரியம்மா அழைக்கவும்... அதற் காகவே காத்திருந்தவன்... ஆவலுடன் எழுந்து கொண் டான்... பட்டு வேட்டி சரசரக்க... மேடையேறினான்.. புதிய மோதிரத்தைப் பெட்டியில் இருந்து எடுத்து அவ னுடைய பெரியம்மா கொடுக்க.. அவளது விரல் பற்றி... மெலிதாக அவளுக்கு மட்டும் புரியும்படி அழுத்தம் கொடுத்துவிட்டு.. மோதிரத்தை அணிவித்தான்.

சுகந்தியின் மேனி சிலிர்த்தது... அவளது உடலில் மின்சாரம் பாய்ந்தது... குனிந்தவனின் விழிகள்.. அவ ளுடைய விழிகளுடன் கலக்க... அதை வீடியோ காமெரா பதிவு செய்தது.

மணமக்களின் இந்த உணர்வுகளை... அவர்களது முகங்கள் பிரதிபலிக்க.. அதை ரசித்த வண்ணம்.. மண் டபத்தின் வாசலருகே நின்று கொண்டிருந்தாள் வாசவி.

''அக்கா... இங்கே வாயேன்...'' அவளுடைய சித்தி யின் பெண் ரமா அழைத்தாள்.

''என்னடி...'' என்றவாறு அருகே சென்றாள் வாசவி.

''இந்த டேபிளை இங்கே போடலாமா... இல்லை அங்கே போடலாமா...? நீயே பார்த்துச் சொல்... ஏன்னா உன்னுடைய ஒபினியன்தான் இதற்கு ரொம்பவும் முக்கியம்!'' என்று பெரிய மனுஷி போல் கூறினாள் ரமா.

''ஏன்டி... இந்த மரடேபிளென்ன... எனக்கு மாப் பிள்ளையாக வரப்போகிறதா..? இதைப் பற்றி என்னிடம் ஒப்பினியன் கேட்கிறாயே.. காது வலி குறைந்து போய் விட்டது போல.. திரும்பவும் திருகினால்தான் நீ சரிப்

படுவாய் போல...'' வாசவி ரமாவின் காதைப் பிடிக்கப் போனாள்.

''நீ காதைத் திருகுவதிலேயே குறியாக இரு.. நாளைக்கு வரவேற்பில் நீதானே நிற்க வேண்டும்...''

''ஆமாம்.. நீயும்தான் கூட நிற்பாயே...''

''நிற்பேன்தான்.. ஆனால்.. எனக்கொன்றும் பாசமலர் தங்கையாக அண்ணனை மேடையில் பார்த்துக் கொள் ளவும் வேண்டும்... வரவேற்பில் நிற்கவும் வேண்டும் என்று இருக்காதே.. நீதானே மேடையையும் பார்க்க வேண்டும்.. வரவேற்பிலும் நிற்க வேண்டும்ன்னு சொன்னாய்...''

''அட... ஆமாம்...''

''அதைச் சொன்னால் என் காதைத் திருக வருகிறாயே...''

''ஸாரி.. ஸாரி...ஸாரி....''

''சரி.. சரி.. சரி.. முதலில் டேபிளை எங்கே போட வேண்டும்ன்னு சொல்லு...''

''ம்ம்ம்..''

வாசவி நின்று.. மேடை தெரியும் கோணத்தைக் கணக் கிட்டாள்.

''இதோ.. இங்கே.. இப்படித் திருப்பிப் போடு...''

''அசைக்க வரவில்லைக்கா...''

''ஏன்டி... மூக்கு முட்டச் சாப்பிட்டாயா.. இல்லையா... இதைத் தூக்க உனக்குச் சக்தி இல்லையா..?''

''நான் மட்டுமா சாப்பிட்டேன்...? நீயும்தான் சாப்பிட் டாய்... நீ தூக்கு...''



ரமா கோபமாய்க் கூறவும் வாசவி... மேஜையை அசைத்துப் பார்த்தாள்.. அது அசைய மறுத்தது.

''என்னடி இது.. இந்த டேபிள் இப்படி அழிச்சாட்டியம் பண்ணுது...?''

வாசவி.. கையை ஊதிக் கொண்டு... கவலையுடன் மேஜையைப் பார்த்தபோது.. அவள் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது...

''நான் வேண்டுமானால் ஹெல்ப்... பண்ணட்டுமா...?''

திரும்பிப் பார்க்காமலேயே.. அது சந்தோஷின் குரல் என்பதை உணர்ந்து கொண்ட வாசவி... பல்லைக் கடித் தாள்.

''வேண்டாம்..''

''ஏன்க்கா வேண்டாம் என்கிறாய்... மாமாதான் ஹெல்ப் பண்ணுகிறேன்னு சொல்கிறாரே...''

ரமா வாதாட... வாசவி பல்லைக் கடித்தபடி.. அவளை முறைத்தாள்.

''மாமாவா...? யார் மாமா..? யாருக்கு மாமா...?''

''ஏன்க்கா.. இவர்தான் மாமா... நமக்குத்தான் மாமா...''

''நீ அடி வாங்கப் போகிறாய் ரமா.. அப்படி யார் உனக்குச் சொன்னது...''

''உன் அம்மாவும்.. என் அம்மாவும்தான் சொன் னாங்க...''

வாசவி என்ன சொல்வது என்று தெரியாமல் தவிக்க... சந்தோஷ்.. நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''ம்ஹூம்.. பெரியவங்களுக்குத் தெரியும் உறவு முறை... சிறியவங்களுக்குத் தெரியவில்லை.. நகரு...''

வாசவி நகர்ந்தாள்.. சந்தோஷ் மேஜையை வாசவி விரும்பிய கோணத்தில் நகர்த்தி மிகச் சரியாகப் போட்டான்.

''போதுமா...''

அவன் நிமிர்ந்து வாசவியைப் பார்க்க.. அவள் தலையாட்ட மனமில்லாமல்.. மண்டபத்தின் படிகளில் இறங்கி.. காற்றாட வாசலில் போய் நின்றாள்... ரமா மண்டபத்திற்குள் ஓடி விட... சந்தோஷ்.. வாசவியின் அருகில் சென்றான்.

## 27



மெலிதான இரவு நேரத்தின் இதமான பூங்காற்று மேனி வருடிச் செல்ல.. மனதிற்குள் இதமாக உணர்ந்தாள் வாசவி... அவளுக்குப் பழக்கமில்லாத பெர்ப்யூமின் நறுமணம் நாசியைத் தொடத் திரும்பிப் பார்த்தாள். சந்தோஷ் அவளருகில் வந்தான்.

வாசவி அவனையே பார்த்தாள். அவளது நெற்றியில் சிந்தனை ரேகைகள் ஓடின.. அவள் தீவிரமாய் எதையோ யோசிப்பதை யூகித்துக் கொண்ட சந்தோஷ்.. அவளருகில் வந்து நின்றான்.

''என்ன விசயம் வாசவி...''



''ஏன்...என்னையே பாலோ பண்ணுகிறீங்க...''

நேரிடையான கேள்வி... நெற்றியிலடித்தது போன்ற கேள்வி.. நேருக்கு நேர்.. விழி சந்திக்க.. நிமிர்ந்து நின்று கேள்வி கேட்டவளை.. ஊன்றிப் பார்த்தான் சந்தோஷ்.

அவனுக்கு வாசவியின் இந்த வெளிப்படையான அணுகு முறை பிடித்திருந்தது.

''ஏனென்றால்... எனக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது...''

அவனும் வெளிப்படையாய்ப் பதில் சொல்லிவிட்டான்... வாசவியின் முகம்.. பல்வேறு உணர்ச்சிகளைக் காட்டியது.. பின் நிதானமானது.

''பிடித்திருக்கிறது.. என்பதற்குப் பொருள் என்ன...?''

''இப்போதைக்குப் பிடித்திருக்கிறது என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும்...''

''ம்ம்... அது ஆண் பிள்ளைத் திமிரா..? இல்லை, பணக்காரத் திமிரா?''

அவள் அலட்சியமாக வினவினாள். அவள் முகத்தில் ஒரு இறுக்கம் தென்பட்டது.

''ஆண் பிள்ளைத் திமிருக்கு.. உன் பெண் பிள்ளைத் திமிர் ஒன்றும் குறைந்ததில்லையே.. அத்தோடு... அது என்ன பணக்காரத் திமிரா என்று கேட்கிறாய்...? நீயென்ன ஏழையா...?''

''இல்லைதான்... ஆனால் உங்கள் அளவுக்குப் பணக்காரியும் கிடையாது.''

''அதனால்.. என் பணத்திமிரை உன்னிடம் காட்டுகிறேன் என்று நினைத்தாயா? இதோ பார்... என் ஆண்

பிள்ளைத் திமிரை வேண்டுமானால் உன்னிடம் காட்டுவேன்.. ஆனால் பணக்காரத் திமிரை ஒரு போதும் காட்டமாட்டேன்...''

வாசவி திரும்பி உள்ளே போக முயற்சித்தாள்.. சந்தோஷ் அவளது கரம் பற்றித் தடுத்தான்.

''எங்கே போகிறாய்..?''

''நிச்சயதார்த்தம் இந்நேரம் முடிந்திருக்கும்... அம்மா தேடுவாங்க...''

''போகலாம்... பொறு..''

''எதற்காக இருக்கச் சொல்கிறீங்க...''

''கொஞ்ச நேரம் என்னுடன் பேசிக் கொண்டிரு....''

''நமக்குள்ளே பேச என்ன இருக்கிறது...?''

''எவ்வளவோ இருக்கிறது...''

''உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுங்கள், பார்ப்போம்...''

''அதென்ன கஞ்சத்தனமாய் ஒன்று என்று சொல்கிறாய்... தொண்ணூற்று ஐந்து இருக்கிறதே...''

வாசவியின் முகம் குப்பென்று சிவந்து விட்டது.

'என்னடா... கொஞ்ச நேரம் கண் சிமிட்டாமல் நல்ல பிள்ளை போல் நடந்து கொள்கிறானே... என்று பார்த்தால்... இவனுடைய புத்தியைக் காட்டுகிறானே...'

''நீங்கள் அதை மறக்கவே மாட்டீங்களா...''

''ஏன் மறக்க வேண்டும்...'' என்று சந்தோஷ் கேட்டுக் கொண்டிருந்த போதே...



''மறக்குமோ.. மாமன் எண்ணம்...''என்று மண்டபத்தில் ஒலி பரப்பிக் கொண்டிருந்த பாடல் பாடியது.

''பார்த்தாயா.. மாமன் மனசைப் பத்தி பாட்டே சொல்லி விட்டது...'' சந்தோஷ் சிரித்தான்.

''யார்.. அந்த மாமன்?''

''ஏன், நான்தான் உனக்கு மாமன்... வேண்டுமானால் உன் அம்மாவிடம் போய்க் கேட்டு விட்டு வரலாமா...?''

''வேண்டாம் சாமி.. நீங்கள் எனக்கு முறை மாமன்தான். ஒப்புக் கொள்கிறேன்.. இப்ப ஆளை விடுங்க...''

வாசவி அவனது கரத்திலிருந்து.. தன் கரத்தை உருவிக் கொள்ள முயன்றாள்.. அவனது பிடி இறுகி விட மறுத்தது.

''இந்தத் தொட்டுப் பேசும் வேலை யெல்லாம் என்னிடம் வேண்டாம்...''

''ஏன்? சும்மா கையைத்தானே தொட்டேன்...''

அவர்கள் வாக்கு வாதம் பண்ணிக் கொண்டிருந்த போதே.. ஒலி பெருக்கியில் வேறு பாடல் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

**''மாமா... மாமா... மாமா...**

**சிட்டுப் போலே பெண்ணிருந்தால்...**

**வட்டமிடும் கண்ணிருந்தால்**

**கிட்டக்கிட்ட ஓடி வந்து தொடலாமா...?**

**தாலிகட்டு முன்னே... கைகள் மேலே படலாமா...?**

**மாமா.. மாமா... மாமா....''**

இப்போது வாசவியின் முகத்தில் பதட்டம் விலகிக் குறும்பு வந்தது.. இதழ்களில் மெல்லிய சிரிப்பு உதித்தது.. தன் கையைப் பிடித்திருந்த அவனது கையைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் திருப்பிக் கொள்ள... சந்தோஷின் கண்கள் ஒளி பெற்று மின்னின.

# 28



சில நேரங்களில் நம்மையறியாமல் நமக்குள் சில மாற்றங்கள் நிகழ்ந்து விடுவதுண்டு... அன்று.. அந்த அந்தி மயங்கி... இரவு வந்த நேரத்தில் அப்படியொரு ரசாயன மாற்றம் வாசவிக்குள் நிகழ்ந்து விட்டது.

சந்தோஷ் பெண்களிடம் வழியும் ரகமில்லை என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவனது கம்பீரமான ஆண்மை ததும்பும் தோற்றம் பெண்களை வசீகரிக்கும் தன்மை கொண்டது என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள்.

அவனை அவளுக்குப் பிடித்திருந்தது. ஆனாலும் அதைக் காதல் என்று இனம் பிரித்து அவள் நினைத்ததில்லை...

'ஆள் ஜம்மென்றுதான் இருக்கிறான்..' இது மட்டுமே அவளது நினைவு.

மற்றப்படி அவனுடன் பேசிப் பழக வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை... திலகம் அவளை வளர்த்



திருந்த விதம் அப்படி... வீட்டிலும்... கல்லூரியிலும் துறுதுறுப்பாகப் பேசுவாள்.. பழகுவாள்.. ஆனால் அந்நியரிடம் அவ்வளவு எளிதாகப் பேசிப் பழகிவிட மாட்டாள்.

அப்படிப்பட்ட வாசவி... இன்று அந்நியனான சந்தோஷின் கரத்தினுள் தன் கரத்தை விட்டு வைத்துத் தடுமாறி நின்றாள்.

'இது தவறு வாசவி...' அவள் மனம் எச்சரித்தது.. முதல் முறையாக அவள் மனதின் எச்சரிக்கையைப் புறக்கணித்தாள். எதுவென்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத வகையில் அவள் உணர்ச்சி வெள்ளத்தில் சிக்குண்டு விட்டாள்.

'இனம் விளங்கவில்லை..

எவனோ.. என் அகம் தொட்டுவிட்டான்...'

வாசவி தன் வாழ்வில் முதன் முறையாகப் பேச்சிழந்து நின்றாள்... அவனுடைய கைக்குள் அடங்கியிருந்த அவளுடைய கை நடுங்குவதை அவன் உணர்ந்தான். காற்றில் ஆடும் தளிர்க்கொடி போல்... தொய்ந்து நின்றிருந்த அவளுடைய தோற்றம் அவனைக் கவர்ந்தது.

அவளது கையை அழுத்திப் பிடித்து... அருகினில் அவளை இழுத்தான்... அவர்கள் நின்றிருந்த இடத்தில்... கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாலும்... திருமணத்தின் முந்தைய நாள் இரவென்பதாலும்... திருமண மண்டபத்தின் உள்ளே நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருந்ததால் உறவினர்கள் அங்கேயே அமர்ந்து விட்டதாலும்... அவர்களை யாரும் கவனிக்கவில்லை.

இப்படி ஒரு சூழலில் அவனது கைப் பிடித்து நிற்க நேருமென்று சற்று முன் வரை கனவிலும் நினைத்தறியாத வாசவி... உணர்ச்சி வேகம் தாங்காதவளாய்க் கண் கலங்கி விட்டாள்.

''ப்ளீஸ்..'' என்று அதற்கு மேல் பேச முடியாதவளாய் அவள் நாத் தழுதழுக்க... சந்தோஷ் அவளுடைய நிலையைப் புரிந்து கொண்டான்.

''நானிருக்கிறேன் வாசவி... கலங்காதே...'' ஆதரவாய் அவளது தோள் தொட்டான்... அவள் நிற்க முடியாமல் தொய்ந்து தடுமாற... ஆதரவாய் அணைத்துக் கொண்டான்.

''அலையே... கடல் அலையே...

நீ கலங்காதே... மனம் மயங்காதே...

உன் அருகினில் நானிருப்பேன்...

என்னென்னவோ.. உன் ஆசைகள்...''

திருமண மண்டபத்து ஒலிபெருக்கியில் வாசவியின் மனத்தை அறிந்தது போல் பாடல் ஒலித்தது... சந்தோஷின் கரங்கள்... ஆதரவாய் அவளது தலைகோதி... அந்தப் பாடலின் வரிகளை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தன.. வாசவி விலக முயன்றாள்... அவனது கரம் இறுகி.. அவளை விட மறுத்தது.

''ஏன் வாசவி... என்னைப் பிடிக்கவில்லையா. .?'' அவன் அவளது செவியோரம் முணுமுணுத்தான்.

வாசவி பதில் சொல்லாமல் விசும்பினாள்.



''ச்சு... அழக்கூடாது... ஏன் அழ வேண்டும்? உனக்கு என்ன பயம்...? நான் உன் சந்தோஷ்...'' அவன் உரிமையுடன் அதட்டினான்.

''வேண்டாம்... இது நடக்காது...''

''ஏன் நடக்காது...?''

''நீங்கள் அதிகம் பணக்காரர்...''

''என்னிடம் பணமில்லாவிட்டால்... உனக்கு என்னைக் காதலிப்பதில் பிரச்சனை இருக்காதா...?''

சந்தோஷ் இந்தக் கேள்வியை ஒரு எதிர்பார்ப்புடன் கேட்டான். அவளுடைய பதிலை அறிந்து கொள்ள அவனுடைய மனம் துடித்தது.

''நிச்சயம் பிரச்சனை இருக்காது... அது எவ்வளவு ஆறுதலை எனக்குத் தரும் தெரியுமா..?''

வாசவியின் இந்தப் பதில் சந்தோஷின் மனதிற்கு எவ்வளவு பெரிய ஆறுதலைத் தந்து கொண்டிருக்கிறது என்பதை உணராதவளாக.. வாசவி... அந்த வார்த்தைகளை உண்மையாகச் சொன்னாள்.

''வாசவி... என் வாசவி...'' அவன் கண் மூடிக் கிறங்கி நின்றான்.

வாசவிக்கு அந்த அனுபவம் புதிது... அவள் விலக நினைத்தும் விலக இயலாதவளாக அவன் மார்பில் தலை சாய்த்தாள்.

''வாழ்க்கை நடத்தப் பணம் வேண்டாமா வாசவி...?''

''வேண்டும்தான்... என்னைக் காலம் பூராவும் உட்கார வைத்துக் காப்பாற்றும் உழைப்பு உங்களிடம் இருக்கிறதே

அது போதாதா...? அதையும் மீறி.. கோடீஸ்வரி என்ற பட்டம் எனக்கு எதற்கு..?''

''உன் பேரண்ட்ஸ் நான் பணக்காரனாக இல்லாமல் ஏழையாக இருந்தால்.. எனக்குப் பெண் தருவாங்களா?''

''ஏன் தரமாட்டார்கள்.. அவர்கள் என் மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள்.. நான் கேட்டால் ஏழையாக இருந்தாலும் பெண் தருவார்கள்...''

வாசவியின் முகத்தை உயர்த்தி.. அவளது விழிகளுக்குள் பார்த்தான் சந்தோஷ்.

## 29



''நீ கேட்பாயா வாசவி... நான் ஏழையாக இருந்தாலும் நீ அதை உன் பேரண்ட்ஸிடம் கேட்பாயா...?''

''கட்டாயம் கேட்பேன்...''

''ஏன்...?''

''தெரியவில்லையே.... எதனால் என்று என் மனதிற்குப் பிடிபடவில்லையே.. கொஞ்ச நேரத்திற்கு முன்வரை... நான்... நானாக இருந்தேனே... இப்போது மாறிப் போய் விட்டேனே...''

''எதனால்..?''

''எனக்குச் சொல்லத் தெரியவில்லை சந்தோஷ்...''

வாசவி தன்னையுமறியாமல் அவனது பெயரை உச்சரித்தாள்... தான் சிறு பெண்.. கல்லூரிப் படிப்பில் இருப்பவள்... அவன் வயதிலும்.. படிப்பிலும்.. வசதியிலும்... பணத்திலும் மிக உயர்ந்தவன்... தான் அவனைப் பெயர் சொல்லி அழைக்கக் கூடாது என்று அவளுக்குத் தோன்றவேயில்லை....



என்னவோ... காலம்... காலமாய் அவனை அறிந்தவள் போல்... அவள் அவன் பெயரை உச்சரித்தாள்... அந்த அழைப்பு தந்த நெருக்கத்தில் சந்தோஷ் மனம் மகிழ்ந்து போய்விட்டான். தன் கரங்களுக்குள் இருந்த அவள் முகத்தில் தெரிந்த காதலை அவனால் உணர முடிந்தது... குனிந்து மென்மையாக அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

அதை எதிர்பாராத வாசவியால் அந்த நிகழ்வைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அவள் அவன் மார்பில் சட்டென்று முகம் புதைத்துக் கொண்டாள்.

திருமண மண்டபத்திற்கு உள்ளேயிருந்து நாதஸ்வர ஓசை கேட்டது... நிச்சயதார்த்தம் முடிந்து விட்டதை உணர்ந்த வாசவி... சட்டென்று சந்தோஷை விட்டு விலகினாள்.. அவன் அவள் கரத்தைப் பிடித்து நிறுத்தினான்.

''விடுங்கள் சந்தோஷ்... எல்லோரும் வெளியே வர ஆரம்பித்து விட்டாங்க...''

''நான் உன்னுடையவன்தானே வாசவி...''

சந்தோஷின் குரலில் இருந்த ஏக்கம் வாசவியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது... அவ்வளவு பெரிய கோடீஸ்வரன்.. இப்படி உருகி வழிகிறானே.

''நான் உங்களுடையவள் சந்தோஷ்...''

வாசவி.. தன் கையைப் பற்றியிருந்த அவன் கையில் குனிந்து முத்தமிட்டுவிட்டுப் பதில் சொன்னாள்.

இதை விட அழகான ஒரு பதில்... காதலில் இருக்க முடியாது என்று சந்தோஷிற்குத் தோன்றியது.

அவள் அவனது கையை லேசாகத் தட்டிவிட்டுப் புள்ளிமான் போல் பின்னலாட... மண்டபத்திற்குள் ஓடி மறைந்தாள்.

'நான் உங்களுடையவள் சந்தோஷ்..'

அவள் சொல்லிச் சென்ற வார்த்தைகள்.. காற்றோடு கலந்து சந்தோஷின் சுவாசத்தில் நுழைந்தன.

எத்தனையோ நாள்களுக்குப் பிறகு.. சந்தோஷின் மனம் அன்றுதான் இறகை விட லேசானதாய் மாறியது.

''இதுதான் நீ சொன்ன ஹோட்டலா சந்தோஷ்... இந்த தகர டப்பாவையா நீ பெரிய ஹோட்டலென்று பீற்றிக் கொண்டாய்...?''

ஆஷாவின் அலட்சியமான குரலும் கேள்வியும் சந்தோஷின் நினைவிற்கு வந்தது... அவன் வேதனையுடன் கண் மூடி நின்றான்.

'ஆஷா...' அவனுடன் வெளிநாட்டில் படித்தவள்.. சந்தோஷின் கம்பீரமான தோற்றத்தில் கவரப்பட்டுக் காதல் சொன்னவள்...

''உன் பேரண்ட்ஸ் என்ன செய்கிறாங்க சந்தோஷ்...''

''ஹோட்டல் பிஸினெஸ்...''

சந்தோஷ் இதை இயல்பாகத்தான் சொன்னான்.. ஆனால் அவனுடைய வசீகரமான மேல்தட்டுத் தோற்



றத்தை வைத்து அவன் மிகப் பெரிய ஹோட்டலை நடத்துகிறவரின் மகன் என்று நினைத்துத்தான் ஆஷா காதல் சொன்னாள் என்பது.. பின்னாளில் தெரிய வந்த போது... சந்தோஷ் மனம் இறுகிப் போனான்.

சந்தோஷ் ஆஷாவைக் காதலிக்கவில்லை... ஆனால் அவள் காதலிப்பதாகச் சொன்னதும் மனம் சலனப்பட்டான். வெளிநாட்டில் அவள் காட்டிய நெருக்கத்தில் மனம் தடுமாறினான். படித்து முடித்து.. இந்தியா திரும்பிய போது.. சந்தோஷ் ஆஷாவின் வீட்டைப் பற்றி விசாரித்தான்.

''எதற்கு கேட்கிறாய் சந்தோஷ்...?''

''முறைப்படி என் பேரண்ட்ஸைப் பெண் கேட்டு வரச் சொல்கிறேன் ஆஷா...''

''அவசரம் வேண்டாம் சந்தோஷ்... நான் முதலில் பொள்ளாச்சிக்கு வந்து உன் ஹோட்டலைப் பார்க்கிறேன்...''

''நீ என்னைக் காதலிக்கிறாயா..? இல்லை... என் ஹோட்டலைக் காதலிக்கிறாயா...?''

சந்தோஷ் அன்று விளையாட்டாகத்தான் கேட்டான். ஆஷா அதற்குப் பதில் சொல்லவில்லை... ஆனால் அவள் பொள்ளாச்சிக்கு வந்து... அவனது மெஸ்ஸைப் பார்த்து விட்டு முகம் சுழித்த போது.. அவனுக்குச் 'சுளீர்' என்று மனதில் வலித்தது.

''இதைப் போயா... பெரிதாக நீ ஹோட்டல் பிஸினெஸ் என்று சொன்னாய்...'' என்று கேட்டாள்.

''புரியவில்லை ஆஷா... என் பிஸினெஸ் எதுவாக இருந்தால் என்ன...? உனக்கு நான்தானே முக்கியம்...''

"இல்லை சந்தோஷ்... எனக்கு உன் வாழ்க்கைத் தரம் தான் முக்கியம்.. நீ உன் தோற்றத்தைப் பார்த்து.. நீ பொருளாதாரத்தில் செழிப்பானவன் என்று நினைத்துத் தான் நான் காதல் சொன்னேன்..."

"ஓ.. நான் பணக்காரன் இல்லையென்று இப்போது தெரிந்து விட்டது... இப்போது என்ன செய்யப் போகிறாய்..?"

சந்தோஷின் முகத்தில் இகழ்ச்சிப் புன்முறுவல் உதித்தது... அவன் ஆஷாவை வெறுப்புடன் பார்த்தான்.

# 30



"ஒன்றைத் தெரிந்து கொள் ஆஷா... நான் என்றைக்குமே என் பண வசதியை உயர்த்திச் சொல்லியதில்லை..."

"ஆனால்... நீ வசதியில் குறைவானவன் என்றும் சொன்னதேயில்லையே..."

"ஷட் அப் ஆஷா... எனக்கென்று பொள்ளாச்சியில் சொந்தமாய் வீடு இருக்கிறது.. மெஸ் தொழில் இருக்கிறது.. வெளிநாட்டில் படித்த படிப்பு இருக்கிறது.. கிராமத்தில் வீடு... வயல் இருக்கின்றது..."

"எனக்கு இவை போதாதே..."

"போதுமென்று நீ சொன்னாலும்.. நீ எனக்கு இனி வேண்டாம் ஆஷா.. நான் உன்னிடம் காதல் சொன்ன



தில்லை... உன் காதலை ஏற்றுக் கொண்டேன்... அவ்வளவுதான்..."

அவனுடைய வார்த்தைகள் ஆஷாவைப் பலமாகத் தாக்கின.. பதிலுக்குச் சந்தோஷைக் காயப்படுத்தி விடும் வேகத்துடன் அவள் பேசினாள்.

"சொந்தமென்று சொல்லிக் கொள்ள இந்த ஒட்டைக் கட்டடத்தில் நடக்கும் இட்லிக் கடையைத் தவிர வேறு எதுவும் இல்லாத உனக்கே இவ்வளவு திமிர் இருக்கும்போது... ஹைதராபாத்தில் கொடி கட்டிப் பறக்கும் என் அப்பாவின் செல்லப் பெண்ணான எனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்... உன் லெவல் இதுதான் என்பது எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் உன்னிடம் காதல் சொல்லியிருக்க மாட்டேன்... அதை முதலில் நீ தெரிந்து கொள்..."

"ஒருவனுடைய லெவலைப் பணத்தை வைத்துக் கணிக்கும் உனக்கு எங்கே மனிதரின் மதிப்புத் தெரியப் போகிறது.. ஒருவருடைய பண வசதியைப் பார்த்து வரும் உணர்விற்குப் பெயர் காதல் இல்லை... அதன் பெயரே வேறு..."

ஆஷாவின் முகம் சிவந்து போனது... சந்தோஷின் வார்த்தைகளில் இருந்த அர்த்தம் அவளைப் புண்படுத்தியது.

"இதெல்லாம் சம்பாதிக்க முடியாத கையாலாகாதவர்கள் பேசும் பேச்சு... சந்தோஷ்.. பணமில்லாவிட்டால் இந்த உலகத்தில் யாரும்... யாரையும் தேடி வர மாட்டார்கள்.. குட் பை..."

இன்றைக்கு ஒருத்தி அவனைத் தேடி வந்திருக்கிறாள்.. சும்மாவும் இல்லை... உன்னிடம் பணம் இருப்பது எனக்குக் குறையென்று சொல்லிக் கொண்டு வந்திருக் கிறாள்...

சந்தோஷிற்குத் தன் வாழ்வில் சந்தித்த அந்த இரு பெண்களின் குணாதிசயத்தை நினைத்து வியப்பு மேலிட்டது.

அதிகப் பணம் இல்லாத உன் மேல் எனக்குக் காதல் வராது என்று சொல்லி விலகிப் போனாள் ஆஷா.

இன்றோ... உன் அதிகப் பணம்.. உன்னிடம் காதலைச் சொல்ல எனக்குத் தடை போடுகிறது என்று உருகி நிற் கிறாள் வாசவி...

காகிதப் பூவுக்கும்... மல்லிகை மணத்திற்கும் உள்ள வேற்றுமையைத் தன் வாழ்வில் நிதர்சனமாகக்கண்டான் சந்தோஷ்.

சற்று முன் வாசவி தொட்டுச் சென்ற கரத்தில் சிறு முத்தம் பதித்தவன்... மண்டபத்திற்குள் சென்றான்.

''எங்கே போய் விட்டீங்க...'' என்று எதிரே வந்தான் பிரசன்னா.

''சும்மா... வாசலில் காற்றாட நின்று கொண்டிருந் தேன்... என்ன விசயம்..?'' என்று கேட்டான் சந்தோஷ்.

''சாப்பிட வாங்க... நீங்கள் சாப்பிட்டு விட்டால்... உங்களுக்கு ஹோட்டல் ரூமைக் காட்டிவிட்டு வந்துவிடு வேன்...''

''நல்லாச் சொன்னீங்க போங்க... நீங்க எங்க வீட்டு மாப்பிள்ளை... உங்களை நாங்கள் கவனிக்க வேண்டும்...



அதை விட்டுவிட்டு... நீங்க என்னை உபசரித்துக் கொண் டிருக்கீங்களே...''

''கல்யாணம் மாப்பிள்ளை வீட்டில் நடக்கிறது... இது எங்கள் ஊர்.. நீங்கள் எங்கள் விருந்தாளி.. உங்களை நாங்கள்தானே கவனிக்க வேண்டும்...''

''நீங்க சிரமப்பட்டுக்க வேண்டாம் மாப்பிள்ளை.. ரூம் சாவிகளைக் கொடுங்கள்... எந்த ஹோட்டல்ன்னு சொல் லுங்கள்... நான் அப்பா அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு போய்க் கொள்வேன்...''

சந்தோஷிடம் பிரசன்னா இரண்டு சாவிகளைக் கொடுத்தான்.... ''மாமாவும்.. அத்தையும் சாப்பிட்டு விட் டாங்க..''

''இதோ.. நான் சாப்பிடப் போகிறேன்...''

சந்தோஷ்.. பந்தி நடந்து கொண்டிருந்த ஹாலுக்குள் நுழைந்தான்.. காளிதாஸ் அவனைக் கவனித்து.. அழைத் துச் சென்று அமர வைத்தார்... இலை போடப்பட்டு.. உணவு வகைகளைப் பரிமாற ஆரம்பித்தனர்.. அப்போது தான்.. எதிர் வரிசையில் வாசவி அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தான் சந்தோஷ்.. அவள் அவனைக் கவனிக்காமல்.. பக்கத்தில் இருந்த பெண் ணிடம் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தாள்.

'வாய் ஓயவே ஓயாது...' சந்தோஷ் புன்னகைத்துக் கொண்டான்... அவளைப் பார்த்தபடி இனிப்பை அவன் வாயில் போட்டுக் கொண்ட போது... வாசவி அவனைப் பார்த்து விட்டாள்.

அவளது விழிகளில் மின்னல் வெட்டிய அதே சமயம்... சந்தோஷ் விழி சிமிட்டி விட்டு.. ஆறு விரல்

களைக் காண்பித்தான். அவள் அவசரமாய்த் தலையைக் குனிந்து கொண்டாள்.

# 31



வாசவி அடிக் கண்ணால் மற்றவர்கள் தங்களைக் கவனிக்கிறார்களா என்று கவனித்தாள்.

'நல்லவேளை.. யாரும் பார்க்கலை...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவள்... அவனை முறைத்தாள்... அவன் ரகசியமாய்ச் சிரித்தான்.

'திருட்டு ராஸ்கல்...'

அவள் மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.. சாப்பிட்டு விட்டு எழுந்து சந்தோஷ் சென்று விட.... கை கழுவிக் கொண்டு... மண்டபத்தின் முன் ஹாலுக்கு வந்தாள்... அவனைக் காணவில்லை.

'எங்கே போயிருப்பான்..' என்ற யோசனையுடன் அவள் விழிகளைச் சுழற்றியபோது.. மேலேயிருந்து ஒரு பூ வந்து அவள் மேல் விழுந்தது.. அவள் அண்ணாந்து பார்த்தாள்.. மாடி ஹாலின் கைப்பிடி வளையத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்த அவன் விழி சிமிட்டி.. ஏழு விரல்களைக் காட்டினான்.

அவள் பல்லைக் கடித்தாள்... கோபத்துடன் மாடிப் படிகளில் தாவி ஏறினாள்.. அவனருகில் மூச்சிரைக்கச் சென்று நின்றாள்.



''உங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக் கறீங்க...''

''உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்...''

அவள் மனதில் பூ மலர்ந்தது.. முகம் மென்மையானது... அவசரமாய் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'இவன் சாகஸக்காரன்.. இவனுடைய சாகசத்தில் மயங்கி விடக் கூடாது...'

''இதோ பாருங்கள்...''

''பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்...''

அவன் மீண்டும் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டு,

''எட்டு...'' என்றான்.

''இது என்ன திருட்டுத்தனம்...?''

''எது...?''

''கண் சிமிட்டுவது... எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை...''

''யாரைப் பிடிக்கவில்லை... என்னையா..?''

அவன் குறும்பாகக் கேட்டான்.. அவள் சிணுங்கலுடன் அவன் முகத்தை நோக்கினாள்.. பின்.. சேலையின் முந்தானையை விரல்களால் திருகிக் கொண்டே முணுமுணுத்தாள்.

''பிடிக்காமலா.. மண்டப வாசலில் நின்று கொஞ்சினார்கள்...''

''கொஞ்சினார்களா.. யார்... யார் கொஞ்சினது...?''

அவன் ஏதும் அறியாதவன் போல வினவினான்.. அவள் சுற்றுப்புறத்தை உணர்ந்தவளாய் அடிக்குரலில் சீறினாள்.

''கொழுப்பா...?''

''ஏய்... நீ சொன்னதற்குத்தானே சந்தேகம் கேட்டேன்...''

''சந்தேகம்? வரும்.. ஏன் வராது...?''

''பார் வாசவி...''

''உம்.. பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்.. இன்னும் நீங்கள் என்னவெல்லாம் சேட்டை செய்வீர்கள் என்று யோசித்துக் கொண்டும் இருக்கிறேன்...''

''எங்கே நீ என்னைப் பார்த்தாய்? வாசலில் நின்று என் தோளில் சாய்ந்து கொண்டிருந்ததை ஒரு மணி நேரத்திற்குள் மறந்து விட்டு.. சேலையை வரிந்து கட்டிக் கொண்டு... என்னிடம் மல்லுக்கு நிற்கிறாய்...இதுதான் நீ என்னைக் காதலிக்கும் லட்சணமா...?''

''பேச்சை மாற்றாதீங்க சந்தோஷ்...''

''ஏய்.. உன்னை விட நான் வயதில் பெரியவன்... என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவாயா...?''

''வேறு எப்படிக் கூப்பிடுவது...?''

''அத்தான் என்று கூப்பிடு...''

''ஹை... அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்...''

''அப்படியா...? நீயே சொல்லிவிட்டாய்.. உன் பேச்சைத் தட்டவும் கூடாது.. ஊம்.. கொஞ்சம் நகரு...''



அவள் குழப்பத்துடன் நகர.. சந்தோஷ் தன் நாடியில் ஆள்காட்டி விரலால் தட்டிக் கொண்டே யோசித்தான்.

''அந்த மஞ்சள் தாவணி ஓகேயா, சொல்லு...''

வாசவி அவசரமாய்த் திரும்பி.. கீழே பார்த்தாள்.... திருமண மண்டபத்தின்... மண மேடையின் திட்டில் சாய்ந்து நின்று கொண்டு மஞ்சள் தாவணி அணிந்திருந்த அவளுடைய பெரியம்மாவின் பெண் கனகா... பேசிக் கொண்டிருந்தாள்.

கோபம் கொப்புளிக்கும் விழிகளுடன் சந்தோஷைப் பார்வையாலேயே எரித்தாள் வாசவி...

''சந்தோஷ்...''

''என்ன வாசவி.. ஏன் இவ்வளவு கோபம்...? நீதானே வேறு ஆளைப் பார்க்கச் சொன்னாய்...''

''நான் என்ன சொன்னேன்... நீங்கள் என்ன அர்த்தம் எடுத்துக் கொண்டிருக்கிறீங்க...''

''அப்போ... நீ சொன்னதற்கு அர்த்தம் இது இல்லையா...? போ வாசுகி.. அந்த மஞ்சள் தாவணி உண்மையிலேயே அழகு...''

வாசவிக்கு அழுகையே வந்துவிட்டது.. கண்ணில் நீர் திரள... அவனை உறுத்துப் பார்த்தாள்.

''ஏய் பைத்தியம்.. விளையாட்டுக்குச் சொன்னால் இதற்குப் போய் அழுகலாமா...?''

''இதுவா விளையாட்டு.. இனி என்னோடு பேசாதீங்க...''

வாசவி.... வேகமாய் அங்கிருந்து ஓடி விட்டாள்... அவளுடைய கண்ணீர் சந்தோஷைப் பாதித்து விட்டது...

'இவள்... இவ்வளவு பொஸஸிவ்வா...?'

# 32



சந்தோஷ் உதட்டைக் கடித்துக் கொண்டு யோசித்தான்... பெற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று திரும்பிப் பார்த்தான்.. உறவினர்களின் கூட்டத்தின் மத்தியில் அமர்ந்து கொண்டு அவர்கள் கலகலப்பாய்க் கதை பேசிக் கொண்டிருந்தார்கள்... சந்தோஷ் நிம்மதியாய் உணர்ந்தான்.

வாசவியைச் சமாதானப்படுத்தாமல் அவனால் அங்கிருந்து நகர முடியாது என்று அவனுக்குத் தோன்றி விட்டிருந்தது... அவள் எங்கே என்று தேடினான்... சுகந்தியின் அறையில் அவள் இருந்தாள்.

''ஹாய்... சுகந்தி...'' வாசவியைப் பார்த்துக் கொண்டே சுகந்தியின் அருகில் உட்கார்ந்தான்.

''வா... அண்ணா.. உன்னை மண்டபத்தில் பார்க்கவே முடியவில்லையே... எங்கே போயிருந்தாய்..?''என்று நிச்சயதார்த்தப் பட்டுப் புடவையை மடித்த வண்ணம் சுகந்தி வினவினாள்.

''நீ என்னை எங்கே பார்த்தாய்... பிரசன்னா எங்கே நின்று கொண்டிருந்தாரோ.. அந்தப் பக்கம்தானே... சூரியனைத் தேடித் தலை சாய்க்கும் சூரியகாந்திப் பூப்போல... உன் பார்வை திரும்பிக் கொண்டிருந்தது...'' சந்தோஷ் கேலியாக நகைத்தான்.

''போ.. அண்ணா... என்னைக் கேலி செய்கிறாயா? ஆமாம்... எங்கேயிருந்து இப்படிக் கவிதை போல் பேசக்



கற்றுக் கொண்டாய்...? உனக்குக் கவிதை கூடத் தெரியுமா..?'' சுகந்தி புருவம் உயர்த்தினாள்.

''அதுவா... அதை எனக்கு ஒரு டீச்சர் சொல்லிக் கொடுத்தாங்க...''என்றபடி சந்தோஷ்... சுகந்தி அறியாத வண்ணம்... வாசவியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

வாசவி.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... சுகந்தி எழுந்து பெட்டியைத் திறந்து புடவையை வைத்துக் கொண்டிருந்த போது.. சந்தோஷ்.. வாசவியின் கை பிடித்து ஒரு காகிதத்தைத் திணித்தான்... வாசவிக்கு வியர்த்துக் கொட்டியது.. சுகந்தி திரும்பிய போது... சந்தோஷ் இயல்பாக அவள் முகத்தைப் பார்த்தான்... வாசவி மட்டும் பேயறைந்தவள் போல் ஆகிவிட்டாள்.

''என்ன வாசவி.. இப்படி விழிக்கிற...?''

''ஒன்றுமில்லை அண்ணி...''

''உன் நாத்தனாருக்கு மந்திரித்து விடு சுகந்தி...''

''போ... அண்ணா... உனக்கு எல்லாமே விளையாட்டுத்தான்...''

''விளையாட்டை விளையாட்டாய் எடுத்துக் கொள்ள வேண்டும் சுகந்தி.. சீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது...''

''இங்கே யார் அதை சீரியஸாக எடுத்துக் கொண்டதாம்...''

''நிறையப் பேர் எடுத்துக் கொள்கிறார்கள்... சரி... நீ சீக்கிரம் தூங்கு... நான் கிளம்புகிறேன்...''

சந்தோஷ்.. மாடிப்படியில் இறங்கி... வாசல் பக்கம் சென்று.. சற்று முன் நின்ற இடத்தை விட்டுத் தள்ளி...

தோட்டத்தின் செடி மறைவில் நின்று காத்துக் கொண்டிருந்தான்.

"தனியே... தன்னந்தனியே.. நான்

காத்துக் காத்து நின்றேன்..."

திருமண மண்டபத்தின் ஒலி பெருக்கியில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க.. அவன் அதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அங்கே.. மாடியறையில் சுகந்தியின் அருகேயிருந்த வாசவி எழுந்து ஜன்னலோரமாக வந்து... கையிலிருந்த பேப்பரைப் பிரித்துப் படித்தாள்.

'உன் துணையென்று

எனை நீ நினைத்தால்...

தோட்டத்திற்கு வா...'

என்று எழுதப்பட்டிருந்தது... மனம் குறுகுறுக்க.. அறையை விட்டு வெளியே வந்து படியிறங்கினாள்.

"வாசவி..." அவளுடைய பெரியம்மா அழைக்க...

"என்ன பெரியம்மா..." என்று நின்று கேட்டாள்.

"கனகாவைப் பார்த்தாயா..?"

"இங்கேதானே நின்று கொண்டிருந்தாள்..." வாசவி வெளியேற முடியாமல் தவித்தாள்.

"காணோமே.." என்றவாறு பெரியம்மா மகளைத் தேடிக் கொண்டு சென்று விட... ஆசுவாசப் பெருமூச்சுடன்.. மற்றவர்கள் கண்ணில் படாமல்.. வாசல் பக்கம் விரைந்தாள்.



"இன்னொருத்தி நிழலையும்...

கண்ணெடுத்துப் பார்ப்பது...

தவறென்று நினைத்து விட்டாள்...

ஒரு ஜீன்ஸ் அணிந்த சின்னக்கிளி...

ஹலோ சொல்லிக் கை கொடுக்க...

தங்க முகம் கறுத்து விட்டாள்..."

சந்தோஷ் பாடலின் வரிகளில் லயித்திருந்தான்... அவன் கண்களில்.. கண்ணீர் மல்க... பிரிந்து சென்ற வாசவியே நின்றாள்.

"அந்தக் கன்னி பிரிந்து சென்றாள்...

நான் ஜீவன் உருகி நின்றேன்...

சின்னதொரு காரணத்தால்...

சிறகடித்துப் பறந்து விட்டாள்..."

சந்தோஷ் உதடு கடித்து.. திருமண மண்டபத்தின் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் வரும் வழியில் விழி பதித்துக் காத்துக் கொண்டிருந்தான்.

"மீண்டும் வருவாள்.. நம்பினேன்...

அதோ... அவள் வரும் வழி..

தனியே... தன்னந் தனியே..."

வாசவி... திருமண மண்டபத்தின் வாசலில் தோன்றினாள். சுற்று முற்றும் பார்த்தபடி.. விரைவாகப் படிகளில் இறங்கி... தோட்டத்துப் பக்கம் வந்தாள். இருளின்

போர்வையில் மறைந்து நின்றவனை அவளால் பார்க்க முடியாமல் போக... அவள் திரும்ப முனையும்போது.. சந்தோஷ் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

# 33



வாசவி பயத்தில் அலறப் போனாள்... அவள் வாய் பொத்தித் தடுத்தவன்...

''ஸ்ஸ்... பயப்படாதே வாசவி.. நான்தான்..'' என்றான்.

''இப்படியா பயமுறுத்துவீங்க... சரி... ஏன் வரச் சொன்னீங்க.. சொல்லுங்க... நான் சீக்கிரம் போகணும்...''

''என்ன அவசரம்?''

''சரிதான்.. கேள்வியைப் பார்.. இப்படித் திருட்டுத் தனமாய் இருட்டுக்குள் சந்தித்தால்... யாராவது பார்த்து விட்டால்.. என்ன நினைப்பார்கள்?''

''மற்றவர்கள் நினைப்பைப் பற்றிய கவலையை விட்டு விட்டு.. முதலில் என் நினைப்பைப் பற்றிக் கவலைப்படு...''

''உங்கள் நினைப்பிற்கு என்ன...? மஞ்சள் தாவணி முதல்.. பச்சைச் சுடிதார் வரை.. ஊரிலிருக்கிற பெண்களையெல்லாம் நினைக்கின்ற நினைப்புத்தானே... உங்கள் நினைப்பு...''



''ஏய்ய்... விளையாட்டுக்கு ஒன்று சொன்னால்... அதையே பிடித்துக் கொண்டு தொங்குவதா...?''

''விளையாட்டா... எது விளையாட்டு...''

வாசவியின் குரல் மீண்டும் கம்ம... அவன் அவளை அணைத்துக் கொண்டு... அதட்டினான்.

''ச்சு.. சும்மா.. விளையாட்டுக்குச் சொன்னேன்டி... அதைப் போய்ப் பெரிதாய் நினைத்துக் கொண்டு வருத்தப்படலாமா...?''

''என்னது 'டீ' யா...?''

''ஆமாம்டி.. உன்னைத்தானே 'டீ' போட்டேன். அந்த மஞ்சள் தாவணியையா 'டீ ' போட்டேன்... நீயும்.. மற்றவர்களும் எனக்கு ஒன்றா..? நீ என் காதலி வாசவி... என் வருங்காலப் பெண்டாட்டி... என் உயிர்... என் வாழ்க்கை.. என் மூச்சு... இன்னும் வேறென்ன நான் சொல்ல..?''

வாசவியின் முகம் மலர்ந்தது.... அவள் அவன் மார்பில் சாய்ந்து.. சட்டைப் பொத்தான்களைத் திருக ஆரம்பித்தாள். அவள் இயல்பாகி விட்டதை உணர்ந்த சந்தோஷின் மனம் லேசாகியது.

''என்னடி செய்கிறாய்...?''

''அடேங்கப்பா.. வாடி.. போடின்னு அதிகாரம் கொடி கட்டிப் பறக்கிறதே...''

''அப்படித்தான் அதிகாரம் பண்ணுவேன்... அதுக்கு என்னாங்கிற இப்ப...?''

''ரௌடி...''

''ரௌடியா..? யார்.. நானா?''

''வேறு யார்..? நீங்கள்தான்..''

''இதைப் பாருடா... எல்லோரும் என்னைப் பக்கா ஜென்டில் மேன் என்று சொல்கிறாங்க...''

''பக்கா ஜென்டில்மேனா..? யார், நீங்களா..? சரியான பாக்தாத் திருடன்... எப்போது பார்த்தாலும் கண்ணடித்துக் கொண்டு... உவ்வே...''

''அப்படிக் குமட்டுகிறதாக்கும்.. நீ என்னைப் பார்த்துக் கண்ணடித்தபோது எனக்குக் குமட்டவில்லையே...''

வாசவி வெட்கத்துடன் அவனைக் கிள்ளினாள்.

''ராஸ்கல்...''

''ஆ... வலிக்குதுடி...''

''வலிக்கட்டும்... வாய்க் கொழுப்பு அதிகம் உங்களுக்கு...''

அவனை விட்டு விலகி அவள் செல்ல முனைய, அவன் அவளைப் போக விடாமல் தடுத்தான்.

''ஏன் பறக்கிறாய்..?''

''வேண்டாம் சந்தோஷ்.. இந்நேரத்தில்... நாம் அதிக நேரம் பேசிக் கொண்டிருப்பது தவறு...''

''நீ என்னுடையவள்தானே... என்னிடம் நீ பேசிக் கொண்டிருந்தால் தவறொன்றும் இல்லை...''

''சந்தோஷ்...''

வாசவி... அவன் எதிர்பாராத போது அவனுடைய கன்னத்தில் முத்தமிட்டு விட்டு.. சிட்டாய்ப் பறந்து விட்டாள்.



அவளது இதழ் தொட்ட இடத்தைப் பற்றியபடி... அசையாமல் நின்று கொண்டிருந்தான் சந்தோஷ்... அவனுடைய மனம் இனித்தது.. மெதுவாகச் செடி மறைவிலிருந்து வெளியே வந்து மண்டபத்திற்குள் போனான்.

''அம்மா... கிளம்பலாமா...''

ராமகிருஷ்ணனும்... ஜானகியும் எழுந்து அவன் பின்னால் வந்தார்கள்... அருகிலிருந்த ஹோட்டலில் அவர்களுக்கு ஒரு அறையைக் கொடுத்துவிட்டு... தன்னுடைய அறைக் கதவைத் திறந்து.. உள்ளே சென்றான் சந்தோஷ்... குளித்து முடித்து.. கைலியுடன்.. கட்டிலில் விழுந்து கண் மூடிய போது.. வெகு நாள்களுக்குப் பின்னால் அவனுக்கு நிம்மதியான உறக்கம் வந்தது.

அதிகாலையில் செல்போன் அலற விழித்துக் கொண்டான்.. அவனுடைய ஹோட்டலில் இருந்து பேசினார்கள்.. அவர்களுக்குச் சில உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு.. ரூம் சர்வீஸை அழைத்துக் காபி கொண்டு வரச் சொல்லிவிட்டு.. ராமகிருஷ்ணனின் அறைக்குப் போனான்.. அவர்களும் எழுந்து கொண்டார்கள்... காபி வந்ததும் குடித்துவிட்டுக் குளிக்கச் சென்றார்கள்.

காலை நேரத்தின் புத்துணர்வோடு.. காரில் ஏறிய சந்தோஷ்.. மண்டப வாசலில் காரை நிறுத்தி இறங்கினான். ராமகிருஷ்ணனும்.. ஜானகியும் வாசலில் நின்றிருந்த உறவினர்களை வரவேற்றுப் பேச ஆரம்பித்துவிட.. அவன் மட்டும் வரவேற்பில் நின்று கொண்டிருந்த வாசவியைப் பார்த்தபடி படியேறினான்.

# 34



வாசவி பட்டுப் புடவையில் அழகாக இருந்தாள். வருகின்றவர்களுக்குப் பன்னீர் தெளித்தபடி... சந்தோஷ் படியேறி வருவதையே கவனித்துக் கொண்டிருந்தாள்.. அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த சந்தோஷ்.. லேசாகக் கண் சிமிட்டினான்... அவன் அருகே வந்து சந்தனத்தில் விரல் வைக்கும் போது.. தாழ்ந்த குரலில் சீறினாள் வாசவி...

''காலங்கார்த்தாலேயே உங்க வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டிங்களா..?''

அவன் பதில் சொல்லாமல் புருவங்களை உயர்த்திச் சிரித்தான். அவனது சிரிப்பில் மயங்கி நின்று விட்டாள் வாசவி.

'என்னமாய் அழகாய்ச் சிரித்துத் தொலைக்கிறான்...'

''சிரித்து மயக்க வேண்டாம்.. மண்டபத்துக்குள்ளே போங்க...''

''யார் மயக்குவது..? நீ என்னை மயக்குகிறாயா..? இல்லை, நான் உன்னை மயக்குகிறேனா..?''

''நான் உங்களை மயக்குகிறேனா..? இது என்ன புதுப்பழி...''

''நேற்று வரை சின்னப் பெண் போல இருந்துவிட்டு... இன்றைக்குச் சேலை கட்டி.. பெரிய பெண் போல அசத்துகிறாயே...''



''போதும்... ரொம்பவும் ஜொள் விடாதீங்க...''

''ஜொள்ளா... ஹா... ஹா...''

அவர்கள் இருவரும் ரகசியக் குரலில் பேசிக் கொண்டிருப்பதை ராமகிருஷ்ணன் கவனித்து விட்டார்.

''ஜானகி! அங்கே பார்...'' என்றார்.

ஜானகி திரும்பிப் பார்த்தாள்.. அவள் முகமும் மாறியது.

''கவனித்தாயா...?''

''கவனித்தேன்...''

''புரிகின்றதா...?''

''உள்ளங்கை நெல்லிக் கனி போல் புரிகின்றது.''

''நம்ம பையன் முகத்தில் இத்தனை ஜொலிப்பை இதற்கு முன் நான் பார்த்ததே இல்லைடி...''

''பொண்ணும் அழகாகத்தான் இருக்கிறாள்... யாராலும் வளைக்க முடியாத சந்தோஷின் மனத்தையே வளைத்து.. அவனைச் சிறைப் பிடித்து விட்டாளே... கெட்டிக்காரி தான்...''

''நம்ம சுகந்தியின் நாத்தனார்தான்... அன்னியம்... அசலில்லை... காளிதாஸ் அறந்தாங்கியில் பெயர் பெற்ற வியாபாரி... பெண்ணின் வீடு எனக்குத் திருப்தியாக இருக்கிறது ஜானகி...''

''பெண் துறுதுறுன்னு இருக்கிறாள்... அழகாக இருக்கிறாள்... படித்திருக்கிறாள்... இத்தனைக்கும் மேலாக நம் சந்தோஷிற்கு அவளைப் பிடித்திருக்கிறது..

இதை விட வேறென்ன வேண்டும்... அவன் மனதுக்குப் பிடித்த ஒரு பெண் மருமகளாக நம் வீட்டிற்குள் நுழைந்து விட்டால் போதும்.. வேறென்ன வேண்டும்... சொல்லுங்க...''

அவர்கள் இருவரும்.. படியேறி வருவதைக் கவனித்த வாசவி... அவசரமாய் முகத்தைச் சரியாக வைத்துக் கொண்டாள்.. ஏன் இந்தத் திடீர் மாற்றம்... என்ற யோசனையுடன் திரும்பிப் பார்த்த சந்தோஷ்.. பெற்றோரைக் கண்டதும் புன்னகைத்தான்.

''என்னம்மா... வாசவி.. கல்யாண வேலைகள் எல்லாம் எப்படி நடக்குது......?'' ஜானகி பரிவுடன் விசாரித்தாள்.

''நன்றாக நடக்கிறது அத்தை..'' பவ்யமாய்ப் பதில் கூறிய வாசவி... அவர்கள் இருவரின் மீதும் பன்னீர் தெளித்தாள்.

''எனக்கு மட்டும் ஒரு சொட்டுத் தெளித்து விட்டு.. என் அப்பா... அம்மாவை மட்டும் பன்னீரிலேயே குளிக்க வைக்கிறாயே...இருந்தாலும் உனக்கு... இந்த ஓரவஞ்சனை ஆகாது வாசவி...'' சந்தோஷ் வம்புக்கு இழுத்தான்.

ராமகிருஷ்ணன்.. ஜானகியின் முன்னிலையில் அவன் வம்பிழுக்கவும்.. பதில் பேச முடியாமல் முகம் சிவந்தாள் வாசவி... அதை ரசித்துப் பார்த்தான் சந்தோஷ்.

ஜாடையாய் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்ட சந்தோஷின் பெற்றோர் உள்ளே போய் விட... சந்தோஷ் போகாமல் தேங்கி நின்றான்.



''உள்ளே போகும் உத்தேசமில்லையா...?''

''அங்கே போய் என்ன செய்வது..?''

''கல்யாணத்தைப் பார்ப்பது...''

''நான் உன்னைப் பார்க்கத்தானே இங்கே வந்தேன்... கல்யாணத்தை என் அப்பாவும்... அம்மாவும் பார்ப்பாங்க.. கவலையை விடு...''

''அத்தை.. மாமா முன்னால் என்னை வம்புக்கு இழுக்கறீங்களே... அவங்க என்ன நினைத்துக் கொள்வாங்க...?''

''மகன் பச்சைக் கொடி காட்டி விட்டான்னு நினைத்துக்குவாங்க...''

''அது எப்படி... அப்படி நினைப்பாங்களாம்..''

''உனக்கு என் பேரண்ட்ஸைப் பற்றித் தெரியாது.. அவங்க இரண்டு பேருக்கும் சூட்சும புத்தி அதிகம்...''

''உங்களைப் பெத்தவங்களாச்சே...''

''இது பாராட்டா... இல்லை, வேறு எதுவுமா...?''

''உங்களை என்ன வேண்டுமானாலும் சொல்லுவேன்... அத்தை... மாமாவைப் போய் எதுவும் சொல்வேனா... ஸோ... டெபனிட்டாய் அது பாராட்டுத்தான்..''

''கெட்டிக்காரிடி... நீ.. பிழைத்துக் கொள்வாய்...''

சந்தோஷ் வாசவியைக் காதலுடன் பார்க்க.... அவள் அவனைப் பார்த்து வெட்கப் புன்முறுவல் பூத்தாள். அதைத் தற்செயலாய்க் கவனித்த சுமதியின் முகம் கறுத்தது.

# 35



சுமதியின் கழுகு விழிகள்.. சந்தோஷின் முகத்திலிருந்த காதலையும்... வாசவியின் முகத்திலிருந்த வெட்கத்தையும் கணித்து விட்டன... அவளால் அவை கூறிய செய்தியை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

அவர்களது உறவு வட்டாரத்திலேயே பொருளாதார வசதியில் உயர்ந்த மிகப் பெரிய செல்வந்தன் என்று சந்தோஷ் பெயர் வாங்கியிருந்தான்.

சுமதியே தன் புகுந்த வீட்டில் எடுத்ததற்கெல்லாம் தான் மயில் வாகனத்தின் மகள் என்பதைக் கூறாமல்... ராமகிருஷ்ணனின் ஒன்றுவிட்ட தம்பியின் மகள்... சந்தோஷின் தங்கை... என்றுதான் பெருமையாகப் பீற்றிக் கொள்வாள்.

அப்படிப்பட்ட சந்தோஷின் மனதில் போயும்.. போயும்... இந்த வாயாடி வாசவி.. இடம் பிடிப்பதா...?

நினைக்கும்போதே நெஞ்சம் எரிவதைப் போல் இருந்தது சுமதிக்கு.

அவள் அவசரமாய் அவர்களின் அருகே சென்றாள்.

''என்ன அண்ணா... இங்கேயே நின்றுவிட்டாய்..?''

''சும்மா.. காற்று வாங்க வந்தேன்...''

''பார்த்து அண்ணா.. நான் காற்று வாங்கப் போனேன்... ஒரு கழுதை வாங்கி வந்தேனென்று.. எந்தக் கழு



தையையாவது பிடித்துக் கொண்டு வந்து விடப் போகிறாய்.. பத்திரம்...''

வாசவியைப் பார்த்துக் கொண்டே சுமதி இடக்காகக் கூற, வாசவிக்குச் 'சுரீ...' என்றது.. அவள் உடனே...

''சூ... சூ...'' என்றாள்.

''என்ன...'' என்று விசாரித்தான் சந்தோஷ்.

''மண்டபத்துக்குள்ளேயிருந்து... மனிதர்கள் வந்தால் பரவாயில்லை.. இவர்கள் சொல்வதைப் போல் நாலுகால் இனம் வந்துவிட்டால் என்ன செய்வது..? அதுதான் விரட்டினேன்...''

இப்போது வாசவி தன்னைத்தான் மறைமுகமாய்ப் பற்றுவது போல் 'சூ.. சூ..' என்றாள் என்பதைப் புரிந்து கொண்ட சுமதிக்கு ஆங்காரம் அதிகமானது.

''மண்டபத்துக்குள்.. நாலு கால் இனம் எது இருக்கிறது...? ஒருவேளை மேடையில் உட்கார்ந்திருப்பவங்களைச் சொல்கிறாயா... என்ன..?'' என்று வக்கணையாகக் கேட்டாள்.

சுமதி வரும்போது.. மேடையில் பிரசன்னா மட்டுமே அமர்ந்திருந்தான்... ஆனால் வாசவி மேடையைப் பார்த்தபோது சுகந்தி வந்து அமர்ந்து கொண்டிருந்தாள்.

''மேடையில் இருக்கும் உங்கள் தங்கையைச் சொல்கிறீங்களா.. சேச்சே.. உங்களோடு பிறந்ததினால்... அவங்களும் நாலு கால் இனமாய் ஆகிவிடுவாங்களா என்ன...?'' என்று வாசவி சொல்லவும் சந்தோஷ் சிரித்துவிட்டான்.

'எவ்வளவு தைரியம் இருந்தால்.. இவள் என்னையே கழுதையென்று சொல்வாள்..? அதைக் கேட்டு இவனும் சிரிக்கிறானே...? இவர்களது இந்தத் திமிரை அழிக்கா விட்டால் நான் சுமதி இல்லை...'

சுமதி வெஞ்சினம் கொண்டாள்.. எல்லாப் பெண்களையும் போல் சுமதியும்.. இளம் வயதுவரை நல்ல குணமுள்ள பெண்ணாகத்தான் இருந்தாள்.

என்று அவளுக்குத் திருமணம் ஆனதோ... அன்றிலிருந்து அவள் மனதிலிருந்த மென்மையான உணர்வுகள் மறைந்து.. வன்மை தலை தூக்கிவிட்டது.

புதிதாய்த் திருமணம் ஆன பெண்ணுக்குரிய அவளுடைய எதிர்பார்ப்புகள் பொசுங்கிப் போயின... காதலை எதிர் பார்த்துக் கழுத்தை நீட்டியவளுக்கு.. அது கானலாகிப் போனது... தனக்குக் கிடைக்காத காதலும்.. அன்பும்.. பாசமும்.. மற்றப் பெண்களுக்குக் கிடைக்கும் போது... அதைத் தாங்கிக் கொள்ளச் சுமதியினால் முடியவில்லை.

வாசவி... வரவேற்பை விட்டு நகர்ந்து திருமண மேடையை நோக்கிச் செல்ல... சந்தோஷ்.. சுமதி அங்கே நிற்பதை மறந்து.. அவசரமாய் அவளைத் தடுத்தான்.

''எங்கே போகிறாய்...?''

''கல்யாண மேடைக்கு...''

''ஏன்.. இங்கிருந்து பார்த்தால்.. கல்யாணம் தெரியாதா..?''

''ஊம்... நாத்தனார் முடிச்சை யார் போடுவாங்களாம்?''



அவர்களது பேச்சில் தொனித்த நெருக்கத்தைக் கவனித்துக் கொண்டுதான் சுமதி இருந்தாள். வாசவியின் பின்னாலேயே சந்தோஷ்.. சுமதி அங்கே நிற்பதையும் மறந்து சென்று விட, சுமதி... இந்த உறவை எப்படித் துண்டிப்பது என்ற யோசனையுடன்.. ஜானகியின் அருகே போய் அமர்ந்தாள்.

''பெரியம்மா...''

''என்ன சுமதி...''

''நம்ம சந்தோஷ் அண்ணனிற்குக் கோயம்புத்தூர் மில் ஓனரின் மகளைக் கொடுக்க நினைத்து.... ஆள் மேல் ஆள் அனுப்பினாங்களே... என்ன ஆச்சு...?''

''அந்த இடம் வேண்டாம்ன்னு சொல்லிவிட்டான் சந்தோஷ்...''

''இப்படியே அண்ணன் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தால் எப்படி பெரியம்மா...''

சுமதி... ஜானகியைக் கிளப்பி விடும் நோக்கத்துடன் பேசினாள். அதற்கு ஜானகி கூறிய பதிலைக் கேட்டு அவளுடைய முகம் அசிங்கமாகக் கோணியது...

## 36



''நீங்கள் ஒன்றைக் கவனித்தீங்களா பெரியம்மா...''

''எதைச் சொல்கிறாய்..?''

"இந்தச் சுகந்தியின் நாத்தனார் இருக்காளில்ல..."

"வாசவியையா சொல்கிறாய்...?"

"அந்த வாயாடியைத்தான் சொல்கிறேன்..."

"சேச்சே... அந்தப் பெண்ணை அப்படியெல்லாம் சொல்லாதே சுமதி..."

"என்ன பெரியம்மா... அந்தக் குட்டிக்குப் போய் நீங்க இவ்வளவு சப்போர்ட் பண்ணுகிறீங்க..."

"அந்தப் பெண்ணை நம்ம சந்தோஷுக்குப் பிடித்திருப்பது போல் தெரிகிறது..."

எதைப் பற்றிப் போட்டுக் கொடுக்க.. கனகாரியமாய் ஜானகியின் பக்கத்தில் வந்து சுமதி அமர்ந்தாளோ.. அதையே ஜானகி கூறவும்.. சுமதியின் வாய் அடைத்துக் கொண்டது.

"அதற்காக...?"

"அந்தப் பெண்ணை எங்களுக்கும் பிடித்திருக்கிறது... குடும்பம் வசதியானது.. நம் சுகந்தியின் நாத்தனார் என்ற கூடுதல் சொந்தம் வேறு... அந்தப் பெண்ணையே நம் சந்தோஷுக்குப் பேசி முடித்து விட்டால் என்ன... என்று நாங்கள் நினைக்கிறோம்..."

"வெறும் நினைப்புத்தானே பெரியம்மா..."

"முடிவே பண்ணிவிட்டோம் சுமதி..."

அதன் பின் நடந்த எதிலுமே சுமதிக்கு மனம் ஒட்டவில்லை. மணமக்களை நலங்கு வைக்க அழைத்தது...



மணமகன் சார்பாக வாசவியும்... மணமகள் சார்பாக சந்தோஷும்.. கேலிப் பேச்சில் ஈடுபட்டது... என்று அவள் மனதில் பதியவில்லை.

மதிய விருந்து முடிந்து... மணமக்கள் ஓய்வு எடுக்கச் சென்றனர்... வந்திருந்த பரிசுப் பொருள்களை.. பத்திரமாய் ஒரு அறையில் அடுக்கிப் பூட்டி விட்டுத் திரும்பிய வாசவியை மெலிதாய்ச் சீழ்க்கையடித்து நிறுத்தினான் சந்தோஷ்.

"படிப்புத்தான் வெளிநாட்டுப் படிப்பு... பண்ணுகிற காரியமெல்லாம் பக்கா லோக்கல்..." என்று நொடித்தாள் வாசவி.

"அப்படி என்னடி... லோக்கலைக் கண்டுவிட்டாய்...?" என்று பொய்யாய்க் கோபம் காட்டினான் சந்தோஷ்.

"இந்த வாடி.. போடிங்கிற தெனாவெட்டு எதாம்...?"

"இது உரிமைடி... என்னைத் தவிர வேறு எவனும் உன்னை இப்படிக் கூப்பிட முடியுமா? இல்லை, உன்னைத் தவிர வேறு யாரையும் நான் இப்படிக் கூப்பிட்டு விடுவேனா...?"

வாசவியின் மனதில் மழைச் சாரல் அடித்தது.. அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்... அவனைப் பார்த்து உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்... அதை வெகுவாக ரசித்துச் சிரித்தான் சந்தோஷ்.

"இந்தக் கண்ணடிப்பது... விசிலடிப்பது.. இதெல்லாம் லோக்கல் இல்லாமல் வேறு என்னவாம்...?"

"ஏய்... அதுவும் ஒரு இன்ட்ரெஸ்ட்தான்டி... அதையும் உன்னிடம் மட்டும்தான் நான் செய்ய முடியும்...?"

"பேசியே ஆளை மயக்கி விடுவீர்கள்..."

"நீ பேசவே வேண்டாம்.. ஒரு சின்னக் கண் சிமிட்டலிலேயே ஆளை மயக்கி விடுவாய்..."

வாசவிக்கு அவன் சொல்வதைக் கேட்டதும் வெட்கமாய்ப் போய் விட்டது.

"நான் அண்ணியைப் பார்த்துக் கண் சிமிட்டினேன் என்று.. உங்களிடம் சொன்னேனா இல்லையா...?"

"நீ கண் சிமிட்டியதை உன் அண்ணியா பார்த்தாள்...? நான்தானே பார்த்தேன்...?"

"உங்களை யார் என்னைப் பார்க்கச் சொன்னதாம்..."

வாசவி செல்லமாய்ச் சிணுங்கினாள்... சந்தோஷின் மனக்கண்ணில்... சுகந்தியின் செல்போனில் சிரித்துக் கொண்டிருந்த வாசவியின் புகைப்படம் தோன்றியது.

"ம்ம்.. என் தங்கையின் செல்போனில் இருந்த உன் போட்டோதான்.. என்னை நேரில் உன்னைப் பார்க்க இழுத்தது..."

"நிஜமாகவா..."

வாசவி ஆச்சர்யத்துடன் அவனை விழி விரியப் பார்த்தாள்.

"நிஜம்தான்டி... சுகந்தி மாப்பிள்ளை வீட்டாரைப் பார் அண்ணா என்று அவளுடைய செல்போனில் இருந்த



போட்டோவைக் காட்டினாள்.. நான் மாப்பிள்ளையை விட்டுவிட்டு மாப்பிள்ளையின் தங்கையை சைட் அடிக்க ஆரம்பித்து விட்டேன்..."

"சந்தோஷ்.."

"ஏன் வாசவி.. என்னை அத்தானென்று சொல்ல மாட்டாயா?"

அவள் வெட்கத்துடன் ஓடி விட்டாள்.. சந்தோஷ் தனக்குத்தானே... தலையை ஆட்டிச் சிரித்துக் கொண்டான்.

அன்று மாலை.. திருமண வரவேற்பு நடந்தது... அதில் மெல்லிசை நிகழ்ச்சியும் நடந்தது.. அந்த மெல்லிசைக் கச்சேரியில்... பாடும் திறமையுள்ளவர்கள் வந்து பாடலாம் என்று அறிவித்தார்கள்.. ரமாவும்.. கனகாவும்... வாசவியை மேடைக்குத் தள்ளிவிட... அவள் மேடையேறினாள்.

## 37



சந்தோஷ்.. மேடையேறிய வாசவியைப் பார்த்துக் கொண்டே அங்கிருந்த சேரில் அமர்ந்து.. கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.

'இவளுக்குப் பாடத் தெரியுமா..?' அவனுக்குள் எதிர்பார்ப்பு அலையடித்தது.

''அத்தான்... என் அத்தான்...

அவர்... என்னைத்தான்...

எப்படிச் சொல்வேனடி...''

வாசவி அவனைப் பார்த்து இதழோரம் சுழித்த பிரத்யேகமான ரகசியப் புன்னகை ஒன்றை உதிர்த்தபடி... பாட ஆரம்பித்தாள்.

''ஏனத்தான்... என்னைப் பாரத்தான்...

கேளத்தான்.. என்று சொல்லித்தான்..

சென்ற பெண்ணைத்தான்...

இழுத்தான்.. வளைத்தான்... அணைத்தான்...

எப்படிச் சொல்வேனடி...

அத்தான்... என் அத்தான்...''

ஒரே ஒரு முறை 'அத்தான்' என்று தன்னை அழைக்கச் சொல்லி அவன் கெஞ்சினான். இப்போதோ... அவள் வார்த்தைக்கு வார்த்தை... 'அத்தான்...' என்று அழைத்துப் பாடலையே பாடிவிட்டாள்.

காதல் ஒரு நதி போன்றது... அதைப் பார்ப்பதும் சுகம்... அதோடு பழகுவதும் சுகம்.. கால் நனைப்பதும் சுகம்.. கைகளால் அளைவதும் சுகம்.. அதில் மூழ்கித் திளைப்பதும் பரம சுகம்...

காதல் என்ற நதியின் ஒவ்வொரு சொட்டையும் உணர்வு பூர்வமாய் ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தான் சந்தோஷ்.



திருமண வரவேற்பு முடிந்து.. மணமக்களை... மணமகனின் இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டு.. சுகந்தியின் பெற்றோரும்... சந்தோஷின் பெற்றோரும் கிளம்பினார்கள்.

''நாங்கள் கிளம்புகிறோம், சம்பந்தி...''

''ம்ம்.. போய் விட்டு வாங்க...''

மயில்வாகனம்... காளிதாஸிடம் விடைபெற்றுக் கொண்டிருந்த போது.. பரிமளம்... சுகந்தியின் தலை கோதி ஆதரவாகக் கூறினாள்.

''சுமதி இங்கிருக்கிறாள் சுகந்தி.. பயப்படாதே...''

'அவள் இங்கிருப்பதற்குத்தான் நான் பயப்பட வேண்டும்...' என்று மனதிற்குள் அலுப்பாக நினைத்துக் கொண்டு வெளியே தன்மையாய்த் தலையாட்டினாள் சுகந்தி.

வாசலில் இருந்த கொய்யாமரத்திற்கு அடியில் நின்று கொண்டிருந்தான் சந்தோஷ்... வாசவியை வரச் சொல்லிச் சைகை செய்து விட்டுத்தான் வந்திருந்தான்.

மெலிதான கொலுசின் ஒலி காதுகளில் ஒலித்தது. அவசரமாய்த் திரும்பிப் பார்த்தான்... மல்லிகையின் நறுமணத்தைத் தன்னைச் சுற்றிப் பரப்பியபடி.. வாசவி வந்து நின்றாள்.

''ம்ஹா...'' மலரின் நறுமணத்தை ஆழ்ந்து முகர்ந்தபடி.. ரசித்தான் சந்தோஷ்.

''என்னமாய்... வாசனையாய் இழுக்கிறாய்டி...''

''ஏன் வரச் சொன்னீங்க...''

''ம்ம்... உன் அண்ணனும்.. அண்ணியும் முதலிரவு கொண்டாடப் போகிறாங்க.. நாம் எப்போது அதைக் கொண்டாடுவது என்று கேட்கத்தான்...''

வாசவி... தாழ்ந்திருந்த கொய்யாமரத்தின் கிளையொன்றில் சாய்ந்து நின்று கொண்டாள்.. சந்தோஷ் தாபத்துடன் அவளை அழைத்தான்.

''வாசவி...''

''ம்ம்...''

''என் கேள்விக்கு இன்னும் நீ பதில் சொல்லவே இல்லையே...''

''என் படிப்பு முடிய வேண்டாமா...?''

''அதற்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றனவே...''

''ஆமாம்...''

''அதுவரையில் யார் பொறுப்பது...?''

''அதற்காக...? படிப்பைப் பாதியில் நிறுத்த முடியுமா?''

''உன்னை யார் நிறுத்தச் சொன்னாங்க..? கல்யாணம் பண்ணிக் கொண்டு படி.. யார் வேண்டாம்ன்னு சொன்னது?''

''அடேங்கப்பா... ரொம்பத்தான் வேகம்...''

''ஏய்... என் பிரச்சனை எனக்குத்தான் தெரியும்..''

''அப்படி என்னவாம்.. மலை போலப் பிரச்சனை...?''



''உன் அண்ணன் கல்யாணத்தைச் சாக்காய் வைத்து இந்த இரண்டு நாளும்.. இணை பிரியாமல் இருந்து விட்டோம்... இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் காரில் ஏறிப் போய் விடுவேன்... அடுத்து எப்போது பார்க்க முடியுமோ... பார்த்தாலும் இந்த அளவுக்கு நெருக்கத்துடன் பேச முடியுமா..?''

சந்தோஷ் பேசிக் கொண்டே போக.. வாசவியிடம் இருந்து எந்த விதப் பதிலும் வரவில்லை....

''வாசவி... ஏய்... வாசவி...''

அவனது அழைப்பிற்கு... விம்மல் ஒலிதான் பதிலாக வந்தது.. சந்தோஷ் ஒரே எட்டில் அவளை அணுகி.. தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

## 38



வாசவி... சந்தோஷின் மார்புக்குள் ஏறக்குறைய முகத்தைப் புதைத்துக் கொண்டு.. சத்தமில்லாமல் குலுங்கி அழுது கொண்டு இருந்தாள். அவளது மெலிதான தேம்பல் ஒலி அவளது காதலின் அளவீட்டை உணர்த்த... சந்தோஷ் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல்... அவளது கூந்தலில் முகம் புதைத்தான்.

''ஏன் என் வாழ்வில் வந்தீங்க சந்தோஷ்...நேற்று வரை நான்.. நானாக இருந்தேனே.. இன்னும் கொஞ்ச நேரத்தில் நீங்கள் போய் விடுவீர்கள்.. எனக்கு என்

உயிரே உடலை விட்டுப் போனது போல இருக்குமே.. உயிரில்லாத வெறும் கூடாகத்தானே... நான் நடமாடுவேன்...''

''நான் மட்டும் எப்படியிருப்பேன்..? அப்படித்தானே இருப்பேன்...''

''என்னால் உங்களை விட்டுவிட்டு இருக்க முடியாது...''

''என்னாலும் உன்னைப் பிரிந்து இனி வாழ முடியாது.. சொல்... என்ன செய்யலாம்...? இப்போதே உள்ளே போய் உன் அப்பாவிடம் உன்னைப் பெண் கேட்டு விடவா..?''

''இப்போதா..?''

''இப்போதுதான்...''

''இன்றைக்குத்தானே அண்ணனுக்குக் கல்யாணம் முடிந்திருக்கிறது...?''

''நம் கல்யாணப் பேச்சும் இன்றைக்கே ஆரம்பிக்கட்டுமே...''

வாசவி பதில் சொல்லாமல்... அவனது முதுகைச் சுற்றித் தன் கரத்தால் வளைத்துக் கொண்டாள்... சற்று நேரம் இருவரும்.. பேசாமல்.. மௌனமாக.. ஒருவரின் அருகாமையில்.. மற்றொருவர் கரைந்து கொண்டிருந்தனர்.

மெல்ல... வாசவி... அவனிடமிருந்து விலகி நின்றாள்.



''போய் வாங்க சந்தோஷ்...''

''அத்தான்னு சொல்ல மாட்டாயா..?''

அவள் இதழ்களில் பிரிவுத் துயருடன் கூடிய வெட்கப் புன்னகை உதித்தது.

''போய் வாங்க அத்தான்...''

''அது.. கண்ணைத் துடைத்துக் கொள்.. நான் அடுத்த வாரமே.. அப்பா அம்மாவுடன் உன்னைப் பெண் கேட்டு வருகிறேன்...''

''ம்ம்ம்...''

''அதைச் சிரித்துக் கொண்டே சொல்லக் கூடாதா..?''

''ம்ம்ம்...''

''அழக்கூடாது வாசவி.. எங்கே.. என் முகத்தைப் பார்...''

''ம்ம்.. அழவில்லை...''

''நான் போய் உனக்கு போன் பண்ணுகிறேன்...''

''எப்படியாம்.. என் செல் நம்பர்தான் உங்களுக்குத் தெரியாதே...''

''சுகந்தி கொடுத்தாள்.''

''அதிலெல்லாம் ஆள் கில்லாடிதான்...''

''மற்றதிலும் கில்லாடிதான்.. நீ தெரிந்து கொள்ளத் தானே போகிறாய்...''

வாசவி துயரம் மறந்து... வெட்கத்துடன் அவனைக் கிள்ளினாள்.

''வாசவி...'' வீட்டுக்குள் இருந்து திலகம் அழைக்கும் குரல் கேட்டதும்... சட்டென்று அவன் கன்னத்தில் மின்னல் வேகத்தில் முத்தமிட்டு விட்டு வீட்டுக்குள் ஓடி மறைந்தாள்.

'இவளுக்குக் கால்கள் தரையில் பாவவே.. பாவாதா... நடப்பதே கிடையாது.. ஒரே ஓட்டம் தான்...'

அவளது வேகத்தை ரசித்தபடி.. காரில் ஏறிக் கொண்டான் சந்தோஷ்.

அன்று இரவு... பிரசன்னாவும்... சுகந்தியும் இன்பத்தில் ஆழ்ந்திருந்த போது... மூன்று ஜீவன்கள்... தூக்கத்தைத் தொலைத்து விட்டு... விடிய.. விடிய விழித்திருந்தன...

ஒன்று வாசவி.. மற்றொன்று சந்தோஷ்... மூன்றாவது ஜீவன்... சுமதி.

அவள் விடிய விடிய யோசித்துக் கொண்டிருந்தாள்.. முதல் நாள் இரவு.. அவள் கொய்யா மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்த போது சந்தோஷ் வரவும்...

'இவன் எதற்கு இந்நேரத்தில் இங்கே வருகிறான்...' என்ற சந்தேகத்துடன் பின் வாங்கி.. மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டாள்.

சற்று நேரத்தில் வாசவி அங்கே வந்தாள்.. அதற்குப் பின் நிகழ்ந்தவைகளை... சற்றும் லஜ்ஜையின்றி ஒட்டுக் கேட்டு.. ஒளிந்து பார்த்த சுமதியின் காலடியில் பூமி நழுவியது.

'ஒரு வாரத்திற்குள் பெண் கேட்டு வந்து விடுவானா..?'



சந்தோஷ் சொன்னதைச் செய்வான் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள்.

'இதை எப்படித் தடுப்பது...' என்ற யோசனையில் அவள் விடிய.. விடிய.. தூங்காமல் அந்த இரவைக் கழித்தாள்.

## 39



''ஹலோ... அக்கா.. நான் சுமதி பேசுகிறேன்...''

''சொல்லு சுமதி... எப்படியிருக்கிறாய்...''

''நான் நல்லாத்தான் இருக்கிறேன்... இங்கே அண்ணாவின் விசயம் நீ கேள்விப்பட்டாயா..?''

''தம்பியின் கல்யாண விசயம்தானே. கேள்விப்பட்டேன்... எனக்கு ரொம்பவும் சந்தோசமாய் இருக்கிறது...''

''என்ன சரஸ்வதியக்கா இப்படிச் சொல்கிறாய்.. நம் அண்ணனின் வசதிக்குச் சுகந்தியின் நாத்தனாரைப் போய்க் கட்டுவதா...?''

''உனக்குத் தெரியாது சுமதி.. சந்தோஷ் படிக்கும் போது ஆஷான்னு ஒரு பெண் அவன் பின்னால் சுற்றியிருக்கிறாள்...''

எல்லோரையும் தன்னைப் போல் நல்லவராக நினைத்து விடும் சரஸ்வதி.. தான் மட்டுமே அறிந்த

தம்பியின் அந்தரங்கத்தைச் சுமதியிடம் நம்பிச் சொல்லி விட்டாள்.

"இதுதான் சுமதி நடந்தது... அன்றிலிருந்து.. பெண்களை சந்தோஷ் வெறுக்க ஆரம்பித்துவிட்டான்.. வாசவியை அவன் இந்த அளவிற்குக் காதலிப்பதற்குக் காரணமே அவள் சந்தோஷின் பணத்தைப் பெரிதாக நினைக்கவேயில்லை என்பதுதான்..."

இது போதாதா சுமதிக்கு... வாசவியின் காதலைக் கலைக்க அவளுக்குத் துருப்புச் சீட்டுக் கிடைத்து விட்டது.

அவள் சந்தோஷிடம் பேசினாள்.

"அண்ணா... நீ வாசவியை செலக்ட் பண்ணியிருப்பதில் எனக்கொன்றும் வருத்தமில்லை. ஆனால் கல்யாண மண்டபத்தில் அவளுடைய சித்தி பெண்ணிடம் உன்னைப் பற்றி அவள் அளந்து கொண்டிருப்பதை என் காதால் கேட்டதால்தான் சொல்கிறேன்.. எதையும் தீர விசாரித்து.. யோசித்துச் செய்..."

"அவள் என்ன சொன்னாள்... நீ என்ன கேட்டாய்?"

"நீ பெரிய புளியங்கொம்பாம்.. உன்னை அவள் வளைத்து விட்டாளாம்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் கடைசி வரை அவள் கோடீஸ்வரியாய் வாழலாமாம்..."

சந்தோஷின் மனம் துணுக்குற்றது.



# 40



"வாசவி! உன்னுடன் நான் பேச வேண்டும்..."

சந்தோஷின் குரல் ஏன் இத்தனை இறுக்கத்துடன் ஒலிக்கிறது என்ற யோசனையுடன் வாசவி பதிலுக்கு வினவினாள்.

"எங்கே பார்ப்பது...?"

"உன் காலேஜ் வாசலில் நான் உன்னை பிக் அப் பண்ணிக் கொள்கிறேன்..."

"சரி..."

சந்தோஷின் கார் வந்ததும்... வாசவி.. தோழிகளிடமிருந்து பிரிந்து வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

"அந்த ரோஸிக்கு உங்கள் காரைப் பார்த்து... என் மேல் பொறாமை..."என்று வாசவி கூற.. சந்தோஷ் அவளைத் திரும்பிக் கூர்மையாகப் பார்த்தான்.

"அதில் உனக்குச் சந்தோசமா...?"

"பின்னே... சந்தோசம் வராதா? அந்த ரோஸி என்னிடம் எவ்வளவு அலட்டிக் கொள்வாள் தெரியுமா...?"

"ஸோ... அவள் முன்னால் அலட்டுவதில் உனக்கு ஒரு மகிழ்ச்சி.. அப்படித்தானே..."

"அப்படியேதான்..."

''ஸோ.. என் பணத்துக்காகத்தான் நீ என்னை விரும்பியிருக்கிறாய்... இல்லையா..''

வாசவி சட்டென்று சந்தோஷின் முகம் பார்த்தாள்.

''புரியவில்லை...''

''நீ என்னைக் காதலித்ததற்கு என்ன காரணம்... வாசவி...? நான் ஒரு கோடீஸ்வரன் என்பதுதானே காரணம்...''

''காரை நிறுத்துங்கள்...''

''எனக்குப் பதில் வேணும் வாசவி...''

''எனக்குப் பதில் சொல்லப் பிடிக்கவில்லை... ஏன்.. உங்களிடம் பேசக் கூட எனக்குப் பிடிக்கவில்லை...''

ஆளரவமற்ற சாலையில் சென்று கொண்டிருந்த காரைச் சரக்கென்று பிரேக் அடித்து... சாலையோரமாக நிறுத்தினான் சந்தோஷ்.. வாசவி கதவைத் திறக்க முயன்றாள்.. முடியவில்லை.

''அதைத் திறக்க முடியாது...உன் பிரண்ட்ஸ் பொறாமைப்படும்படி இருக்கும் இந்தக் கார் வெளிநாட்டுக் கார்.. நான் மனது வைத்தால்தான் நீ வெளியே இறங்க முடியும்....''

''உங்களுக்கு என்ன வேண்டும்...''

''உன் பதில்.. உன் பதில்தான் வேண்டும்...''

''என் மேல் இப்படியொரு உயர்ந்த அபிப்ராயத்தை வைத்துக் கொண்டு எப்படி என்னிடம் காதல் சொன்னீர்கள்..?''



''நீயும் அந்த ஆஷாவைப் போல் இருப்பாயென்று நான் கனவா கண்டேன்...? நீ என்னை ஏமாற்றிவிட்டாய் வாசவி...''

''யார் அந்த ஆஷா...?''

''என்னுடன் படித்தவள்...என்னிடம் காதல் சொன்னவள்...''

சந்தோஷ்.. தன் மனதில் பட்ட காயத்தை மறைக்காமல் கூறினான்... முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் பிரதிபலிக்க அதைக் கேட்டுக் கொண்டாள் வாசவி.

''ஏன்.. என்னிடமிருந்து இதை மறைத்தீர்கள்?''

''எதை...?''

''நீங்கள் ஏற்கெனவே ஒரு பெண்ணைக் காதலித்தவர் என்பதை...''

''ஏய்.. நான் ஒன்றும் அவளைக் காதலிக்கவில்லை...''

''ஆனால் அவளுடைய காதலை ஏற்றுக் கொண்டிங்க...''

''அதுதான் முடிந்து போன கதையாச்சே...''

''இல்லை... ஒருவேளை அந்த ஆஷா பணத்தின் மேல் ஆர்வம் காட்டாதவளாக இருந்திருந்தால்.. நீங்கள் அவளைத்தானே இப்போது நினைத்துக் கொண்டிருந்திருப்பீர்கள்.. அவளைத்தானே கல்யாணமும் பண்ணிக் கொள்வீர்கள்...''

''வாசவி...''

''நீங்கள் என்னைப் பற்றி என்ன அபிப்ராயம் வைத்திருந்தாலும் எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை...

உங்களிடம் எனக்குப் பிடித்த விசயம்.. நீங்கள் என் மேல் காட்டிய காதல்...''

# 41



வாசவியின் முகத்தில் சோகம் நிலவியது... அவள் கண்களில் இருந்து தாரை.. தாரையாய்க் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்து கொண்டிருந்தது... அதைத் துடைத்து விடக் கரம் நீட்டிய சந்தோஷ் வாசவியின் அனல் பார்வையைக் கண்டு... கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

''நீங்கள் என் மேல் வைத்த குற்றச்சாட்டு மிகவும் மோசமானது.. ஆனால்.. அதைக் கூட மறந்து.. மன்னித்து.. உங்களுக்கு விளக்கம் சொல்லியிருப்பேன்... என்னை உங்களுக்குப் புரிய வைத்திருப்பேன்.. நீங்கள் எனக்கு மட்டும் சொந்தமானவர் என்பது உண்மையாக இருந்திருந்தால்... ஆனால் அதுதான் பொய்த்துப் போய் விட்டதே...''

''வாசவி...''

''என் பெயரைக் கூடச் சொல்லாதீர்கள்.. அதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது..''

''ஏய்... என்ன நீ... என் கடந்த காலத்தை உன்னிடம் பகிர்ந்து கொண்டது தவறா...?''



''காலம் கடந்து பகிர்ந்து கொண்டது தவறு... சந்தோஷ்... அன்றைக்கே உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.. உங்கள் பணத்தைக் கண்டு எனக்குப் பயம்தான் என்று.. அதையும் தாண்டி எப்படி உங்களுடைய பணத்திற்காக நான் உங்களைக் காதலித்தேன் என்று நீங்கள் நினைத்தீர்கள்...?''

''அது.. வந்து சுமதி சொன்னாள்.. உன்னுடைய சித்தி பெண்ணிடம்... புளியங் கொம்பை வளைத்து விட்டேனென்று நீ பெருமை பேசிக் கொண்டிருந்ததாக...''

''ஓஹோ... சுமதிக்கும்... எனக்கும் ஆகாது என்பது உங்களுக்குத் தெரியுமா.. தெரியாதா...? நீங்கள் தெரிந்து கொள்ளாதது இன்னும் ஒன்று இருக்கிறது.. என் சித்தி மகளுக்கோ... இல்லை, மற்ற யாருக்கோ... நம் காதல் விசயம் தெரியவே தெரியாது... அப்படியே தெரிந்தாலும்.. இப்படிக் கேலி செய்து கொள்வது போல்.. காதல்... எங்கள் குடும்பத்தில் சகஜமான ஒன்று இல்லை... நீங்கள் புளியங்கொம்பாய் இருக்கலாம் சந்தோஷ்... ஆனால் உங்களை வளைத்துப் பிடிக்க... நான் முயற்சி பண்ணவேயில்லை... அது உங்களுக்கே நன்றாகத் தெரியும்... நான் உங்கள் பின்னால் சுற்றவில்லை... நீங்கள் தான் என் பின்னால் சுற்றினீர்கள்... நான் உங்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை... நீங்கள் பணக்காரர் என்பது உங்கள் மட்டுக்கு சந்தோஷ்... எனக்கு அது ஒரு விசயமே இல்லை...''

''ஐ ஆம் ஸாரி வாசவி... சுமதி சொன்ன பொய்யைக் கேட்டு.. என் புத்தி மழுங்கிவிட்டது...''

''பரவாயில்லை... என்னை என் வீட்டில் விட்டு விடுங்கள்...''

''வாசவி...''

''இனி நமக்குள் ஒன்றுமேயில்லை சந்தோஷ்...''

''ஒன்றுமேயில்லையா.. எங்கே.. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு... இரண்டு நாள்களில்... ஏழு ஜென் மத்தின் வாழ்வையும் வாழ்ந்து முடித்தோமே... அது பொய்யா?''

''பொய்தான் சந்தோஷ்... எல்லாமே பொய்தான்.. உங்கள் கண்களில் என்னைக் கண்டதும் தோன்றிய காதல் பொய்... உங்களைக் கண்டதும் நான் உயிர்த் தேனே... அந்த உயிர்ப்பு பொய்... எல்லாமே பொய்த்து விட்டது...''

வாசவி குமுறி அழுதாள்.. அவளைத் தொட்டுச் சமாதானப்படுத்த முடியாமல் சந்தோஷ் தவிப்புடன் காரைக் கிளப்பினான்.

அன்று அவன் முகம் பார்க்காமல் பிரிந்து சென்ற வாசவி... அதன் பின் அவன் போன் பேசினாலும்.. போனை எடுக்கவில்லை... நேரில் சந்தித்தாலும்... பார்க்காதவள் போல் விலகி நடந்தாள்.. ஆறு மாதங்கள் ஓடின... அவள் படிப்பை முடித்துவிட்டாள்... ஜானகி சந்தோஷிடம் திருமணப் பேச்சை எடுக்க அவன் பதில் சொல்லாமல் போய்விட்டான்.. வழக்கப்படி அவள் மகளிடம் புலம்ப...சரஸ்வதி அன்று இரவு தம்பியிடம் பேசினாள்.

''சொல் சந்தோஷ்... என்ன நடந்தது..?''

சந்தோஷ் துக்கத்துடன் சொன்னான்... தம்பியின் உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டாள் சரஸ்வதி.



# 42



''வாம்மா.. வா..'' திலகம் வரவேற்க... காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வந்தாள் சரஸ்வதி.

''அப்பா வீட்டிற்கு வந்தேன்.. சுகந்தியின் கல்யாணத் திற்கு என்னால் வர முடியவில்லை.... அதன் பின்னால் ஏழெட்டு மாதங்கள் ஓடிப் போய்விட்டன... பார்த்து விட்டுப் போக வந்தேன்...''

''அதற்கென்ன.. இது உங்கள் தங்கையின் வீடு...''

வழக்கமான நலம் விசாரித்தலுக்குப் பின்... சரஸ் வதியை அழைத்துக் கொண்டு மாடியேறினாள் சுகந்தி.

''நீ முதலிலேயே என்னிடம் பேசியிருக்க வேண்டும் அக்கா...''

''சுமதியின் மனதில் இந்த அளவுக்கு விசம் இருப்பது எனக்குத் தெரியாமல் போய் விட்டது சுகந்தி...''

''வாசவி... சிரிப்பெல்லாம் போய் ஒடுங்கி விட்டாள்... இதுதான் காரணமென்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே...''

''மனதிற்குள் காதலைப் புதைத்துக் கொண்டு வெளியில் சொல்லாமல் மறுகிக் கொண்டு இருக் கிறாள்...''

வாசவியின் அறைக்குள் சென்ற சுகந்தி...

''வாசவி.. இது என்னுடைய அக்கா சரஸ்வதி..''என்று அறிமுகப்படுத்திவிட்டு வெளியே போய்விட்டாள்.

அறைக் கதவை மூடி சரஸ்வதி தாழிடுவதைக் குழப்பத்துடன் பார்த்தாள் வாசவி.

''நான் சந்தோஷின் அக்கா...''என்று அவள் கூறியதும் வாசவிக்கு விளங்கி விட்டது.

''இதோ பார் வாசவி.. மனிதர்களில் சஞ்சலமில்லாத மனது உடைய மனிதர் யார் இருக்கிறார்கள்... நீயே சொல்லு.. ஆஷாவை சந்தோஷ் நினைத்தது தவறுதான்.. சரி.. இப்போது உன் கல்யாணப் பேச்சை உன் வீட்டில் ஆரம்பித்து விட்டார்கள்.. சந்தோஷை மறந்து.. இன்னொருவனை உன்னால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியுமா..?''

வாசவியின் உடலில் ஒரு அதிர்வு ஏற்பட்டது.

''சந்தோஷினால் முடியாது என்று சொல்லி விட்டான்... இதிலிருந்து உனக்கு அவன் மனது புரியவில்லையா வாசவி? ஆஷாவை உண்மையிலேயே அவன் காதலித்திருந்தால்.. அவளை மறந்து உன்னை அவன் நினைத்திருப்பானா? அப்படி உண்மையாய் உன்னை அவன் காதலிப்பதால்தான் உன்னை மறந்து இன்னொருத்தியை நினைக்க அவனால் முடியவில்லை... ஆஷாவின் தவறை அவன் மன்னிக்கவில்லை... உன்னிடம் அவன் தவறு கண்ட போதும்.. உன்னைத் தேடி வந்தான்.. உன்னிடம் விளக்கமும் கேட்டான்..



அவன் மனதில் நீ இருக்கிறாய் வாசவி... நீ மட்டும்தான் இருக்கிறாய்...''

அதுவரை தன் மனதில் தானே சிறைப்பட்டிருந்த வாசவி.. மனச் சிறையிலிருந்து வெளியே வந்து குலுங்கி அழுதாள்.

''அழாதே வாசவி.. கல்யாண ஏற்பாட்டை ஆரம்பிக்கவா...''

''ம்ம்...''

சுமதி என்னதான் பாடுபட்டு.. பொய் சொல்லி சந்தோஷைத் தூண்டி விட்டுப் பார்த்தும்.. சந்தோஷ்.. வாசவியின் திருமணம் நடந்தே விட்டது.

அவள் வயிற்றெரிச்சலுடன் திருமணத்தில் கலந்து கொள்ளாமல் பொய்க் காரணம் கூறி வீட்டில் இருந்து கொண்டாள்.

கணவன் என்ற உரிமையுடன் தனிமையில் அவளைச் சந்திக்கும் வரை.. அவளிடம் பேசவோ.. நெருங்கவோ.. முயற்சி செய்யாத சந்தோஷ்... கழுத்தில் புது மஞ்சள் கயிறு மின்ன நின்று கொண்டிருந்தவளை.. உரிமையுடன் நெருங்கித் தொட்டான்.

''என்னைத் தொட வேண்டாம்...''

''அதை.. இனிமேல் நீ சொல்ல முடியாது...''

''ஏனாம்...''

''ஏன்னா.. இனி உன் உடலும்.. மனமும் உனக்குச் சொந்தமில்லை.. எனக்குச் சொந்தமானது...''

அவன் கரத்தினில் விருப்பத்துடன் அடங்கிய வாசவியின் மனம் அமைதி கொண்டது... அவள் நேசித்தாள்.. அந்த நேசத்தை மட்டும் நெஞ்சினில் சுமந்தாள்... உண்மையான நேசம்... என்றுமே ஜெயிக்கும்.. அவளது நேசமும் கடைசியில் ஜெயித்து விட்டது.